விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இலையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 05 ஞாயிற்றுக்கிழமை (17.02.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 060

பலத்த பாதுகாப்புக்கு மத்தியிலும்


## காணிகளை விடுவிக்கக்கோரி கேப்பாப்புலவில் போராட்டம்




15

## வடக்கின் அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துவேன்

### முல்லைத்தீவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதி



(பனிக்கன்குளம்)

வடக்கின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மிகவும் வேகமான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கிறோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்து ள்ளார்

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பயணம் மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 15

# போர்க்குற்ற விசாரணையின் பின்னரே அரசை மன்னிப்போம்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துக்கு நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பதிலடி



**(யாழ்ப்பாணம்) சர்வதேச உதவியுடன் போர்க் குற்ற விசாரணை நடத்தி இலங்கையில் நடந்தவை இனப்படுகொலையா என்பதை முதலில் அறிந்து கொண்ட பின்னரே இந்த அரசாங்கத்தை மன்னிப் போம் என தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் வட மாகாண முன்னாள் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.**

யாழ்.நல்லூரில் அமைந்துள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் அலுவலகத்தில் இளைஞர் அணி அமைப்பாளர்களுக்கான கூட்டம் நேற்று சனிக்கிழமை சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். 15

மன்னார் மனித புதைகுழி

## காபன் பரிசோதனை அறிக்கை வெளியாகியது

(மன்னார்)

மன்னார் மனித புதைகுழியில் மீட்கப்பட்ட மனித எச்சங்களின் காபன் பரிசோதனை அறிக்கை வெளியாகியுள்ளது. குறித்த அறிக்கை வெளியாகியுள்ளமையினை அகழ்வு 15

## புலிகள் காலத்தில் இருந்த சமத்துவம் இன்று இல்லை

### என்கிறார் அமைச்சர் மனோ

(வவுனியா)

பாரபட்சங்கள், தள்ளிவைப்புகள் எல்லாம் புலிகள் காலத்தில் இருக்கவில்லை. இன்று சமாதானம் வந்திருக்கின்றது என்கிறார்கள். சட்டத்தின் ஆட்சி வந்திருப்பதாக கூறுகின்றார்கள். ஆனால் அன்று இருந்த சமத்துவம் காணா 15

## வவுனியாவில் முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பிளவு பகுதியில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் வீட்டில் இருந்து முதியவர் ஒருவரின் சடலத்தினை பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர். சடலமாக மீட்கப்பட்ட நபர் 68 வயதுடைய கிருபாகரன் கோபாலகிருஸ்ணன் 15

நாகர்கோவில் பகுதியில்

## மூன்று குண்டுகள் மீட்கப்பட்டு அழிப்பு



(கரணவாய்)

நாகர்கோவில் பகுதியில் இருந்து மேலும் மூன்று குண்டுகள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.சில தினங்களிற்கு முன்னர் நாகர்கோவில் 16

## போர்க்குற்ற சாட்சிகளாக சாட்சியமளிக்கத் தயார்!

### ஜனநாயக போராளிகள் கட்சி

(யாழ்ப்பாணம்)

போர்க் குற்ற சாட்சிகளாக ஜனநாயக போராளிகள் கட்சி ஐ.நாவில் சாட்சியமளிக்க தயார் என தெரிவித்துள்ளனர். ஜனநாயக போராளிகள் கட்சியினரால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

போர்க் குற்றங்களோடு சம்பந்தப்பட்டவர்களை ஓர் சர்வதேசப் பொறிமுறையின் கீழ் விசாரிக்கும் ஏற்பாடொன்று செய்யப்பட்டால் இது வரையில் எமது மக்களுக்கான உயிர்த்தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களை செய்தவர்கள் என்ற வகையில் ஜனநாயகப் 04

## தற்போதைய அரசாங்கத்தினால் வினைத்திறனாக செயற்பட முடியாது

### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பயணிக்க முடியாது என்பதை விளங்கிக் கொண்டதாலேயே ஜனாதிபதி தன்னுடன் இணைந்து கொண்டதாக எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 16

## இராணுவம் போர்க்குற்றமிழைத்ததை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது!

### எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

10 வருடங்களின் பின்னர் இராணுவம் போர்க்குற்றமிழைத்ததை உத்தியோகபூர்வமாக ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது.

போரின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் இரா 15

## அமெ. - இலங்கைக்கிடையே பாதுகாப்பு குறித்து பேச்சு

அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையே பாதுகாப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதர் அலாய்னா பி.டெப்லிட்ஸ் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன ஆகியோர் நேற்று சனிக்கிழமை சந்தித்து கலந்துரையாடினர்.

குறித்த சந்திப்பின் போதே பாதுகாப்பு உறவுகள் குறித்து இரு நாடுகளுக்கிடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

மேலும் இதன் போது. இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் பரஸ்பர உறவு தொடர்பான விஷயங்களைக் குறித்தும் விவாதங்கள் இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (3)

## வடமராட்சி பகுதியில் சுற்றுலாப் பயணியின் தொலைபேசி திருட்டு

(கரணவாய்)

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பெறுமதியான கைத்தொலைபேசி வழிப்பறி கொள்ளையர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை பிற்பகல் வடமராட்சி மந்திகை சிலையடி சந்திக்கு அருகாமையில் இச் சம்பவம் இடம்பெற்றது. 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## யாழ்.நகர் மத்தியில் காணிகள் உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நகர மத்தியில் ஸ்ரான்லி வீதி, பலாலி வீதி – பருத்தித்துறை வீதிகளை இணைக்கும் இடத்தில் காணிகள் விற்பனைக்கு உண்டு. Hotel அல்லது பாரிய வியாபார ஸ்தலம் அமைக்க உகந்தது.

(C-5541)

தொடர்புகளுக்கு

077 371 6532, 076 260 5169



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532



## ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்
### ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்

இருபாலை சந்திக்கு அண்மையில் (கிழக்கு வீதி)

திருமணத்தடை, புத்திரபாக்கியம் / புத்திரபாக்கியதடை, தொழில் வியா பாரம் தடைகள், வெளிநாட்டு பயணத்துக்கான பரிகாரம், முற்பிறப்பு தோஷங் கள் விலகல் போன்றவற்றுக்கான பரிகாரங்கள், வவுனியா பண்டாரிக் குளத்திலும்... (புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு – யாழ்ப்பாணம்) (திங்கள், செவ்வாய் – வவுனியா) (C-5542)

தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும்:-

076 328 7119



## வீடு விற்பனைக்கு

பொற்பதி உடையார் வீதி, கொக்குவில் கிழக்கில் 1 1/2 பரப்பு காணியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நான்கு பக்கம் மதில் சுவருடன் கூடிய நவீன வசதிகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. **தொடர்புகளுக்கு:**

076 600 3303


## கலந்துரையாடல்

வடபகுதியில் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்ட பொது மக்கள் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தின் கலந்துரையாடல் இன்று மாலை 3 மணிக்கு 16.கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் உள்ள செயலாளரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த 1996.97 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமல் போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தை சேர்ந்த அனைவரும் கலந்துகொள்ளுமாறும் துரித நட வடிக்கை எடுப்பது தொடர்பில் கலந்துரையாடப் படவுள்ளதாக அறிவித்துள்ள செயலாளர், மேலதிக விபரங்களுக்கு 0778155722 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளார். (3-9)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் நீராவி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வளர்ச்சிக்கு பெருந்தொண்டாற்றியவரும் சட்டத்துறையில் சிறந்து விளங்கியவருமாகிய



### சட்டத்தரணி
### அமரர் செல்லையா கோடீஸ்வரன்

அவர்கள் 15.02.2019 அன்று சிவபதம் அடைந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா நீராவி ஸ்ரீ ஜெயவீரகத்தி விநாயகரின் பாதங்களில் சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

**வை.இரகுநாத முதலியார்**

ஆலய பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளர்
நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம்


## Florance Nightingale School of Nursing
## புளோரன்ஸ் நைற்றிங்கேல்
### தாதியர் பயிற்சிப் பாடசாலை

தாதியர்களுக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வைத்தியசாலையில் வேலைவாய்ப்புக்கள் பெற்றுத் தரப்படும்.



2019ஆம் ஆண்டுக்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

முற்பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

தகைமைகள்
வயது : 17 - 35 வரை O/L, A/L
உயரம் : 125 CM மேற்பட்டவர்கள்
நிறை : 38kg - 75kg உட்பட்டவர்கள்

பாட முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

(C-5537)

தொடர்புகளுக்கு:-
0777186438, 0214928916, 0214338919

முகவரி:-
குஞ்சர் கடையடி, நெல்லியடி. (சுபாஸ் பேக்கரி மேல்தளம்)
கே.கே.எஸ்.றோட், மருதனார்மடம். (ஆஞ்சநேயர் கோவில் முன்பாக)


## மரண அறிவித்தல்



### திருமதி
### நாகம்மா தேவதாசன்
(குட்டி ஆச்சி)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07.10.1934 | 13.02.2019 |

யாழ்.புங்குடுதீவு 02ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கணேசபுரம், ஜெயந்தி நகர் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா தேவதாசன் (குட்டி ஆச்சி) அவர்கள் கடந்த 13.02.2019 புதன்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு புதல்வியும் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம் -பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தேவதாசனின் (குட்டியர்) (அரசினர் வைத்தியசாலை மருந்துக் கலவையாளர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற இளங்கோ மற்றும் வாசுகி, இளங்கீரன், பொன்குமரன், கலிங்கராணி, தமிழ்ச்செல்வன், சுரமஞ்சரி (ஆசிரியர் - கிளி/ஆரம்ப வித்தியாலயம்), தமிழ்ச்செல்வி ஆகியோரின் பாசமிகு தாயாரும் பூமணி, யோகராசா, கோகிலராணி, தனேஸ்வரி, யேசுராசா, தயாநிதி, பாலேந்திரராசா, காலஞ்சென்ற சண்முகநாதன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, பஞ்சலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் குழந்தைவேலு, மங்கையற்கரசி ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான தேவபாலன், குமாரசாமி, தவமணி மற்றும் தவரத்தினம், மகேஸ்வரி, மனோன்மணி, சீதாலட்சுமி, காலஞ்சென்ற அன்னலட்சுமி ஆகியோரின் அண்ணியாரும் சுகந்தினி, சுதர்சன், சுதர்ஜினி, சுபாஜினி, சதீஸ்குமார், நந்ததர்சினி, யுதர்ஷா, லக்சாயினி, அஜந்தன், தர்சிகா, லக்சிகா, டெனுசியா, கஜீபன், வர்மினி, லதுர்சிகா, மொறிஸ், ஜோஜினி, சாளினி, அபினன், நிதர்சனா, நிவேதிகன், கோவேந்தன், கோபிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (17.02.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று இறுதிக் கிரியைகளுக்காக திருநகர் இந்து மயானத்துக்கு 10.00 மணியளவில் பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-5536)

இல.83, ஜெயந்திநகர், கிளிநொச்சி.

தகவல்:- குடும்பத்தினர்
தொ.பே: 077 7384386, 077 2718640

## 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### திருமதி
### கனகாம்பிகை நவரட்ணம்

**அன்னை மடியில்: 19.06.1939**
**இறைவன் அடியில் 18.01.2019**

**(ஓய்வுநிலை பிரதி அதிபர்- யாழ்.நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை)**

கடந்த 18.01.2019 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தாயார் திருமதி கனகாம்பிகை நவரட்ணம் அவர்களது இறுதிநோய் நிலைமையின் பொழுது அன்னாருக்கு அன்புடன் மருத்துவப் பராமரிப்பு வழங்கிய யாழ்.போதனா வைத்தியசாலை 1ம் இலக்க விடுதியின் பொது வைத்திய நிபுணர் Dr. கௌரி செல்வரட்ணம் அவர்கள் உள்ளிட்ட மருத்துவ குழாத்தினர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

மேலும் அன்னாரது இறுதி நிகழ்வுகள் ஒழுங்குபடுத்துவதில் பங்கெடுத்துக் கொண்டவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் பல்வேறு வகையில் தங்கள் இரங்கல்களைத் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பதாகைகள், பிரசுரங்கள் வெளியிட்டும் மலர்வளையம் சாத்தியும் இரங்கல்களை தெரிவித்துக் கொண்டவர்களுக்கும் அன்னாரது நினைவஞ்சலிக் கூட்டத்தை ஒழுங்கு படுத்தியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது 31ஆம் நாள் நினைவஞ்சலியானது நாளை (18.02.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் அனைவரும் அவர்களது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

52, A.V. வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

(7554)

குடும்பத்தினர்
077 386 8580

# பிரதமர் ரணிலுக்கு எதிராக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவனயீர்ப்பு







(முல்லைத்தீவு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முல்லைத்தீவுக்கு நேற்று விஜயம் மேற்கொண்டநிலையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பதாகைகளுடன் வீதியில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதே வேளை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தை நோக்கிச் செல்ல முற்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை பொலிஸார் செல்லவிடாது தடுத்து நிறுத்தினர்.

தொடர் போராட்டங்களில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்டோரின் உறவுகள் இன்னமும் தமக்கு தீர்வு பெற்றுத் தராததையிட்டு அரசாங்கத்தை கண்டித்ததுடன் கொதித்துப் போன நிலையில் நேற்று முல்லைத்தீவில் வீதியில் இறங்கியுள்ளனர். (இ-9-281)

## வறுமை நிலை குறைவடைந்து வருகிறது

### ஜனாதிபதிக்கு உலக வங்கி பாராட்டு

(கொழும்பு)

வறுமையை ஒழிப்பதற்காக ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களால் இலங்கை கிராமிய மக்களிடையே வறுமை நிலை குறைவடைந்து வருவதாக உலக வங்கியின் தெற்காசிய வலயத்திற்கு பொறுப்பான உப தலைவர் கலாநிதி ஹார்ட்விங் ஸ்சபர் (Hartwig Schafer) தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள உலக வங்கியின் உப தலைவர் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை படிப்படியாக முன்னேற்றத்தை நோக்கி பயணிக்கும் நாடாக உலக வங்கி கண்டறிந்துள்ளது என்பதை தெரிவித்த உப தலைவர், தற்போது தனிநபரொருவரின் வருமானம் 4,000 டொலராக காணப்படுகின்றமை மகிழ்ச்சியளிப்பதாகவும் தெரிவித்தார்.

கிராமிய ரீதியில் வறுமையை ஒழித்து அம்மக்களை பொருளாதார ரீதியில் வலுப்படுத்துவதற்காக நடைமுறைப் படுத்தியிருக்கும் விசேட வேலைத்திட்டங்கள் அவ்வாறான வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது இலங்கையில் குளங்களை மறுசீரமைப்பதற்கும் பாரிய நீர்ப்பாசன வேலைத்திட்டங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குமாறு ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கு உபதலைவர் அவரது விருப்பத்தையும் தெரிவித்தார். 10 ஆயிரம் குளங்களை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்தின் கீழ் 2,400 குளங்களை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

வானிலை மற்றும் கால நிலை மாற்றங்களால் ஏற்படும் பாதிப்புக்களை குறைக்கும் வேலைத்திட்டங்களுக்கு உலக வங்கியால் இலங்கைக்கு தொடர்ச்சியாக வழங்கப்படும் ஒத்துழைப்பிற்கு ஜனாதிபதி தனது நன்றியை தெரிவித்தார்.

வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்படும் பிரதேசங்களிலிருந்து விரயமாக கடலுக்கு செல்லும் நீரை குழாய் மூலமாக உலர் வலயங்களுக்கு கொண்டுசெல்லும் வேலைத் திட்டங்களுக்கான ஒத்துழைப்பை வழங்குமாறு ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதாக தெரிவித்த உபதலைவர், அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான சாதக நிலைமைகள் தொடர்பில் துரிதமாக கண்டறியப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

இலங்கையில் பசுமை விவசாயம் மற்றும் சுற்றாடல் செயற்றிட்டங்களுக்கு பெறக்கூடியதாகவுள்ள நிதி தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், களனி கங்கையின் கரைகளை பலப்படுத்துவதனூடாக களனி கங்கை அண்மித்த பிரதேசங்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதற்கு உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் விசேட செயற்றிட்டமொன்றை தற்போது நடைமுறைப்படுத்தியிருப்பதுடன், அந்த வேலைத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குவதாகவும் உப தலைவர் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி உலக வங்கியால் வழங்கப்படும் சகல நிதி ஏற்பாடுகளையும் முறைகேடுகளின்றி, முறையாக குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக முதலீடு செய்யப்படும் என்று தான் உறுதியளிப்பதாக தெரிவித்தார்.

உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர். செனவிரத்ன, ஜனாதிபதியின் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பிலான ஆலோசகர் கலாநிதி சரத் ராஜபதிரண, தேசிய பொருளாதார சபையின் பொதுச்செயலாளர் பேராசிரியர் லலித் சமரகோன் உள்ளிட்ட குழுவினர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (இ-4)

## புடைவை விற்பனை நிலையத்தில் திருட்டு இருவருக்கு ஒருவருட கடூழியச்சிறை!

(கரணவாய்)

நெல்லியடி நகரிலுள்ள புடைவை விற்பனை நிலையத்தில் திருட்டில் ஈடுபட்ட இருவருக்கு தலா ஒருவருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப் பளித்தார் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி. நளினி சுபாகரன்.

கடந்த 2015.12.24 அன்று நெல்லியடி நகரில் புடைவை விற்பனை நிலையம் ஒன்றில் பொம்மையுடன் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த புடைவைகள் திருடப்பட்டிருந்தன.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்த அல்வாய் பகுதியைச் சேர்ந்த இருவரும் தொடர்ந்து விளக்கமறியலில் இருந்து வந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அவர்களுக்கான தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதில் இருவருக்கும் தலா ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையும் 1500 ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தார். (இ-60)

## பதவி மோகம் உள்ள சிலரை இணைக்கவே தேசிய அரசு

### பிரசன்ன ரணதுங்க விசனம்

(கொழும்பு)

நாட்டைப் பற்றி சிந்தித்து தீர்மானம் எடுக்கும் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவர முயற்சிக்கும் தேசிய அரசாங்க யோசனைக்கு ஆதரவு வழங்க மாட்டார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இல்லை. இதனைச் சமாளிப்பதற்காகவே பதவி ஆசையுள்ள சிலருக்கு அமைச்சுப் பதவியைக் கொடுத்து தம்முடன் இணைத்துக் கொள்ள முயற்சி இடம்பெறுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அடுத்த மாதமளவில் இந்த யோசனையை பாராளுமன்றத்துக்கு கொண்டுவரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு கொண்டு வந்தால், ஶ்ரீலங்கா பொது ஜன பெரமுன அதனைத் தோற்கடிக்கத் தயாராகவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-4)

## ஜனாதிபதியை கொல்லச் சதி விசாரணைகள் நிறைவு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் மீதான கொலைச் சூழ்ச்சி தொடர்பில் குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தினரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் நிறைவடைந்துள்ளன.

இது தொடர்பான விசாரணை அடுத்த வாரம் சட்டமா அதிபர் ஜயந்த ஜெயசூரியவிடம் கையளிக்கப்படவுள்ளதாக அந்தத் திணைக்களத்தின் சிரேஷ்ட பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, அடுத்தகட்ட சட்ட நடவடிக்கைகளை சட்டமா அதிபர் திணைக்களம் முன்னெடுக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைச் சூழ்ச்சி தொடர்பில் கடந்த செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி ஊழல் எதிர்ப்பு படையணியின் வழிநடத்தல் பணிப்பாளர் நாமல் குமார கருத்து வெளியிட்டிருந்தார்.

இதன் பின்னர், பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவிடம் வாக்குமூலம் வழங்கிய முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அத்துடன் இச் சம்பவம் தொடர்பில் இந்தியப் பிரஜை ஒருவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தனக்கது. (இ-4)

## அரசியலமைப்புச் சபை சர்ச்சை தீரவில்லை சபாநாயகருக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

அரசியலமைப்புச் சபையின் சர்ச்சைக்குரிய செயற்பாடுகள் சரி செய்யப்படாமைக்கு அதன் தலைவர் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலையீடாமையே காரணம் எனவும் எனவே, அவருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அடுத்த வாரம் இடம்பெறவுள்ள அதன் நாடாளுமன்றத் குழுக் கூட்டத்தின் போது இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிசிர ஜெயகொடி தெரிவித்துள்ளார்.



அரசியலமைப்புச் சபையால் ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமித்தல் உள்ளிட்ட விடயங்களின் போது பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்துவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## எந்தவொரு தேர்தல்களுக்கும் முகங்கொடுக்க ஐ.தே.க.தயார்

### அமைச்சர் கயந்த தெரிவிப்பு

(காலி)

எந்தவொரு தேர்தல்களுக்கும் முகங்கொடுக்க ஐக்கிய தேசியக் கட்சி தயார் என அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எந்தவொரு தேர்தலுக்கும் முகங்கொடுக்கத்தயார். நாங்கள் தேர்தல்களை கண்டு அஞ்சுவதில்லை.

அரசியல் கட்சி என்ற வகையில் தேர்தல்களை எதிர்கொள்ள ஆவலாக இருக்கின்றோம்.



சகல தேர்தல்களும் ஒரே தினத்தில் இடம்பெற்றாலும் அதனை எதிர் கொள் ளத் தயார் என்றும் அமைச்சர் கயந்த கருணா திலக்க தெரிவித்துளளார். (இ-4)

## வேலை ஆட்கள் தேவை

கொழும்பு 13இல் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஐஸ்கிறீம் மற்றும் யாழ்.சைவ உணவகத்துக்கு பின்வரும் வேலைக்கு ஆட்கள் தேவை.

**திறமைக்கு ஏற்ப தினசரி/வாரம்/மாதம் சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் கிடைக்கும்**

01. உணவு பரிமாறுவோர் (திறமைக்கு ஏற்ப 20000/=வரை)
02. பார்சல் கட்டுவோர் (திறமைக்கு ஏற்ப 25000/=வரை)
03. கிளீனிங் வேலை (திறமைக்கு ஏற்ப 25000/=வரை)
04. யாழ்முறைப்படி சமையல் செய்யத் தெரிந்த அனுபவமுள்ள சமையலாள் (திறமைக்கு ஏற்ப 60000/=வரை)
05. களஞ்சியப் பொறுப்பாளர் (திறமைக்கு ஏற்ப 25000/=வரை)
06. கொத்துரொட்டி மாஸ்டர் (திறமைக்கு ஏற்ப 45000/=வரை)

**உணவு தங்குமிடம் இலவசம். மாதாந்தம் 4 நாட்கள் விடுமுறையும் கிடைக்கும்.**

(C-5534)

தொடர்புகளுக்கு

**Sylo Ice Cream & Veg food Court**

149, New chetty Street, Colombo 13. Mobile: 077 771 0785


# போர்க்...

போராளிகளான நாம் எமது போராளிகளின் சார்பில் எந்தவொரு மன்றையும் எதிர்கொள்ள தயாராகவே இருக்கின்றோம் என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

அப்படியான நிலை ஒன்று ஏற்படுமிடத்து கடந்த 5 தசாப்தங்களாக தமிழினத் திற்காய் இழைக்கப்பட்ட பண்பாட்டியல் சிதைப்பு, பொருண்மிய ஆக்கிரமிப்பு, நீதிக்கு புறம்பான கொலைகள், வன்புணர்வு மற்றும் கொடூரமான இனப்படு கொலைக்கும் பொறுப்புக்கூற வேண்டிய நிலை சிங்கள அரசுக்கும் உண்டு என்ற யதார்த்தமான உண்மைய அனைவரும் ஏற்றுக கொள்ள வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.(3,9,101)

## மரண அறிவித்தல்



### சோமசுந்தரக் குருக்கள் மஹாதேவ சர்மா

பிறப்பு: 1930.12.28 இறப்பு: 2019.02.16

காரைநகரைப் பிறப்பிடமாகவும் மல்லாவியினை வசிப்பிடமாகவும் முள்ளிவாய்க்கால் மேற்கினை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரக் குருக்கள் மஹாதேவ சர்மா அவர்கள் நேற்று (16.02.2019) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (17.02.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது தற்போதைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் முள்ளிவாய்க்கால் மேற்கு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-5539)

முள்ளிவாய்க்கால்
077 480 3926

தகவல்:-
பூரணக் குருக்கள்

## மரண அறிவித்தல்

### திருமதி இராசஇலட்சுமி கந்தையா



கல்வயல் சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் சித்தி விநாயகர் வீதி நாவற்குழி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசஇலட்சுமி அவர்கள் நேற்று (16.02.2019) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பி கந்தையாவின் அன்பு மனைவியும் சிவநேசன் (தேசிய வீடமைப்பு அதிகார சபை - கிளிநொச்சி), வானதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் நளினியின் பாசமிகு மாமியாரும் பிரணவன் (கட்டட திணைக்களம்), சரவணன் (சுகாதார அலுவலகர்), சாம்பவி (மாணவி) ஆகியோரின் பேர்த்தியாரும் சஞ்சனாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2019) மாலை 3 மணியளவில் சித்திவிநாயகர் கோவிலடி நாவற்குழி மேற்கு நாவற்குழியில் உள்ள அவரின் வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி மேற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாவற்குழி
077 302 1251

(7559)

தகவல்:- க. சிவநேசன்
(தேசிய வீடமைப்பு அதிகார சபை)


# நீரிழிவு நோயா?

## அதிக உடற் பருமனா? இதோ

நீரிழிவு மற்றும் அதிக உடற்பருமனை குறைத்து ஆரோக்கியமாக வாழ மற்றும் ஆண்மை அதிகரிக்க, அல்சல் நோய், மனஅழுத்தம், மற்றும் தூக்கமின்மை குறைபாடு போன்றவற்றிற்காக நாம் வழ்ங்கிய வெற்றிகரமான எமது மருத்துவ பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைகளுடன் உங்களை மீண்டும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

**வாருங்கள் அழைத்து வாருங்கள்...**

**இலவச மருத்துவ பரிசோதனைகள் மற்றும் சிகிச்சை விளக்கங்கள்**

**04 வாரங்களில் தீர்வு, 100% இயற்கையானது**

**17ம் திகதி (ஞாயிற்றுக்கிழமை)**

கதிரமலை சிவன் கோயில், மணி மண்டபம்

**சுன்னாகம்**

நேரம் : மு.ப. 9.00 முதல் பி.ப. 7.00 மணி வரை

அழையுங்கள்

0770 811 880 / 0770 812 666

TEASTAR





# திருட்டு குற்றச்சாட்டில் கைது இருவருக்கு விளக்கமறியல்

(சாவகச்சேரி)

கடந்த ஐந்தாம் திகதி வரணி-இயற்றாலைப் பகுதியிலுள்ள வீடொன்றில் கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் கடந்த வியாழக்கிழமை கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இருவரை எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் நாவற்குழி மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த திருட்டுத் தொடர்பில் ஏற்கனவே இருவரை பொலிஸார் கைது செய்துள்ள நிலையில் மூன்றாவது சந்தேக நபரும் மற்றும் திருட்டுப் பொருட்களை கை மாற்றிய குற்றச்சாட்டில் இன்னொருவரும் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(இ-30)


## ஆடு விற்பனைக்கு

முல்லைத்தீவுப் பகுதியில் ஆடுகள் விற்பனைக்குண்டு.

(c-5520)

T.P. 077 168 1697

## வீடு தேவை

பருத்தித்துறையில், வியாபாரி மூலை, திக்கம், சக்கோட்டை, இன்பருட்டி பகுதியில் வீடு வாடகைக்கு அல்லது விலைக்குத் தேவை.

(c-5527)

T.P. 077 727 1697

## வைத்தியம்

நீண்டகால்ம் குணமாகாத நோயினால் அவதிப்படுகிறீர்களா? பயம் வேண்டாம், அதி உன்னத பக்க விளைவுகளற்ற அக்குபன்ச்சர் சிகிச்சை மூலம் நிரந்தரத்தீர்வு கிடைக்க எம்மிடம் வாருங்கள்.

நீரிழிவு, உடல் பருமன் குறைத்தல்/கூட்டுதல்,மூல வியாதி, சுவாச கஷ்டம், மூட்டு வியாதி, முள்ளந்தண்டு நசிவு/நோ, நரம்புத் தளர்ச்சி, சிறுநீரகப் பிரச்சினை, சரும நோய்கள், ஆண்மை குறைபாடு, குழந்தையின்மை, தலைமுடி உதிர்வு, கை/கால் விறைப்பு போன்ற எல்லா வகையான நோய்களுக்கும் குறைபாடுகளுக்கும் எம்மிடம் தீர்வு உண்டு. முன்பதிவு அவசியம்.

(ஞாயிறு தினங்களில் 6pm-8pm வரை இலவச ஆலோசனை)

தொடர்பு:- Shan's Health Care

T.P:- 077 035 7307, 077 407 2058 (7441)

255, காங்கேசன் துறை வீதி, கொக்குவில்.


# மணிவிழா வாழ்த்து



### வாழ்த்துரை

பாடசாலைச் செயற்பாட்டில் கற்பித்தற் செயற்பாடு மட்டுமன்றி நிர்வாகச் செயற்பாடும் அவசியமானதொன்றாகும். ஆவணங்களைப் பேணுதலும் விசேட பிரிவுகளை நிர்வகித்ததுடன் அதன் பயன்பாட்டை உறுதிப்படுத்தவும் கல்வி சாரா ஊழியரின் பணி இன்றியமையாததாகும்.

தனது சேவைக் காலத்தில் கடந்த ஏழு வருடங்கள் எமது பாடசாலையின் நூலக அபிவிருத்திக்காகவும் அலுவலகத்தில் நிதி ஆவணங்களைப் பேணவும் கோவைகளைப் பேணுவதற்கும் தனது சேவைக்காலத்தை அர்ப்பணித்தவர் திருமதி சரஸ்வதிதேவி ஞானசேகரம் ஆவார். புன்னகையுடன் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவருடனும் தனது பணியை நேரகாலம் பாராது ஆற்றியவர். 2019.02.16 ஆம் திகதி தனது அகவை அறுபதில் ஓய்வு பெறும் திருமதி சரஸ்வதிதேவி ஞானசேகரம் தனது குடும்பத்தவருடன் சீரும் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

திரு.ச.வேலழகன், அதிபர்,
யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.



### நூற்றாண்டு காலம் வாழ்க

திருமதி. சரஸ்வதிதேவி ஞானசேகரம் அவர் கள் யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நூலக உதவியாளராக நற்பணியாற்றி வந்து 16.02.2019 இல் மகிழ்வுடன் தனது ஓய்வுக் காலத்தைச் சந்திக்கின்றார்.

இவர் 05.08.1998 இல் யா/ புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரியில் தனது முதல் நியமனத்தைப் பெற்று சிறப்பாகப் பணியாற்றி வந்த காலத்தில் நான் இவரை நன்கு அறிவேன். இவர் நேர் மனப்பாங்கு கொண்ட சேவையாளர். கடவுள் பக்தி நிரம்பியவர். நிர்வாக உதவி, நிதிக் கணக்குகள் பேணுதல், ஆவணங்களைப் பேணுதல் ஆகிய பாடசாலை நிர்வாகச் செயற்பாடுகளை தனது பணிக்கு மேலதிகமாக பாடசாலைகளில் நிறைவேற்றி மகிழ்பவர், தொடர்பாடல் திறன் மிக்கவர்.

கற்றலுக்காக கற்றலில் ஈடுபடுபவர். மாணவர்களைத் தேடி வகுப்புக்களுக்குச் சென்று நூல்கள் சம்பந்தமாக கலந்துரையாடி பொருத்தமான நூல்களை மாணவர்களின் கல்வித் தேடல்களுக்கு வழங்குவதில் வல்லவர். இவரின் இக் கல்விப் பணியால் யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பல மாணவர்கள் பேரறிஞராக மாற்றப்பட்டுள்ளனர்.

ஓய்வுக் காலத்தில் இவர் பதினாறு பேறுகளும் பெற்று குடும்பத்தாருடன் நூறாண்டு காலம் மன அமைதியுடனும் மகிழ்வுடனும் வாழ வாழ்த்துகின்றேன்.

திரு. நா. சிவநேசன்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
கோட்டக் கல்வி அலுவலகம்,
கோப்பாய்.



## திருமதி சரஸ்வதிதேவி ஞானசேகரம் (நூலக உதவியாளர்)

சரஸ்வதிதேவி ஞானசேகரம்
கோப்பாய் வடக்கு பிறந்தது: 17.02.1959
ஆரம்ப கல்வி: யா/ பூதர்மடம் அ.த.க.பாடசாலை
5 ஆம் ஆண்டு: யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை
உயர்தரம்: யா/ அத்தியார் இந்துக் கல்லூரி (1979 Batch)
04.09.1980 திருமணம்
05.08.1998 யா/ புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி
14.03.2012 யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.



### குரு முதல்வரின் ஆசிச்செய்தி

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த திருமதி சரஸ்வதிதேவி ஞானசேகரம் அவர்கள் இன்று தனது 60 ஆவதுபிறந்த தினத்திலே அரச சேவையில் இரு ந்து ஓய்வுபெறும் வேளையில் அவருடைய ஓய்வுக் காலம் தனது குடும்பத்தாருடன் சேர்ந்து மகிழ்வுடன் கழித்து நீண்ட காலம் வாழ வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுபமஸ்து

சாகித்ய சிரோன்மணி
சிவஸ்ரீ. ப.முத்துக்குமாரசாமி குருக்கள்
ஆதீன பிரதமகுரு,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு- வடகோவை.



### ஓய்வுக் காலத்தில் மகிழ்வுடன் வாழ்க

கடந்த ஏழு ஆண்டுகளாக எமது பாடசாலையில் கடமையாற்றி 17.02.2019 இன்று ஓய்வுபெறும் திருமதி சரஸ்வதி ஞானசேகரம் அவர்கள் கல்விசாரா ஊழியராக இணைந்து பாடசாலையின் வரவு-செலவுகளை பதியும் வேலைகளை மிகச் சிறப்பாக கையாண்டு நிர்வாகம் திறமையாக இயங்குவதற்கு உதவியமை பாடசாலைச் சமூகத்தினால் மறக்கப்பட முடியாதவையாகும்.

தாம் செய்யும் வேலையை முழு மனதுடனும் அர்ப்பணிப்புடனும் வேலை செய்பவர்கள் எம் மத்தியில் அருகி வருவது சகிக்க முடியாமல் இருக்கின்றது.

ஆனால் திருமதி சரஸ்வதிதேவி ஞானசேகரம் அவர்கள் பாடசாலையின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு முழுமனதாக செயற்பட்டு தற்போது தனது 60 ஆவது வயதில் ஓய்வு பெறுகின்றார். திருமதி சரஸ்வதி ஞானசேகரம் அவர்கள் ஓய்வுக் காலத்தில் மகிழ்வுடனும் நீண்ட ஆயுளுடனும் வாழ வாழ்த்துகின்றேன்.

பா.சசிகுமார், தலைவர்
ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

**பாடசாலைச் சமூகம்,**
**யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி**

## இராசி பலன்

**மீனம்:** பிறருக்கு உதவ முற்படுவீர்கள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**மேடம்:** தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், மற்றவர்கள் வாங்கிய பொருட்களை பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும்.

**இடபம்:** நீண்ட நாளைய பிணக்குகளால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்:** தனவரவு திருப்திகரமாக அமையும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும்.

**கிரகநிலை:** செவ்; சந்; சூரி, புத; ராகு; சனி, கேது, சுக்; குரு

சந்திராஷ்டமம்
பூராடம்- உத்தராடம்
காலை-8.08 மணிக்கு
கடகம்- சந்

**17.02.2019**
மாசி 05, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 2.44 மணிவரை
புநர்பூசம் பிற்பகல் 2.14 மணிவரை
சுபநேரம் 9.33-11.03 மணிவரை
இராகுகாலம் 5.03-6.23 மணிவரை
பிரதோச விரதம்

வளவன்

**கடகம்:** பயணங்களால் பலனுண்டு, சாமர்த்தியமாகப் 'பேசி காரியங்களை சாதிப்பீர்கள், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள், போசன நன்மையுண்டு.

**மகரம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், திடீரெனக் கேட்கும் செய்தியால் திகைப்படைவீர்கள், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**தனுசு:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம்.

**விருச்சிகம்:** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம்.

**துலாம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**கன்னி:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், போசன சுகமுண்டு.

# மயூரதனுக்கு எதிராக அவதூறு துரித விசாரணைக்கு உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய நிபுணர் உ.மயூரதனுக்கு எதிராக இணையத்தளம் ஊடாக அவதூறு பரப்பப்பட்ட முறைப்பாடு தொடர்பில் இணையக் குற்றங்களை விசாரிக்கும் இலங்கை அவசர கணனி தயார்நிலைப் பிரிவிடம் விசாரணை அறிக்கையை குறுகிய காலப்பகுதிக்குள் கோருமாறு யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதவான் காயத்திரி சைலவன் உத்தரவிட்டார்.

தனதுசட்டமருத்துவசேவை தொடர்பில் தனக்கு எதிராக அவதூறு பரப்பும் வகையில் தொடர்ச்சியாக செய்திகளை வெளியிட்டு வந்த தமிழ் இணையத்தளம் ஒன்று பற்றி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய நிபுணர் உ. மயூரதன், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடந்த டிசெம்பர் மாதம் முறைப்பாடு செய்திருந்தார்.

அந்த முறைப்பாடு தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு பொலிஸார் காலதாமதப்படுத்துவதாக சட்ட வைத்திய நிபுணரால் குற்றஞ்சாட்டப்பட்டது. முறைப்பாடு தொடர்பில் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

முறைப்பாட்டாளரான சட்ட வைத்திய நிபுணர் உ.மயூரதன் மன்றில் முன்னிலையானார்.

முறைப்பாட்டாளரின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி விஸ்வலிங்கம் திருக்குமரன் ஆஜரானார்.

"முறைப்பாட்டாளர் சட்ட வைத்திய நிபுணராவார். அவரின் நிபுணத்துவ விசாரணையின் மூலம் மாணவி வித்தியா படுகொலை, யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் கொலை, விரிவுரையாளர் போதநாயகி உயிரிழப்பு, சுழிபுரம் பாடசாலை மாணவி கொலை வழக்கு எனப் பல வழக்குகளில் முக்கிய சாட்சிகள் கிடைக்கப்பெற்றன.

அவ்வாறான சட்ட வைத்திய நிபுணருக்கு அவதூறு பரப்பும் வகையில் அவர் மீதான தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக ஒரு இணையத்தளத்தில் செய்திகள் வெளியிட்டுள்ளன.

அதுதொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் பொலிஸார் விரைவான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டனர்.

எனவே முறைப்பாட்டாளருக்கு எதிராக அவதூறு பரப்பியவர் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதுதொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்த மன்று கட்டளையிடவேண்டும்" என்று சட்டத்தரணி விஸ்வலிங்கம் திருக்குமரன் சமர்ப்பணம் செய்தார்.

அதனை ஆராய்ந்த மன்று, அவதூறு பரப்பிய இணையத்தளம் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுத்து அதனை இயக்குபவர் தொடர்பில் தகவல்களுடன் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இணையக் குற்றங்களை விசாரிக்கும் இலங்கை அவசர கணனி தயார்நிலைப் பிரிவுக்கு உத்தரவிட்டார்.

இந்த விசாரணைகளை துரிதமாக குறுகிய காலத்துக்குள் நிறைவுறுத்த பொலிஸாருக்கு கட்டளையிட்ட மன்று, வழக்கை எதிர்வரும் 25ஆம் திகதிவரை ஒத்திவைத்தது. (இ-10)

# பனை வளத்தைப் பயனுள்ளதாக்க புதிய திட்டங்கள் அமுல்படுத்தப்படும்

## பனை அபிவிருத்திச்சபை தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பனை உற்பத்திப் பொருட்களை சர்வதேச ரீதியில் மேம்படுத்தவும் உற்பத்திகளை அதிகரிப்பதற்கும் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கைப் பனை அபி விருத்திச் சபையின் தலைவர் என். ராஜேந்திரம் தெரிவித்தார்.

கடந்த 11 ஆம் திகதி திங்கட்கிழமை சபையின் புதிய தலைவராகப் பொறுப்பேற்றுள்ள அவர் பின்வரும் திட்டங்களை துரிதகதியில் நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தார்.

அழிவடைந்து செல்லும் பனை வளத்தைப் பாதுகாக்கும் பொருட்டு மாதிரிப் பண்ணைகளை அமைக்கத் தீர்மானித்துள்ளதாகவும் இதற்காகப் பனை மீள் நடுகைத் திட்டத்தை செயற்படுத்தவுள்ளதாகத் தெரிவித்தார்.

பனை சார் உற்பத்திகளை அதிகரிக்கும். பொருட்டு சுய தொழில் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பனை உற்பத்திப் பொருட்களில் இருந்து கைப்பணப் பொருட்கள் செய்வதற்கு தொழில்நுட்ப ரீதியான பயிற்சிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

பாடசாலை மாணவர்களை தெளிவூட்டும் நடவடிக்கை பாடசாலைகள் தோறும் ஆரம்பிக்கப்படும். பனை உற்பத்தி உணவுப் பொருட்களின் மருத்துவக் குணம் தொடர்பிலும் விளக்கமளிக்கப்படுவதுடன் இவ் உற்பத்திப் பொருட்களான பனங்கட்டி, பனாட்டு, பனங்கிழங்கு, பனம்களி ஆகியவற்றின் மூலம் தயாரிக்கப்படும் உணவுப் பொருட்கள், குடிபானங்களை பாடசாலைச் சிற்றுண்டிச் சாலைகளில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

எம்து நாட்டு பனை உற்பத்திப் பொருட்களுக்கு ஐரோப்பிய நாடுகளில் சிறந்த சந்தை வாய்ப்புக் கிடைக்கின்ற போதும் தொழில்நுட்ப ரீதியான வசதி வாய்ப்புக்களை அதிகரிக்காமை சர்வதேச ரீதியில் போட்டி போடுவதற்குத் தடையாக உள்ளது.

இதற்காக ஆய்வு கூடங்களை அமைத்துத் தொழில்நுட்ப ரீதியான அணுகுமுறைகளைப் பின்பற்றி உற்பத்திப் பொருட்களின் தரங்களை பாதுகாக்க "திக்கம்" வசானவாவெனு விரைவில் மீள இயக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இளவாலை மணலடைப்பு ஸ்ரீ அண்ண மகேஸ்வரர் தேவஸ்தான பரிபாலன சபையின் விசேட பொதுச் சபைக் கூட்டம் இன்று 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஆலய மண்டபத்தில் தலைவர் சிவலிங்கம் தலைமையில் நடைபெறும். (இ-5)

# சத்தியமூர்த்தியின் நினைவேந்தல்

(யாழ்ப்பாணம்)

இறுதி யுத்த நடவடிக்கையின் போது ஊடகப்பணியில் உயிர் பறிக்கப்பட்ட ஊடகவியல்ளர் அமரர் பு.சத்தியமூர்த்தியின் (நாட்டுப்பற்றாளர்) 10ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதான வீதி, யாழ். நீதிமன்ற வளாகத்திற்கு அருகிலுள்ள படுகொலையான ஊடகவியலாளர்கள் நினைவுத் தூபியில் நினைவேந்தல் நிகழ்வும் அதனைத் தொடர்ந்து 3.30 இற்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் சத்தியமூர்த்தியின் நினைவுகளுடன் பேசுதல் எனும் நூல் வெளியீடும் நடைபெறும். (இ-4)

# ஒன்றுகூடலும் மதிப்பளித்தலும்





(கொடிகாமம்)

சாவகச்சேரி பிரதேச சபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் இடமாற்றல் மற்றும் ஓய்வு பெற்றுச் சென்றவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வும் கடந்த வியாழக்கிழமை சங்கத் தலைவர் முகுந்தினி கோடீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இடமாற்றம்பெற்றுச்சென்ற திருமதி ஆதவன் ஜெகனேஸ்வரி,மா.சிவசோதி, வி.பாலமனோகரன், ம.புவனதீபன், தனசீலன் ஆகியோரும் ஓய்வு பெற்றுச் சென்ற நா.தங்கவேல், க.சந்திரசேகரம்பிள்ளை ஆகியோரும் பிரதம விருந்தினரால் நினைவுப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (இ-10)

# சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கீரிமலை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறும்.

நாளை 18 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் தேர்த்திருவிழா நடைபெறும். (இ-5)




# மறைமாவட்ட இளையோர் பேரணி

(யாழ்ப்பாணம்)

"இறைதிட்டம் தேடும் இளையோர் பயணம்" என்ற தொனிப்பொருளில் யாழ். மறைமாவட்ட ரீதியான இளையோர் பேரணி இன்று ஞாயிற்றுக்கிழமை குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திலிருந்து பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகி புனித மரியன்னை பேராலயத்தை சென்றடைந்து அங்கு மாலை 5 மணிக்கு இளையோருக்கான சிறப்புத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இளையோர் ஆண்டில் நடைபெற்ற போட்டிகளுக்கான பரிசளிப்பும் நடைபெறும். (இ)

# அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்



(கொடிகாமம்)

சாவகச்சேரி பிரதேச சபையின் இந்த வருட சபை நிதி ஒதுக்கீட்டின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாக மக்களிடம் கருத்து கேட்கும் கூட்டங்களை சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் பிரதேச சபையின் உப அலுவலக பிரிவுகளில் நடத்தி வருகின்றார்.

அந்த வகையில் அண்மையில் மிருசுவில் உப அலுவலக பிரிவிற்குட்பட்ட 6 கிராம மட்ட அலுவலர்களுக்கும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளினூடான கலந்துரையாடல் கரம்பகம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் ஜே/329 கிராம உத்தியோகத்தர் பிரிவில் 9 வீதிகளும் ஜே/335 மிருசுவில் வடக்கில் 8 வீதிகளும் மிருசுவில் தெற்கு ஜே/336 மிருசுவில் தெற்கில் 6 வீதிகளும் ஜே/330 கரம்பகம் பிரிவில் 11 வீதிகளும் ஜே/333 எழுதுமட்டுவாழ் தெற்கில் 17 வீதிகளும் ஜே/334 எழுதுமட்டுவாழ் வடக்கில் 12 வீதிகளும் இனங் காணப்பட்டன. (இ-10)

# கல்வி விழிப்புணர்வுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுழிபுரம், காட்டுப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரை கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோருக்கும் வலிகாமம் கல்வி வலய முறைசாரா கல்விப் பிரிவினருக்கும் இடையிலான கல்வி விழிப்புணர்வு தொடர்பான கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் என்.சிவானந்தராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-5)



பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் ஒரு மில்லியன் ரூபா விசேட நிதி ஒதுக்கீட்டில் ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் புனரமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியின் திறப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், கௌரவ விருந்தினர்களாக மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் கமல்றாஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-கிஷோர்)

# போருக்கு முகம் கொடுத்த வடக்கு மக்கள் உளவியல் ரீதியில் நலிவடைந்துள்ளனர்

## மஹாநாயக்கர்களைச் சந்தித்த ஆளுநர் ராகவன் சுட்டிக்காட்டு



(கண்டி)

ஆளுநராக பதவியேற்றதன் பின்னர் முதன்முறையாக கண்டிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் பௌத்த மத பீடங்களின் மஹாநாயக்கர்களை நேற்று முன்தினம் முற்பகல் சந்தித்தார்.


அஸ்கிரியவிஹாரைக்கு விஜயம் செய்த ஆளுநர் அஸ்கிரியபீடத்தின் மஹாநாயகர் அதிசங்கைக்குரிய வரக்காகொட ஞானரத்ன தலைமைத்தேரரைச் சந்தித்ததுடன் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டார்.

அத்துடன்மல்வத்து விஹாரைக்கு விஜயம் செய்த ஆளுநர் மல்வத்து பீடத்தின் மஹாநாயக்கதேரர் அதிசங்கைக்குரிய திப்பெட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தலைமைத் தேரரை சந்தித்ததுடன் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டார்.

வட மாகாணத்தின் ஆளுநர்என்ற வகையில்தான் முன்னெடுக்கும் செயற்பாடுகள் தொடர்பில் மஹா நாயக்கர்களுக்கு இதன்போது விளக்கமளித்த ஆளுநர் போருக்கு முகம்கொடுத்த மக்கள் வாழும் மாகாணமாக வடமாகாணம் காணப்படுவதால் அவர்கள் அபிவிருத்தியிலும் பொருளாதார ரீதியிலும் உளவியல் ரீதியிலும் நலிவடைந்திருப்பதை சுட்டிக்காட்டியதுடன், அவர்களை இந்தப்பிரச்சினையிலிருந்து மீட்பதற்கான அடித்தளத்தை சரியான முறையில் நிறுவுவதற்கான வேலைத் திட்டங்களில் ஈடுபட்டு வருவதாகவும் அதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒத்துழைப்பும் அரசாங்கத்தின் ஒத்துழைப்பும் தாராளமாக கிடைப்பதாகவும் தெரிவித்தார்.

பௌத்த மத மஹாநாயக்கர்கள் என்ற ரீதியில் தான் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் எதிர்வரும் மார்ச் மாதம் 29 ஆம் திகதி வவுனியாவில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பௌத்த



மாநாடு தொடர்பிலும் மஹாநாயக்கர்களுக்கும் இதன்போது விளக்கமளித்தார்.

சிறந்த கல்விமான் ஒருவரையே வட மாகாணத்தின் ஆளுநராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளதாக குறிப்பிட்ட மஹாநாயக்கர்கள் அரசியல்வாதிகளிடமிருந்து வேறுபட்டு மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமையளித்து ஆளுநர் செயற்பட்டு வருவதை தாம் அறிந்துகொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.


இதற்கிடையில் வரலாற்று சிறப்புமிக்க கண்டி ஸ்ரீ தலதாமாளிகைக்கு விஜயம் செய்த ஆளுநர் புனித தந்ததாதுவினை தரிசித்து வழிபாட்டில் ஈடுபட்டதுடன் ஆசீர்வாதமும் பெற்றுக்கொண்டார்.

கண்டி தலதாமாளிகைக்கு விஜயம் மேற்கொண்ட ஆளுநரை கண்டி தலதாமாளிகையின் தியவதன நிலமே பிரதீப் நிலங்கதெல பண்டார வரவேற்றார்.

இந்த சந்திப்பில் ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், வட மாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-4)

# புத்தர் சிலை உடைப்பு ஒரு சம்பவம் அல்ல

## ராவணா பலய காட்டம்




(கொழும்பு)

அடிப்படை வாதிகளால் நாட்டில் நடைபெற்ற புத்தர் சிலை உடைப்பு நடவடிக்கைகள், இளைஞர்கள் சிலரால் முன்னெடுக்கப்பட்ட ஒரு சம்பவம் என அரசாங்கம் காட்ட முயற்சிக்கின்றது என ராவணா பலய அமைப்பின் பொதுச் செயலாளர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த சம்பவங்கள் சாதாரணமான ஒரு நிகழ்வு அல்ல. நீண்ட காலமாக பௌத்தர்களுக்கும், பௌத்த மதத்துக்கும் எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் சதி முயற்சியின் ஒரு பிரதிபலிப்பேயாகும் எனவும் தேரர் தெரிவித்தார்.

பொதுபல சேனாவின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் தேரர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார். (இ-4)

# கொழும்பு துறைமுகத்தில் ஈரான் நாட்டு யுத்த கப்பல்கள்



(கொழும்பு)

ஈரான் நாட்டு கடற் படைக்கு சொந்தமான 03 யுத்தக் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை நேற்று முன் தினம் வந்தடைந்துள்ளன. (இ-4)

# ஒத்திவைக்கப்பட்ட தண்டனையுடன் மதூஷ் குழுவினர் நாட்டை வந்தடைவர்

## சட்டத்தரணி உதுல் தகவல்



(டுபாய்)

பாதாள உலக குழு தலைவர் மாகந்துரே மதூஷ்டன் டுபாயில் கைதான பாடகர் அமல் பெரேரா மற்றும் அவரது மகன் நதீமால் பெரேரா ஆகியோர் ஒத்தி வைக்கப்பட்ட தண்டனையுடன்நாட்டை வந்தடைவார்கள் என சட்டத்தரணி உதுல் பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

குறித்த நபர்கள் இம் மாதம் 27 ஆம் திகதி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

அத்துடன் பயங்கரவாத தடுப்பு பிரிவின் முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவுடன் தாம் எந்தவித தொடர்புகளையும் கொண்டிருக்கவில்லை என அமல் பெரேரா தெரிவித்ததாக சட்டத்தரணி உதுல் பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

நாடு திரும்பியதும் அது தொடர்பான விளக்கங்களை வழங்கவுள்ளதாகவும் அமல் பெரேரா கூறியதாக சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பாதாள உலக குழு தலைவர் மாகந்துரே மதூஷ் உள்ளிட்ட தரப்பினர் தொடர்பாக முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு உதவியளிப்பதற்காக விசாரணை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு, தீர்க்கப்படாத குற்றச் செயல்களை விசாரணை செய்யும் பிரிவு, குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களம் மற்றும் பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரை உள்ளடக்கிய விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ள குறித்த அதிகாரிகள் குழுவில் ஐந்து அல்லது ஆறு பேர் அடங்கக் கூடும் என பொலிஸ் விஷேட அதிரடிப் படையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (இ-4)

# வெனிசுவெலா ஜனநாயகத்திற்கான கற்றல் களம்?

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் வெனிசுவெலா ஜனநாயகத்திற்கான கற்றல் களம்? என்ற தலைப்பிலான கலந்துரையாடல் நாளை மறுதினம் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (பௌர்ணமி தினம்) மாலை 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

க.தணிகாசலம் தலைமையில் இடம்பெறும் இக் கலந்துரையாடலில் கருத்துரைகளை க.வேல்தஞ்சன், ச.தனுஜன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

இக் கருத்துரைகளைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். அரசியல், பொருளாதார, சமூக, விஞ்ஞான, கலை, இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-7)


கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 ,இந்து
நட்சத்திரம்: பூராடம் 1
கி.பா: 83 செவ் 1 இல்
உயரம்:5'5"
தகைமை/தொழில்:O/L,கமம்
எதிர்பார்ப்பு:O/L , A/Lபடித்தவர்
தொ.இ: B/9318

பிறப்பு: 1990. இந்து
நட்சத்திரம்: சுவாதி 2
உயரம்:5'6"
தகைமை/தொழில் HND, தனியார் தொழில்
எதிர்பார்ப்பு:A/L ,பட்டதாரி
தொ.இ: B/9319

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்:சதயம்
செவ் 12 இல்
உயரம்:172cm
தகைமை/தொழில்:A/L, France
எதிர்பார்ப்பு: A/L,உள்நாடு,வெளிநாடு
தொ.இ: B/9320

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
கி.பா: செவ் 12 இல்
உயரம்:178cm
தகைமை/தொழில்:B.Sc,PHD, Post doctoral Researcher, Australia
எதிர்பார்ப்பு: Civil Engineer, B.Sc in IT, Accountant, B.Com (உள்நாடு,Australia)
தொ.இ: B/9321

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 1
கி.பா: 89 செவ் 1 இல்
உயரம்:164cm
தகைமை/தொழில்B.Sidda, விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு:தொழில் புரிபவர்
தொ.இ: G/9327


பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அனுசம் 3
கி.பா: 63 செவ் 7 இல்
உயரம்:156cm
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு:வெளிநாடு,விவாகரத்தும் ஏற்கப்படும்
தொ.இ: G/9328

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 13செவ் 2 இல்
உயரம்:5'1"
தகைமை/தொழில் : B.Sc, M.Sc, Country Co Ordinator
எதிர்பார்ப்பு:வெளிநாடு, Engineer, Doctor, Accountant Charted,IT Professional Other suitable jobs, Resarch, Medical field
தொ.இ: G/9330

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சதயம் 3
கி.பா: செவ் 8 இல்
உயரம்:170cm
தகைமை/தொழில்:B.Sc, M.Sc, ஆசிரியர்
எதிர்பார்ப்பு:பட்டதாரி,அரசதனியார் தொழில் உள்நாடு,வெளிநாடு
தொ.இ: G/9337

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# விடுதலைப்புலிகளின் தொப்பி, வெடிமருந்துகள் மீட்பு!



(அநுராதபுரம்)

அநுராதபுர நகர சபை குப்பை சேகரிக்கும் மையத்தின் அருகாமையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இலட்சினை பொறிக்கப்பட்ட தொப்பிகள் மற்றும் வெடிமருந்துகள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம்மாலை குப்பையைச் சுத்தம் செய்யும் தொழிலாளர்களுக்கு, குறித்த தொப்பி மற்றும் வெடிமருந்துகள் கிடைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் அநுராதபுர நகர சபை சுகாதார நிர்வாகி ஒருவர் வழங்கிய தகவலுக்கமைய, பொலிஸ் அதிகாரிகள் அங்கு சென்று மீட்கப்பட்ட பொருட்களை விசாரணைக்காக அநுராதபுரம் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இரகசியமான முறையில் குறித்த பொருட்களை வைத்திருந்த நபர் ஒருவர், இவ்வாறு குப்பைப் பகுதியில் வீசிச் சென்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்ட அநுராதபுரம் பொலிஸ் நிலைய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## மதமாற்றச் சட்டம் கொண்டு வந்து

# சைவத் தமிழ் கலாசார எழுச்சிக்கு உதவுமாறு அமைச்சர் மனோ கணேசனிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் மதம் மாற்றச் சட்டம் கொண்டு வர வேண்டும் என இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசனிடம் கோரிக்கை விடுத்த இலங்கை முதலுதவிச்சங்க இந்து சமய தொண்டர் சபையினர் சைவத் தமிழ் கலாசார எழுச்சிக்கு உதவுமாறு பல்வேறு கோரிக்கை அடங்கிய மகஜரையும் கையளித்துள்ளனர்.

அமைச்சருக்கும் இலங்கை முதலுதவிச்சங்க இந்து சமய தொண்டர் சபையினருக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன் போதே மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளனர். மேலும் அவர்களது கோரிக்கையில்,

ஈழத்தில் இருக்கின்ற புராதன பஞ்ச ஈச்சரங்களை எமது வரலாற்றின் தனித்துவத்தை பேணும் வகையில் அவ்வாலயங்களை புனித பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தல் வேண்டும்.

ஈழத்தின் நுவரெலியாவில் புராதன காலந் தொட்டு சிவனொளிபாதமலை என்ற பெயருடன் விளங்கிய அந்த புனித மல்லக்கு இருந்த சிவனொளிபாதமலை என்ற பெயர்ப்பலகையை மாற்றி கௌதம புத்தபகவானின் பாதஸ்தானம் என்று எழுதப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடானது மத,இன நல்லுறவுக்கு பங்கமென்ற வகையிலும் பாரம்பரியமாக அழைத்து வந்த சிவனொளிபாதமலை என்ற பெயரை மீண்டும் வைக்க வேண்டும்.

திருகோணமலையில் புராதன கண்ணியா வெந்நீரூற்று புனித பிரதேசத்தில் இன்று எமது புராதன வரலாறுகள் திட்டமிட்டு அழிக்கப்படுகின்ற நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. அத்தோடு அங்கிருந்த பிள்ளையார், சிவன் ஆல்யத்தையும் கட்டுவதற்கு பிரச்சினைகள் உள்ளன. அதனை நிவர்த்தி செய்து ஆலயம் கட்டுவதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

திருகோணமலை குச்சவெளியில் செம்பிமலையில் அமர்ந்திருக்கும் செம்பீஸ்வரர் சிவன் ஆலயம் கட்டுமானப் பணிக்கு கட்டடப் பொருட்கள் கொண்டு செல்ல செம்பிமலை அடிவாரத்திலுள்ள இராணுவத்தினர் தடையாகவுள்ளனர். இந்தத் தடையை நீக்தி புனரமைப்புக்கு உதவுதல் வேண்டும்.

வவுனியா நெடுங்கேணியில் வெடுக்கு நாறி சிவன் ஆலயத்தை புனரமைக்க மலைக்கு ஏறுவதற்கான ஏணிபொருத்தல், புனரமைப்பு பணிகளுக்கு தொல்பொருள் திணைக்களத்தினர் பொலிஸாரின் உதவியுடன் தடைவிதித்து வருகின்றனர். இத்தடையை நீக்கி உதவுதல் வேண்டும்.

எமது சைவ ஆலயங்களில் பெருந்திருவிழாக்களின் போது அநாவசியமாக வீண்விரையமாக்கப்படும் நிதியை நிறுத்துதல். சமயத்துடன் தொடர்பே இல்லாத சினிமா கச்சேரிகள், களியாட்ட நிகழ்வுகள் கோடிக்கணக்கான பணத்தை செலவு செய்து நடத்தப்படுகின்றன. இவ்வாறான செலவுகளை நிறுத்தி ஆலயச்சூழலிலுள்ள மக்களுக்காக வாழ்வாதார செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல். அறநெறிக் கல்விச் செயற்பாட்டை மேம்படுத்துதல், சைவத் தமிழ் புராதன கலாசார வரலாற்று நாடகங்கள், கலாசார நிகழ்வுகள் நடத்துதல்.

இதன் மூலம் இளம் சமூகம் வரலாறுகளை அறிந்துகொள்ளமுடியும். ஆன்மீகச் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் இளைய சமூகத்தினர் வழிதவறிப் போதல் தடைப்படும் ஆகவே இதற்கு ஆவண செய்தல் வேண்டும்.

பசுக்கள், இடபங்கள் கொலை செய்யப்படுவதை நாடளாவிய ரீதியில் தடை செய்வதற்கான முயற்சியை மேற்கொள்ளல், பொதுவாக உயிர் கொலையை எந்த சமயமும் ஏற்றுக் கொள்ளவில்லை. எமது நாடு புனித நாடு அந்தவகையில் 5000 ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட எமது மரபினை நிலை நிறுத்தி கொலைவெறி அற்ற உயிர்கள் மீது அன்பு கொண்ட சமூகத்தை உருவாக்குதல், இந்துக்குருமாருக்கு ஓய்வூதியம் வழங்குதல், பௌத்த சமயத்துக்கு சமமாக இந்து சமயம் மதிக்கப்படவேண்டும்.

காலங்காலமாக கடைப்பிடித்து வழிபட்டு வரும் மதத்தைப் பரப்புரைகள், பிரசாரங்கள், வதந்திகள் மூலம் கஷ்ரப்பட்ட குடும்பங்களை ஏமாற்றி மதமாற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எமது அழகான சைவத் தமிழ் கலாசாரத்துக்கு எதிர்மாறான கலாசாரத்தை புகுத்தி மதமாற்றம் கலாசாரமாற்றத்தினையும் ஏற்படுத்தி வருகின்றனர். இவ்வாறான நடவடிக்கைகள் இரகசியமான முறையில் பாடசாலைகளிலும் அரங்கேறுகின்றன.

ஒரு சில ஆசிரியர்கள் பிள்ளைகளின் குடும்ப நிலையை வைத்து சில தந்துரோபாய நடவடிக்கைகளைக் கையாண்டு மதமாற்றி வருகின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு மதமாற்றச் சட்டம் கொண்டு வர வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-9)

# மதூஷிடம் உதவி பெற்ற 100 அரசியல்வாதிகள்

## முத்துஹெட்டிகமகே தகவல்



(கொழும்பு)

நூற்றுக்கும் மேற்பட்ட அரசியல்வாதிகள் மாகந்துரே மதூஷிடம் உதவி பெற்றவர்கள் எனவும் அரசியல் மேடையில் ஏறுவதற்கு தான் வெட்கப்படுவதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்துஹெட்டிகமகே தெரிவித்தார்.

பண ரீதியிலும் வேறு வகையிலும் உதவி பெற்றவர்கள், அவருடன் அரசியல் மேடையில் ஏறியவர்கள், விமான நிலையம் வரை சென்றவர்கள், கடவுச் சீட்டில் முகம் மாற்றியவர்கள், டுபாய்க்குச் சென்று சந்தித்தவர்கள் என நூற்றுக்கும் மேற்பட்ட அரசியல்வாதிகள் உள்ளனர்.

மதூஷுடன் தொடர்புடையவர்கள் யார் என்ற விபரங்கள் வெகு விரைவில் தெரியவரும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-4)

# போதைப்பொருளை முற்றாக இல்லாதொழிக்க பாதுகாப்புப்பிரிவுக்கு ஜனாதிபதி விசேட அனுமதி

(கொழும்பு)

சட்டம் ஒழுங்கு அமைச்சுக்குப் பொறுப்பான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாதுகாப்புப் பிரிவினரின் நடவடிக்கைகளுக்கு வழங்கியுள்ள சுதந்திரம் தான் போதை ஒழிப்பு நடவடிக்கைகள் வெற்றி பெறுவதற்குக் காரணம் என பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

பாதுகாப்புப் பிரிவுக்கு ஜனாதிபதி உடனடித் தீர்மானம் எடுப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளார். இதனால், தான் போதைப் பொருளுடன் தொடர்புபட்டவர்களைக் கைது செய்யக் கூடியதாக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் போது ஜனாதிபதி இடையில் தலையீடு செய்வதில்லை. அழுத்தங்களைக் கொடுப்பதில்லை. போதைப் பொருளுடன் தொடர்புபட்ட அத்தனை பேரையும் கைது செய்து நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுக்கு அனுமதி வழங்கியுள்ளதாகவும் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்தார். (இ-4)

# ஞானசாரரை விடுவிப்பதில் பிரதமரின் மனைவி மைத்திரிக்கு என்ன பிரச்சினை

## பொதுபல சேனா கேள்வி



(கொழும்பு)

ஞானசார தேரருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவதற்கு எதிரான பிரேரணையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மனைவி மைத்திரி விக்ரமசிங்கவும் கையொப்பமிட்டிருந்ததாகவும் இதன் மூலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடு என்ன என்பதை நாட்டு மக்களுக்கு விளக்க முடியுமாக இருக்கும் எனவும் பொது பல சேனா அமைப்பின் தேசிய அமைப்பாளர் மாகல் கந்தே சுதந்த தேரர் தெரிவித்தார்.

இந்த நாட்டின் மாவட்ட செயலாளர் யார் என்பதைத் தீர்மானிப்பது அரச சார்பற்ற நிறுவனங்கள்.

இந்த நாட் டின் பிரதமர், ஞானசார தேரரின் விடுதலைக்கு எதிராக செயற்படுவது ஏன்? எனவும் தேரர் கேள்வி எழுப்பினார்.

நேற்று கொழும்பில் இடம் பெற்ற பொதுபல சேனாவின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலே தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இந்திய கைத்தொழில் கண்காட்சி பயிற்சிப்பட்டறை யாழில் ஆரம்பம்



யாழ்.இந்தியத் துணைத் தூதரகமானது வடமாகாண கைத்தொழில் திணைக்களத்துடனும் யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகத்துடனும் இணைந்து வட மாகாணத்தில் சிறுகைத்தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் முகமாக சிறுகைத்தொழில்களுக்கானதொழிற் கண்காட்சியும் பயிற்சிப் பட்டறையும் நேற்றும் இன்றும் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை ஏற்பாடுசெய்துள்ளது.

இந் நிகழ்வின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் நேற்று முற்பகல் 10 மணிமுதல் முற்பகல் 11.30 மணிவரை சிறப்பான முறையில் இடம் பெற்றது. இந்தியத் துணைத் தூதுவர் ச.பாலச்சந்திரன், வட மாகாணசபைஅவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், யாழ்.மாநகர சபை முதல்வர் இமானுவல் ஆனல்ட், ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன், இந்தியத் தூதரக அலுவலர்கள், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் தொழில் முனைவோர்கள் உட்பட 400 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். (இ-4)

## இலங்கையில் வருடந்தோறும்

# புற்றுநோய் காரணமாக 23 ஆயிரம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் புற்றுநோய் காரணமாக வருடாந்தம் 23 ஆயிரம் பேர் வரை பாதிக்கப்படுவதாக தேசிய புற்றுநோய் ஒழிப்பு வேலைத்திட்டத்தின் பணிப்பாளர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இதில் பெரும்பாலானவர்கள் மார்பக புற்று நோய் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# ராஜபக்ஷ குடும்பம் எமக்கு சவால் அல்ல

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ குடும்பம் எமக்கு சவால் அல்ல. அக்குடும்பத்தில் இருந்து கோத்தபாயவோ, பசிலோ அல்லது சமலோ யார் களமிறங்கினாலும் நாம் தோற்கடிப்போம்.

இனிமேல் நடக்கும் எந்தத் தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றி உறுதி என அக் கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி பல கட்சிகளை ஒன்றிணைத்துக் கொண்டு ஐக்கிய தேசிய முன்னணியாகத் தற்போது திகழ்கின்றது. இனிமேல் இந்தக் கூட்டணி ஜனநாயக தேசிய முன்னணியாக உருவெடுக்கும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ அல்லது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவோ எம்மை வீழ்த்தலாம் என்று கனவிலும்கூட இனிமேல் நினைக்கக்கூடாது. எங்கள் புலத்தை எவராலும் அசைக்க முடியாது. எங்கள் கூட்டணியை எவராலும் உடைக்கவும் முடியாது எனத் தெரிவித்துள்ளார். (இ-4)

# பால்மா நிறுவனங்களுக்கு தேவையான வகையில் சுகாதாரத்துறையை நடத்த முடியாது- ஜனாதிபதி

(பொலநறுவை)

பால்மா நிறுவனங்களுக்குத் தேவையான வகையில் நாட்டின் சுகாதாரத் துறையை நடத்த முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நேற்று முன்தினம் நடை பெற்ற நிகழ்வு ஒன்றில் வைத்து ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். நாம் பால்மா நிறுவனங்களுக்கு அடிமையாகியுள் ளோம், பால்மா நிறுவனங்களுக்கு தேவையானவகையில் நாட்டை வழிநடத்த முடியாது.

நாட்டின் சுகாதாரத்துறையை பால்மா நிறுவனங்கள் வழிநடத்த முடியாது. இது ஓர் பிழையான செயற்பாடாகும்.

பல்தேசிய நிறுவனங்களால் நாட்டில் இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகள் மக்களின் சுகாதாரத்திற்கு கேடு வி ளவிப்பவை என்ற எனது நிலைப்பாட்டில் மாற்றமில்லை.

உலகில் பால்மா இறக்குமதி செய்யும் நாடுகள் 10 முதல் 15 வரையிலேயே காணப்படுகின்றன. அவ்வாறான நாடுகளின் வரிசையிலேயே நாம் இடம்பெற்றுள்ளோம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.



இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் பால்மாவில் எவ்வித தீங்கான பொருட்களும் கிடையாது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளில் வேறு கொழுப்புக்களோ அல்லது எண்ணெய் வகைகளோ உள்ளடங்கவில்லை என சுகாதார அமைச்சின் உணவு ஆய்வகம் உறுதி செய்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட பால் வகைகளில் வேறு மிருகங்களின் கொழுப்புக் களோ, எண்ணெய்களோ உள்ளடங்கவில்லை என இலங்கை தர நிர்ணய சபையும் உறுதி செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-4)

# சமுத்திர பாதுகாப்பு தொடர்பில் இலங்கைக்கு ஜப்பான் உதவி

## நவீன கப்பலொன்றை வழங்க இணக்கம்

(கொழும்பு)

கரையோரப் பாதுகாப்பு மற்றும் சமுத்திர பாதுகாப்பு தொடர்பில் இலங்கைக்கு ஜப்பான் தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் என ஜப்பானிய பிரதமரின் தேசிய பாதுகாப்பிற்கான ஆலோசகரான கென்டாரோ சொனோரா (Kentaro Sonoura) தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள அவர் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பு ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

கரையோரப் பாதுகாப்பு மற்றும் சமுத்திர பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை மற்றும் ஜப்பானுக்குமிடையில் புதிய ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இதேவேளை சமுத்திர பாதுகாப்பு பிராந்திய கரையோர பாதுகாப்பு மாநாடு இவ்வருடம் இலங்கையில் நடைபெறவுள்ளதுடன், இது பற்றியும் கல ந்துரையாடப்பட்டது.

ஜனாதிபதியின் கோரிக்கையின் பேரில் கடற்படையினருக்கு கரையோரப் பாதுகாப்பு பயிற்சிகளை வழங்கும் நவீன கப்பலொன்றை இலங்கைக்கு வழங்க கென்டாரோ செனரேரா இணக்கம் தெரிவித்தார்.

ஜப்பான் இலங்கைக்கு வழங்கிவரும் தொடர்ச்சியான உதவிகளுக்கு நன்றியைத் தெரிவித்த ஜனாதிபதி, குறிப்பாக யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு வழங்கிய உதவிகளைப் பாராட்டினார்.

அத்துடன், சில பிரதேசங்களில் மேலும் பல இடங்களில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் அதற்கு உதவுமாறும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன, ஜப்பானுக்கான இலங்கை தூதுவர் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# தூக்கு மேடைக்கு செல்லப்போகும் 14 பேர் அடங்கிய பெயர் பட்டியல் ஜனாதிபதியிடம்

(கொழும்பு)

மரண தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் 14 பேருக்கு மரண தண்டனையை நடைமுறைப்படுத்த முடியுமென, சட்டமா அதிபரால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மரண தண்டனையை நடைமுறைப்படுத்தக்கூடிய குற்றவாளிகள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு ஜனாதிபதியால் நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் சிறைச்சாலைகள் திணைக்களத்தால் இது தொடர்பான தகவல்கள் அமைச்சிடம் கையளிக்கப்பட்டிருந்தன.

அந்தத் தகவல்கள், சட்டமா அதிபரிடம் அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் சட்டமா அதிபரின் பரிந்துரைகளுடன் அமைச்சால் கடந்த ஜனவரி மாதத்தில் ஜனாதிபதியிடம் அந்தப் பெயர்கள் குறித்த அறிக்கை கையளிக்கப்பட்டது.

போதைப்பொருள் தொடர்பான குற்றத்துக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட 48 பேர் சிறைத் தண்ட்னை அனுபவித்து வருகின்றனர். இவர்களில் 30 பேர் மேன்முறையீடுகளைச் செய்துள்ளனர்.

எஞ்சியுள்ள 18 பேரில் மூவருக்கு எவ்விதப் பிரச்சினைகளுமின்றி மரண தண்டனையை விதிக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய 15 பேர் தொடர்பான விபரங்கள், சட்டமா அதிபர் திணைக்களத்தால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியால் கடந்த நாடாளுமன்ற அமர்வின் போது அறிவிக்கப்பட்டது.

இந்தப் 15 பேரில் 11 பேருக்கு மரண தண்டனையை நிறைவேற்றுவதில் எவ்விதத் தடையும் இல்லையென, சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.

இதன்படி, எவ்விதத் தடங்களுமின்றி மரண தண்டனை நிறைவேற்றக்கூடிய 14 பேரின் பெயர்ப்பட்டியல் தயாராகியுள்ளது. இவர்களில், பாகிஸ்தான் பிரஜைகள் நால்வரும் இலங்கைப் பெண்ணொருவரும் அடங்குகின்றார்.

இவர்கள் 14 பேரும் வெலிக்கடை சிறைச்சாலைக் கைதிகள் என்றும் ஏனையவர்கள் போகம்பரை மற்றும் அங்குணுகொல பெலஸ்ஸ சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

18 பேரில் ஏனைய நால்வர் தொடர்பில் கோட்டை, நீர்கொழும்பு, நுகேகொடை நீதிமன்றங்களில் வேறு வழக்குகள் இடம்பெற்று வருகின்ற நிலையிலேயே அவர்களின் பெயர்கள், மரண தண்டனையை நிறைவேற்றவுள்ளவர்களின் பட்டியலில் இணைக்க முடியாதுள்ளதாக, சட்டமா அதிபர் திணைக்களத்தால், ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# சு.க, பெரமுன இணைந்து பயணிப்பதில் எந்த நெருக்கடியும் இல்லை - அமரவீர



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இணக்கத்தில் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் களமிறக்கப்படுவார். எவ்வாறு இருப்பினும் வெற்றிபெறக்கூடிய ஒருவரையே களமிறக்குவோம் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் களமிறக்கும் நபர் குறித்து கட்சிக்குள் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் அது குறித்து கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிகுள்ளோ அல்லது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குள்ளோ எந்தவித முரண்பாடுகளும் இல்லை.

இரண்டு கட்சிகளும் இணைந்து பயணிப்பதில் எந்த நெருக்கடியும் இல்லை. கட்சிகள் இரண்டாக இருந்தாலும்கூட நாம் அனைவருமே நீண்டகாலமாக ஒரு அணியாக செயற்பட்டவர்கள்.

ஆகவே எமக்குள் எந்த முரண்பாடுகளும் இல்லை. அதேபோல் ஜனாதிபதி தேர்தல் குறித்து கட்சிக்குள் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பொருத்தமான நபர் குறித்து ஆராயப்பட்டு வருகின்றது.

நாம் களமிறக்கும் நபர் நிச்சயமாக தேர்தலில் வெற்றி பெறக்கூடிய நபராக இருக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு சவால் கொடுக்கக்கூடிய ஒருவராக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# குழப்பங்களை விளைவிப்பவர்கள் நாடு குறித்து சிந்திக்க வேண்டும்

## அமைச்சர் சம்பிக்க அட்வைஸ்



(களனி)

நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கமாக நாம் நடவடிக்கைகள் எடுக்கும்போதெல்லாம் மதத் தலைவர்களும் ஒரு சில அரசியல் தல்லைவர்களுமே தீர்வுகளை குழப்புகின்றனர் எனத் தெரிவித்த அமைச்சர் சம்பிக்க ரணவக்க, நாட்டை மீட்டெடுக்க முடியாதுள்ளமைக்கு இதுவே காரணம் எனவும் குறிப்பிட்டார்.

களனி பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் இவ்வாறான குழப்பங்களை விளைவிப்பவர்கள் நாடு குறித்து சிந்துத்துச் செயற்பட வேண்டும். அதை விடுத்து அனைத்து வேலைத்திட்டங்களையும் தடுக்க ஏதேனும் குழப்பங்களை ஏற்படுத்துவதனால் மக்களே பிரச்சினைகளை சந்திக்க நேரிடும் எனவும் சம்பிக்க இதன்போது தெரிவித்தார் (இ-4)

# அரசின் வரப்பிரசாதங்களின்றி மகிந்த தரப்பால் வாழ முடியாது

## அமைச்சர் தலதா விமர்சனம்



(இரத்தினபுரி)

மகிந்த ராஜபக்ஷ தரப்பினரால் அரசாங்கத்தின் வரப் பிரசாதங் களின்றி வாழ முடியாது என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு விமர்சித்தார்.

"மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் மக்களுக்குச் சேவை செய்வதற்காக ஆட்சிக்கு வரவில்லை. இவர்களுக்கு அரசாங்கத்தின் வரப்பிரசாதங்களின்றி இருக்க முடியாது. ஆகையாலேயே ஆட்சியைக் கைப்பற்ற முயற்சிக்கின்றனர்.

கூட்டு எதிர்க்கட்சியில் உள்ளவர்கள், கடந்த இருபது வருடங்களாக அரசியலில் இருந்துள்ளபோதும், அவர்கள் வறிய மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரவில்லை.

மாறாக ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு தேவையான அரசியல் அதிகாரங்களை அதிகரிக்கும் செயற்பாடுகளையே முன்னெடுத்திருந்தனர்.

எவ்வாறாயினும், இருபது வருடங்களாக ஆட்சியில் இருந்து செய்ய அவர்களால் முடியாத விடங்களை கடந்த மூன்றாண்டு ஆட்சியில் தாம் செய்துள்ளதாக" அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# காருடன் மோ.சைக்கிள் மோதி விபத்து!




(தம்பலகாமம்)

திருகோணமலை தம்பலகாமத்தில் மோட்டார் சைக்கிளும் காரும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் 44 வயதுடைய கந்தளாய் பகுதியைச் சேர்ந்த ஏ.எச்.ஹேரத் என்பவரே பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-4)

# தணமல்வில துப்பாக்கிச்சூட்டு கொலை தொடர்பில் மூவர் கைது

(கொழும்பு)

தணமல்விலவில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக கொலைச் சம்பவம் தொடர்பில் 3 துப்பாக்கிகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தணமல்வில பிரதேசத்தில் வைத்து இரு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் மரணமடைந்திருந்ததோடு மற்றுமொருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் தணமல்வில பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளையடுத்து நேற்று முன்தினம் இரவு 12.30 மணியளவில் தணமல்வில பிரதேசத்தில் வைத்து சந்தேக நபர்களில் மூவர், மூன்று துப்பாக்கிகள் அதற்கான தோட்டாக்கள் இரண்டு மோட்டார் சைக்கிள்களுடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

குறித்த சந்தேகநபர்கள் 28,27,25 வயதுடைய தணமல்வில பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். (இ-4)

# கோத்தபாய ராஜபக்ஷவை காப்பாற்றும் ஜனாதிபதி

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைக் காப்பாற்றும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பத்தரமுல்ல-அகுரேகொட பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பாதுகாப்புப் படை தலைமையகம் குறித்த கொடுக்கல்-வாங்கல்களின் போது கோத்தபாய ராஜபக்ஷ மோசடி செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷவின் நேரடி உத்தரவின் அடிப்படையில் இந்தக் கொடுக்கல்-வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டதாக குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் கொடுக்கல்-வாங்கல் தொடர்பில் தகவல் அறிந்து கொள்ளும் சட்டத்தின் ஊடாக தகவல்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் இது தேசிய பாதுகாப்பு விவகாரம் தொடர்பிலானது என்ற காரணத்தால் தகவல்களை வழங்க முடியாது என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கட்டடத் திட்டம் தவிர்ந்த ஏனைய கொடுக்கல்- வாங்கல்கள் பற்றிய விபரங்களை வழ்ங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் அமைச்சரவைப் பத்திரமொன்றை கொண்டு வந்து அதன் ஊடாக தகவல்கள் வழங்கப்படுவதை நிறுத்தும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-4)

# போதைப்பொருள் வர்த்தக நடவடிக்கை பின்னணியில் அரசியல்வாதிகள் - கீதா

(கொழும்பு)

போதைப்பொருள் வர்த்தக நடவடிக்கைகளின் பின்னணியில் அரசியல்வாதிகளே உள்ளனர் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் இடம்பெற்று வரும் போதைப் பொருள் வர்த்தக நடவடிக்கைகளின் பின்னணியில் சில அரசியல்வாதிகள் இருக்கின்றார்கள்.

இது ஓர் ஆபத்தான நிலைமையாகும். போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பில் ஜனாதிபதி எடுத்து வரும் நடவடிக்கைகள் மகிழ்ச்சி அளிக்கின்றன.

போதைப் பொருள் வர்த்தகத்தின் பின்னணியில் அரசியல்வாதிகள் இருக்கின்றார்கள்.

இவ்வாறான ஓர் நிலைமையில் நாட்டை எவ்வாறு கட்டியெழுப்ப முடியும்.

சிலர் யாசகர்களைப் போன்று வந்து ஒன்றிரண்டு நாட்களில் செல்வந்தர்களாக மாறி விடுகின்றனர்.

போதைப் பொருள் காரணமாக அழிவடைந்து செல்வது எமது எதிர்கால சந்ததியினரேயாவர்.



பிள்ளைகளின் போதைப் பொருள் பயன்பாட்டினால் எத்தனை தாய்மார் கண்ணீர் சிந்துகின்றார்கள்.

எவ்வாறெனினும், போதைப் பொருள் ஒழிப்பு குறித்து ஜனாதிபதியின் நடவடிக்கைகள் வரவேற்கப்பட வேண்டியவை என கீதா குமாரசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)


# கரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலைய கட்டுமான பணியில் எந்த மோசடியும் இடம்பெறவில்லை

## துறைசார் அமைச்சு விளக்கம்

(கரவலப்பிட்டி)

கரவலப்பிட்டியவில் இயற்கை எரிவாயு மின் உற்பத்தி நிலைய கட்டுமானப் பணியில் எவ்வித மோசடி நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என மின்சக்தி, எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள மின்சக்தி, எரிசக்தி அமைச்சின் பேச்சாளர் சுலக்ஷனா ஜெயவர்த்தன இதனை தெரிவித்துள்ளார்.



மேலும் இந்த கட்டுமானப் பணிக்கான ஒப்பந்தம் சீன நிறுவனத்திற்கு அதிக விலையில் வழங்கப்பட்டிருப்பதாக வெளியான அறிக்கைகள் முற்றிலும் தவறானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கரவலப்பிட்டியவில் இயற்கை எரிவாயு மின் உற்பத்தி நிலைய கட்டுமானப் பணிக்கான ஒப்பந்தத்தை சீன நிறுவனத்துக்கு வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

மேலும் 350 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய இந்த மின் நிலையத்தைக் கட்டுவதற்கு கேள்விப்பத்திரத்தில் குறைந்த தொகைக்கு விண்ணப்பித்திருந்த உள்ளூர் நிறுவனம் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள மறுத்ததை அடுத்தே சீன நிறுவனத்துக்கு அது வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சீன நிறுவனம் குறிப்பிட்டுள்ள அதிகளவு தொகைக்கு இந்தக் கட்டுமானப் பணி முன்னெடுக்கப்பட்டால் அடுத்த 20 ஆண்டுகளில் 75 பில்லியன் ரூபாவை நாடு இழக்க நேரிடும் என்று இலங்கை மின்சார சபையின் பொறியாளர்கள் எச்சரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-4)

# கோத்தபாய ஐ.தே.கவுக்கு சவாலில்லை



(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டால் அவர் ஒரு போதும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சவாலாக இருக்கப்போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரைத் தேர்தல் அறிவிக்கப்பட்டால் உரிய நேரத்தில் அறிவிப்போம். அத்துடன் கோத்தபாய ராஜபக்ஷ ஒரு சிறந்த அதிகாரி என்றே அனைவருக்கும் தெரியும். ஆனால் அவர் ஒரு சிறந்த அரசியல்வாதி என்பது தொடர்பில் மக்களுக்கு இன்னும் தெரியாது. அதனால் அதனை உணர்ந்து கொள்ள மக்களுக்கு பிரச்சினை இருக்கின்றது. என்றாலும் ஐக்கிய தேசியக் கட்சி சிறந்த அரசியல் அனுபவமிக்க ஒருவரையே வேட்பாளராக நிறுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 60 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 80 | 70 | 100 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 130 | 150 | 150 |
| தக்காளி | 50 | 60 | 60 | 50 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 100 | 40 | 60 |
| கோவா | 50 | 50 | 60 | 50 | 60 |
| கரட் | 100 | 90 | 120 | 70 | 140 |
| பூசணி | 40 | 30 | 20 | 30 | 40 |
| புடோல் | 50 | 50 | 60 | 30 | 80 |
| வாழைக்காய் | 60 | 80 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 120 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 80 | 120 | 100 | 70 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 60 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 40 | 80 | 40 | 80 |
| பயற்றங்காய் | 140 | 120 | 120 | 60 | 140 |
| லீக்ஸ் | 80 | 80 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 30* | 30 | 50 | 35 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 | 50 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 600 | 550 | 400 |
| போஞ்சி | 50 | 60 | 80 | 60 | 100 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | 60 | 50 | 60 |
| கீரை-1பிடி | 30 | 25 | 20 | 15 | 30 |
| தேசிக்காய் | 50 | 80 | 80 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50 | 30 | 30-50 |
| இராசவள்ளி | 120 | 140 | 120 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 50 | 60 | 80 | 55 | 80 |
| முள்ளங்கி | 30 | 40 | 60 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 45 | 40 | 15 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 10 | 20 |
| ஈரப்பலா | — | 100 | 50 | 100 | 80 |

# 1,486 பாடசாலைகள் மூடப்படும் அபாயம்!

## வடக்கில் மட்டும் 275 பாடசாலைகள்

(கொழும்பு)
நாடளாவிய ரீதியிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளில் 50 மாணவர்களுக்குக் குறைந்த 1,486 பாடசாலைகள் மூடப்பட வேண்டிய ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாக கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள புள்ளிவிபரத் தகவல்களின் மூலம் தெரியவந்துள்ளது.

நாட்டில் 10,194 அரசாங்கப் பாடசாலைகள் உள்ளன. இவற்றுள் 9,841 பாடசாலைகள் மாகாண சபைகளால் நிர்வகிக்கப்படுகின்றன. 353 பாடசாலைகள், தேசிய பாடசால்லைகள் என்ற அடிப்படையில் மத்திய கல்வி அமைச்சால் நிர்வகிக்கப்படுகின்றன.

மாகாண சபைகளின் கீழ் 4,059 மூன்றாந்தர வகைப் பாடசாலைகள் இயங்குகின்றன. இவ்வகையான பாடசாலைகளில் 1,486 பாடசாலைகள் மாணவர்கள் இன்மை காரணமாக மூடப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

இவை அனைத்தும் கிராமப்புறப் பாடசாலைகளாகும். மூடப்பட வேண்டிய பாடசாலைகளில் அதிகமான பாடசாலைகள் வட மாகாணத்திலுள்ளன. இங்கு 275 பாடசாலைகள் மூடப்பட வேண்டிய நிலையிலுள்ளன. இதற்கு அடுத்தபடியாக மத்திய மாகாணத்தில் 240, சப்ரகமுவ மாகாணத்தில் 230 என்ற அடிப்படையில் மூடப்பட வேண்டிய பாடசாலைகள் உள்ளன.

மேல் மாகாணத்தில் 73, தென் மாகாணத்தில் 125, கிழக்கு மாகாணத்தில் 141, வடமேல் மாகாணத்தில் 133, வடமத்திய மாகாணத்தில் 111, ஊவா மாகாணத்தில் 158 பாடசாலைகள் மூடப்படும் ஆபத்தில் உள்ளன.

மாவட்ட அடிப்படையில் ஆகக் கூடுதலாக மூடப்பட வேண்டிய பாடசாலைகள் கேகாலை மாவட்டத்தில் உள்ளன. இங்கு 119 பாடசாலைகள் மூடப்பட வேண்டியுள்ளன. ஆகக்குறைந்த மூடப்பட வேண்டிய பாடசாலைகள் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளன. இங்கு 16 பாடசாலைகள் மூடப்பட வேண்டிய நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# சமாதானத்தை வலியுறுத்தி நடைபவனி








(கிண்ணியா)
திருகோணமலை - கிண்ணியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட தனியார் அமைப்பால் மத நல்லிணக்கம் சமாதானத்தை வலியுறுத்திய நடைபவனியொன்று மேற்கொள்ளப்பட்டது.

குறித்த நடைபவனி ஐக்கிய நாடுகள் நட்புறவு அமைப்பின் வழிகாட்டலில் சர்வ மதத்தலைவர்கள் மற்றும் பெண்களின் பங்கு பற்றுதலுடன் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இந்த நடைபவனியானது கிண்ணியா பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஆரம்பித்து பிரதான வீதியினூடாக புஹாரி சந்தி சுற்று வட்டம் வரை சென்று மீண்டும் பிரதேச செயலகத்தை வந்தடைந்தது.

இதில் பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்ட நிலையில், பங்கு பற்றிய அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (இ-4)




உ
சிவமயம்

## தசாகாதி கிருஹயஜ்ஞ அழைப்பு



அன்புடையீர்

நிகழும் விளம்பி வருஷம் மாசி மாதம் 11.02.2019 திங்கட்கிழமை
அமரத்துவமெய்திய எங்கள் குடும்பத் தலைவர்

## சிவஶ்ரீ சி. மனோகரராஜக் குருக்கள்

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்

| | | | | |
|---|---|---|---|---|
| மாசி மாதம் 8ம்நாள் | (20.02.2019) | புதன்கிழமை | காலை 10.00 மணிக்கு | தசாகம் |
| மாசி மாதம் 9ம்நாள் | (21.02.2019) | வியாழக்கிழமை | காலை 10.00 மணிக்கு | ஏகோதிஷ்டம், மாசிகம் |
| மாசி மாதம் 10ம்நாள் | (22.02.2019) | வெள்ளிக்கிழமை | காலை 10.00 மணிக்கு | சபிண்டீகரணம் |
| மாசி மாதம் 11ம்நாள் | (23.02.2019) | சனிக்கிழமை | காலை 10.00 மணிக்கு | கிருஹயஜ்ஞம், மதியபோசனம் |

இந்நிகழ்வில் கலந்துகொண்டு ஆத்மாசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும்
கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

136, முருகன் ஒழுங்கை,
பால்பண்ணை வீதி,
திருநெல்வேலி.

இங்கனம்
குடும்பத்தினர்
திருமதி மனோகரராஜக் குருக்கள் நாகலட்சுமி
திரு. சி. மாதவராஜ சர்மா (சகோதரர்) குடும்பத்தினர்


# வேலிக்கு தீ வைத்த விசமிகள்





(யாழ்ப்பாணம்)
யாழ். காக்கைதீவுப் பகுதியில் உள்ள தென்னந் தோப்புக் காணியின் ஒரு பக்க வேலியை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை இனம் தெரியாத நபர்கள் தீயிட்டு எரித்துள்ளனர். இதில் சுமார் 3 ஏக்கர் தென்னந் தோப்பைக் கொண்ட காணியின் கிடுகு களால் அடைக்கப்பட்ட ஒரு பக்க வேலி முற்றாக எரிந்து நாசமாகியதாகத் தெரிவிக்கப்பட்டது.(இ-10)

# எல்லோரும் வேண்டாம் என்றால் குப்பையை எங்கு தான் போடுவது

## ஜனாதிபதி மைத்திரி கேள்வி



(கொழும்பு)
நாட்டிலுள்ள அனைத்துப் பிரதேசங்களிலுமுள்ள மக்கள் குப்பைகளை கொட்ட வேண்டாம் என்று கூறுவதாயின் அதனை எங்கு போடுவது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேள்வி எழுப்பினார்.

அந்தக் குப்பைகளை கடலில் போடவும் முடியாது. அவ்வாறு போட்டால் சர்வதேச ரீதியில் அரசாங்கத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வார்கள் எனவும் சுட்டிக்காட்டினார்.

குப்பைகளைப் போடுவதற்கு எதிராக கிராமங்களில் போஸ்டர்கள் அடிக்கப்பட்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நான் அன்பான விவசாயிகளிடம் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன். நாம் உடம்புக்குள் உட்கொள்ளும் உணவு தவிர்ந்த ஏனைய அத்தனையும் குப்பைகளாகவே சேர்கின்றன.

தற்பொழுது குப்பை முகாமை செய்வதற்குள்ள நவீன முறைமையை பொருத்தமான ஓர் இடத்தில் அமைப்பதன் மூலமே இந்தக் குப்பை பிரச்சினைக்கு தீர்வை வழங்கலாம். இவ்வாறு செய்வதனால் அயலவர்களுக்கும் கிராமத்தில் வாழும் மக்களுக்கும் எந்தவொரு பிரச்சினையும் எழுவதில்லை எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பொலநறுவ திம்புலாகல மகா வித்தியாலயத்தில் 2 கோடியே 10 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் திறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-4)

# கடற்படை ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து பாக். - இலங்கை பேச்சு



(கொழும்பு)
பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து, இரண்டு நாடுகளின் உயர்மட்ட அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

இலங்கையின் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவும், பாகிஸ்தான் கடற்படைத் தளபதி அட்மிரல் சபார் மொகமட் அப்பாசிற்கும் இடையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, பாதுகாப்புடன் தொடர்புடைய கூட்டு மற்றும் கடல்சார் பாதுகாப்பு உள்ளிட்ட பரஸ்பர நலன்கள் தொடர்பான விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கடற்படை தெரிவித்துள்ளது. (இ-4)

# கடமையின்போது கொல்லப்பட்ட பொலிஸ் அதிகாரியின் சகோதரிக்கு அரச தொழில்

(கொழும்பு)
கடந்த வருடம் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வவுணதீவில் கடமையிலிருந்த போது கொலை செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரி கனேஷ் தினேஷின் மூத்த சகோதரிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் அரசாங்க நூலக உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் முற்பகல் தெஹியத்தகண்டிய, நுவரகல மகா வித்தியாலய விளையாட்டரங்கில் இடம்பெற்ற மகாவலி காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வு மற்றும் மகாவலி விவசாய பாராட்டு, பரிசளிப்பு விழாவில் வைத்து இந்த நியமனம் ஜனாதிபதியால் வழங்கப்பட்டது. (இ-4)

# விபத்தை ஏற்படுத்திய சாரதிக்குப் பிணை!

(கொடிகாமம்)
கொடிகாமம் - மிருசுவில் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை துவிச்சக்கரவண்டியில் பயணித்த பெண்ணை இராணுவ வாகனம் மோதியதில் குறித்த பெண் படுகாயமடைந்துள்ளார். விபத்துடன் சம்பந்தப்பட்ட இராணுவ வாகனச் சாரதியை கைது செய்த கொடிகாமம் பொலிஸார் நேற்றுச் சனிக்கிழமை சாவகச்சேரி பதில் நீதவானிடத்தில் முன்னிலைப்படுத்தினர். இதன்போது வாகனச்சாரதி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்த 52 வயது வ. சரோஜாதேவி என்ற பெண் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (இ-30)

# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி கையெழுத்துப் போராட்டம்



வடக்கு-கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி சர்வதேசத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் வடக்கு-கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மாபெரும் கையெழுத்துப் போராட்டத்தை நேற்று முல்லைத்தீவில் ஆம்பித்துள்ளனர். வடக்கு-கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் நீதிக்கான தீர்வு வேண்டி கையெழுத்துப்போராட்டம் உறவுகளால் முன்னெடுக்கப்படவுள்ளது. (9)

## இளைஞன் மீது இராணுவத்தினர் தாக்குதல்

வவுனியா, ஈச்சங்குளம் இராணுவ முகாமுக்கு முன்னால் வைத்து இளைஞன் ஒருவர் மீது இராணுவத்தினர் தாக்கிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, கல்மடு பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவர் ஈச்சங்குளம் இராணுவ முகாமின் முன்னாலுள்ள விளையாட்டு மைதானத்தில் விளையாடி விட்டு அதன் முன்னால் இராணுவத்தினர் நடத்தும் சிற்றுண்டிச் சாலைக்கு சென்ற சமயம், அங்கு நின்ற இராணுவ வீரர் ஒருவருக்கும், இளைஞர் ஒருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அப்பகுதியில் நின்ற இராணுவத்தினர் ஒன்றிணைந்து தன் மீது தாக்குதல் நடத்தியதாக பாதிக்கப்பட்ட இளைஞன் தெரிவித்துள்ளார்.

இதன்பின் சம்பவ இடத்திற்கு வந்த ஈச்சங்குளம் பொலிஸார் குறித்த இளைஞனை கைது செய்துள்ளதுடன், இராணுவத்தினர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என பாதிக்கப்பட்ட இளைஞனின் தாயார் தெரிவித்துள்ளார். தாக்குதலுக்குள்ளான இளைஞன் ஈச்சங்குளம் பொலிஸாரால் வவுனியா வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டு மருத்துவ பரிசோதனை மேற்கொண்ட பின்னர் மீண்டும் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (9)

## அடிப்படை வசதியின்றி அவதியுறும் இரணைதீவு மக்கள்

(மன்னார்)

கடந்த வருடம் சித்திரை மாதம் கிளிநொச்சி இரணைமாதா நகரில் இருந்து 200 இற்கு மேற்பட்ட படகுகளில் இரணைதீவு மக்கள் தங்கள் பூர்வீக கிராமமான இரணைமாதா நகருக்குச் சென்றனர்.

யுத்ததின் காரணமாக இரணைதீவு மக்கள் தங்களுடைய பூர்வீக கிராமமான இரனைதீவில் இருந்து கடற்படையினரால் கட்டாயத்தின் பெயரில் அப்புறப்படுத்தப்பட்டு இரணை மாதா நகரில் தற்காலிகமாக குடியமர்த்தப்பட்டனர்.



குடியமர்த்தப்பட்டு பலவருடங்கள் ஆகியும் யுத்தம் முடிவடைந்து பலவருடங்கள் ஆகியும் தங்கள் பூர்வீக கிராமமான இரணைதீவில் தாங்கள் குடியேற்றப்படவில்லை எனத் தெரிவித்து பல நாட்கள் போராட்டத்தை மேற்கொண்டு இறுதியில் அரச அனுமதி இன்றி 200 படகுகளில் இரணைமாதா நகரில் இருந்து இரணைதீவில் சென்று குடியேறினர்.

தற்போது ஒரு வருடத்தை அண்மிக்கவுள்ள நிலையில்இன்னும்குறித்தமக்கள் அரசாங்கத்தினாலோ அரச அதிகாரிகளாலோ பார முகமாக நடத்தப்படுவதாக மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

தாங்கள் குடியேரிய பின்னரும் இதுவரை குடிநீர் வசதியோ போக்குவரத்து வசதியோ மருத்துவ வசதியோ அரசாங்கத்தினால் செய்து தரப்படவில்லை.

குறித்த பிரதேசத்தில் உள்ள கிணறுகளில் தண்ணீர் உவர் தண்ணீயாக காணப்படுவதனால் அதனை பருகமுடியாத நிலையில் தாங்கள் இருப்பதாகவும் கடற்படையினரால் மூன்று நாட்களுக்கு ஒரு முறை 5 லீற்றர் தண்ணீர் வழங்கப்படுகிறது.

அதே நேரத்தில் அவசர நிலமையோ எதும் திடீர் சுகயீனம் ஏற்படும் போது முதலுதவியோ அவசர சிகிச்சையோ வழங்குவதற்கான எந்த ஏற்பாடும் செய்து தரப்படாததனால் தாங்கள் அச்ச நிலையில் வாழ்வதாக தெரிவிக்கின்றனர்.

தங்கள் குறைகளை கேட்பதற்கு அரச அதிகாரிகளோ கிராம சேவகர்களோ இரணைதீவிற்குள் வருவது அரிதிலும் அரிதாகக் காணப்படுகின்றது எனவும் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்மந்தபட்ட அதிகாரிகள் அம்மக்களின் அடிப்படை தேவை களை யாவது பூர்த்தி செய்து தர நடவடிக்கை மேற்கொள்ள முன்வர வேண்டும் என கோரிக்கை முன் வைத்துள்ளனர். (9-285)




## கஞ்சாவுடன் இளைஞன் கைது

வவுனியா மாமடு பகுதியில் கேரளக் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவரை நேற்று வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த இளைஞருக்கு பொலிஸார் சிவில் நபர் போல தொலைபேசியில் தொடர்பினை மேற்கொண்டுதனக்கு கேரளக் கஞ்சா வேண்டுமென தெரிவித்துள்ளார்.

அதற்கு குறித்த இளைஞன் 1 கிலோ 200 கிராம் கேரளக் கஞ்சா 1,20,000 ரூபா என பேரம் பேசியுள்ளார். அதற்கு பொலிஸார் சம்மதம் தெரிவித்திருந்த நிலையில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் மாமடு சந்திக்கு சமுகமளிக்குமாறு குறித்த இளைஞன் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து நேற்றுக் காலை குறித்த பகுதியை பொலிஸார் சுற்றிவளைத்ததுடன் கஞ்சாவுடன் குறித்த இளைஞனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாமடு கள்ளிக்குளம் பகுதியினை சேர்ந்த 24 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (9)

## மன்னார் மாவட்டத்தில் கடற்படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்

### அமைச்சர் றிசாத் பிரதமரிடம் கோரிக்கை

மன்னார் மாவட்டத்திலுள்ள சிலாவத்துறை கடற்படை முகாமை அகற்றல், முள்ளிக்குளம் கிராம மக்களின் பூர்வீகக் காணிகள் கடற்படையினரால் இன்னும் விடுவிக்கப்படாமை மற்றும் வன பரிபாலன திணைக்களத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ள பல்லாயிரக்கணக்கான மக்களின் காணிப்பிரச்சினை தீர்க்கப்படாமல் தொடர்ந்தும் இழுபறி நிலையிலேயே இருந்து வருவதாக அமைச்சர் றிசாத் பதியுதீன் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் பிரதமர் தலைமையில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி தொடர்பான மீளாய்வு கூட்டத்தின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிலாவத்துறை இராணுவ முகாமின் ஒருபகுதியை விடுவிப்பதாக ஏற்கனவே இணக்கம் தெரிவிக்கப்பட்டது. வட மாகாணத்தின் பிரதான நகரமான சிலாவத்துறை நகரத்தில் மக்கள் குடியிருப்பு பகுதியில் அமைக்கப்பட்ட கடற்படை முகாம் நீண்டகாலமாக அகற்றப்படாமல் இருப்பதால் அந்தப் பிரதேசத்தில் வாழ்பவர்களின் அன்றாட வாழ்வு பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.

நாங்கள் தொடர்ச்சியாக விடுத்த கோரிக்கைகளின் பின்னர், மக்களுக்குச் சொந்தமான காணிகளில் 6 ஏக்கர் 88 பேர்ச்சினை விடுவிப்பதற்கு பிரதேச செயலாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளபோதும் இன்னும் அவ்வாறு நடைபெறவில்லை. இந்த கடற்படை முகாமை அகற்றி வேறு இடத்திற்கு மாற்ற முடியுமா? என்பது பற்றியும் அரசு சிந்திக்க வேண்டும்.

அத்துடன் கிறிஸ்தவ மக்களின் பாரம்பரிய பிரதேசமான முள்ளிக்குளம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதிக்குள் நான்கு குளங்கள் உள்ளன. அதனை புனரமைத்தால் ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலங்கள் நன்மையடையும்.

மன்னார் மாவட்டத்தின் பல்லாயிரக்கணக்கான காணிகளை வனவளத் திணைக்களம் வர்த்தமானி யின் மூலம் ஜி.பி.எஸ்.ஐ. பயன்படுத்தி சுவீகரித்துள் ளது. 1990 ஆம் ஆண்டு இந்த பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்க ளின் விவசாயம் மற்றும் குடிநிலக்காணிகள் கபளீக ரம் செய்யப்பட்டுள்ளதனால் மீள்குடியேற வரும் மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கிஉள்ளனர். பிரதமர் இந்த விடயங்களில் தலையிட்டு தமது அதிகாரங்களை பயன்படு த்தி இந்தக் காணிகளை மக்களுக்கு மீட்டுக்கொ டுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுமாத்திரமன்றி மீன்பிடி, சுற்றுலாத்துறை போன்றவற்றிலும் வனவளத்திணைக்களத்தின் கெடுபிடி அதிகமாகவுள்ளதால் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

மல்வத்து ஓயா திட்டம் தொடர்பில் நீண்டகாலமாக பேசப்பட்டு வருகின்ற போதும் இன்னும் இந்த மாவட்டத்திற்கு அந்த நீர்த் திட்டம் கொண்டு வரப்படவில்லை. அநுராதபுரம் பகுதிக்கு இந்த திட்டத்தை திசை திருப்பப் போவதாக கூறப்படுகின்றது. அவ்வாறு இடம்பெற்றால்இந்திய காவேரி பிரச்சினை போன்று இன்னுமொரு பிரச்சினை உருவாகும்.

அத்துடன் புத்தளம் - மன்னார் பாதையான இலவன்குள பாதை திறக்கப்பட்டால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம், பருத்தித்துறை வரையான பயணத்தை இலகுவாக்க முடியும். இந்த பாதை நீதிமன்றத்தில் வழக் கிலிருப் பதாகவும் அதனை சமரசமாக தீர்த்து வைக்க பிரதமர் உதவ வேண்டும். அத்துடன் மாந்தை மேற்கு பிரதேசத்தில் திறந்த மிருகக்காட்சிசாலை ஒன்றை அமைக்கும் யோசனையையும் அமைச்சர் முன் வைத்தார். (9-285)

## ஆறு வருடங்கள் கடந்தும் இடமாற்றம் வழங்கப்படவில்லை

### அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கவலை

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த 6 வருடங்களிற்கு மேலாக கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தமது சொந்த மாவட்டத்திற்கு இடமாற்றம் பெறமுடியவில்லை எனக் கவலை தெரிவித்துள்ளனர்.

வெளி மாவட்டங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இடமாற்றம் வழங்குமாறு பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் மற்றும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கடமைபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களே நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளனர். 6 வருடங்கள் கடமையாற்றி இடமாற்றம் கிடைக்காத நிலையில் நேற்று நேரடியாகச் சென்று முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பாக மாவட்டச் செயலகங்களுடன் தொடர்பு கொண்ட போது இந்த உத்தியோகத்தர்களுக்காக மாற்று அலுவலர் வழங்கப்படாத நிலையில் இடமாற்றம் வழங்க முடியாத சூழ்நிலையில் உள்ளோம்.

இந்த மாவட்டங்களில் போர்க் காலங்களில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு அலுவலர்களின் சேவைகள் அவசியம் எனக் கருதுவதால் மாற்றீடு கிடைக்கும் வரை இந்த அலுவலர்களை இடமாற்றம் செய்ய முடியாத நிலையில் உள்ளோம் எனவும் தெரிவித்தனர். (9-10)

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

புலனாய்வுத்துறையினர் என கூறி வீட்டில் உள்ளவர்களை தாக்கியதாக குடும்பஸ்தர் ஒருவர் வவுனியா மனித உரிமைகள்ஆணைக்குழுவில் கடந்த வியாழக்கிழமை முறைப்பாடு பதிவுசெய்துள்ளார்.

யாழ்ப்பாணம் அல்வாய் தெற்கு அம்மன் கோவிலடியை சேர்ந்த வே.இராசலிங்கம் என்பவருடைய வீட்டுக்கு கடந்த 10 ஆம் திகதி இரவு சென்ற குழுவினர், தம்மை புலனாய்வுத்துறையினர் என அறிமுகம் செய்துள்ளனர். வீட்டில் இல்லாத அவருடைய மகன் தொடர்பான விபரங்களை கேட்டபோது அவர் தனக்கு ஏதும் தெரியாது என தெரிவித்துள்ளார். அப்போது குறித்த நபரை தாக்கிய அந்த குழுவினர், வீட்டில் இருந்த இளைய மகனையும் தாக்கி விட்டு சென்றுள்ளனர்.

இதனால் குடும்பத்தில் உள்ளவர்கள் பதற்றநிலையில் இருப்பதாகவும் தற்போது தாம் குடும்பத்தினருடன் வவுனியா பிரதேசத்தில் வசிப்பதாகவும் குறித்த விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற் கொண்டு தமக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என கோரி மேற்குறித்த முறைப்பாட்டை குறித்த குடும்பஸ்தர் பதிவு செய்துள்ளார். (9)

உரைகல்லில் தேய்ந்து அழிவது பொன்தான். கல் அல்ல.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கல் பெற்ற பெருவாழ்வு

தமிழில் இருக்கக்கூடிய சொற்கள் பல பொருள் தரக் கூடியவை. இவ்வாறு ஒரு சொல் பல பொருள் தருவதன் காரணமாகவும் தமிழ் மொழி பெருமைக்குரிய மொழியாயிற்று.

இதில் "கல்" என்ற சொல்லை எடுத்துக் கொண்டால் இச்சொல் பல பொருளைத் தருவதாகும்.

வீடு கட்டுவதற்குப் பயன்படும் கல் தொடக்கம் கற்றல் என்பது வரை கல் என்ற சொல் பல பொருள் கொண்டதாகும்.

இதனாலன்றோ "கல்" என்ற சொல்லை அடக்கிய பழமொழிகளும் சொற்றொடர்களும் நம் தமிழ் மொழியில் தாராளமாக உள்ளன. இதில் ஒரு சொற்றொடர் "வாழக்கல்" என்பதாகும்.

ஒருமுறை உயர்தரப் பரீட்சையின் தமிழ்ப் பாடத்தில் வாழக்கல் என்ற விடயம் பற்றிக் கட்டுரை எழுதுமாறு கேட்கப்பட்டிருந்தது.

எல்லா மாணவர்களும் வாழ்க்கையில் கல்வியின் முக்கியத்துவம் குறித்து எழுதியிருந்தனர்.

ஒரு மாணவன் மட்டும் வாழ்க்கையில் கல்லின் முக்கியத்துவம் பற்றி எழுதியிருந்தான்.

வீடு கட்டுகின்ற கல் எவ்வளவுக்கு மனித வாழ்வுடன் தொடர்புபட்டது என்பதை விரித்துரைப்பதாக அவனின் கட்டுரை அமைந்திருந்தது.

குறித்த அந்த மாணவனின் கட்டுரைக்கு முழுப்புள்ளிகள் வழங்கியதாக தமிழ்த் துறைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் குறிப்பிடுவார்.

இவை ஒருபுறமிருக்க, "நாயைக் கண்டால் கல்லைக் காணோம். கல்லைக்கண்டால் நாயைக் காணோம்" என்றொரு பழமொழியும் நம் தமிழ் மொழியில் உண்டு.

இங்கு கல் என்பது வாழைத்தடலில் செய்யப்பட்ட "கல்லை" எனும் போசனத் தட்டைக் குறிப்பதாகும்.

இதுபோல பெற்ற மனம் பித்தும் பிள்ளை மனம் கல்லும் என்பதில் கல்லும் என்பது நெருடும் என்ற பொருளைத் தருவதாகும்.

இவையெல்லாம் கல் என்ற சொல் தரும் பல பொருளாகும்.

இவை தவிர, நடுகல் வணக்கம் என்பது நம் தமிழர் பண்பாட்டின் ஒரு பெரும் மரபு. போரில் உயிரிழந்த மாவீரர்களை நினைவுகூருவதன் பொருட்டு நடுகல் வணக்கம் தமிழர்களின் பண்டைக் காலப் பண்பாடாகும். இன்றும் நடுகல் வணக்கம் நம்மோடு ஒன்றிணைந்திருப்பது கண்கூடு.

இவ்வாறாக தமிழர் வாழ்வில் "கல்" பெற்ற பெருவாழ்வு கொஞ்சமல்ல.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்குச் சென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சி வைத்தியசாலையில் புதிய கட்டிடத் தொகுதி ஒன்றுக்கு அடிக்கல் நாட்ட ஏற்பாடாகியிருந்தது.

அடிக்கல் நாட்டும்போது அந்தக் கல்லை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் கொடுத்து நீங்களே அடிக்கல் நாட்ட வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

இங்கு வைத்தியசாலைக்கான அடிக்கல்லை பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் நாட்டியமை ஏற்புடையது.

ஆனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் சிறீதரனிடம் கல்லைக் கொடுத்து நீங்கள் நாட்டுங்கள் என்று கூறியதற்குள் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தமிழ் மக்களின் உரிமை விடயத்தில் கூட்டமைப்பு உறுதியாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துபவர்.

எனவே அவரைத் தம் பக்கம் இழுப்பது அவசியம் என்பதால் அவரின் உறுதிப்பாட்டை அசைப்பதற்காக வைத்தியசாலையின் அடிக்கல்லை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவரிடம் வழங்கினாரா? என்பதுதான் நம் ஐயம்.

எதுவாயினும் பிரதமர் தந்த அடிக்கல் தமிழர் உரிமையில் இன்னும் உறுதியாய் இருப்பதற்கான படிக்கல்லாய் அமையட்டும்.

# டெங்கு பெருகக்கூடிய நிலையிலுள்ள இரு காணிகள் அரசுடமையாக்கப்படும்

## சாவகச்சேரி சுகாதார திணைக்களம்

டெங்கு நுளம்பு பெருகக் கூடிய நிலையில் இரு காணிகள் அரசுடமையாக்கப்படும் என்ற சிவப்பு அறிவித்தலுடன் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் காணிகளில் அறிவித்தல்களைப் பொருத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணம் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கல்வயல் வாகையடி ஒழுங்கையில் உள்ள காணியொன்றில் காணப்பட்ட பற்றைகளால் அயலில் உள்ள வீடுகளில் உள்ள மூன்று பிள்ளைகள் டெங்குத் தொற்றினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறு சங்கத்தானை பெரிய அரசடி சாலையில் உள்ள காணியொன்றில் காணப்பட்ட பற்றைகளில் உருவான டெங்கு நுளம்புகளினால் அயலில் உள்ளவர்கள் டெங்கினால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் இரு காணி உரிமையாளர்களுக்கு சுகாதாரத் திணைக்களத்தினரால் அறிவித்தல்கள் வழங்கப்பட்டும் இதுவரை காணிகள் துப்புரவு செய்யாததால் நேற்று இரு காணிகளிலும் காணிகள் துப்புரவு செய்ய இரு வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இக் காலப்பகுதிக்குள் துப்புரவு செய்யப்படாவிடின் உள்ளூராட்சி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் காணி அரசுடமையாக்கப்படுமெனவும் குறிப்பிட்டு சிவப்பு அறிவித்தல் பொருத்தியுள்ளனர். (3)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

## அவதானமாக இருக்குமாறு பணிப்பாளர் அறிவிப்பு

யாழ் போதனா வைத்தியசாலையில் திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் நோயாளர்கள் பார்வையாளர்கள் அவதானமாக இருக்குமாறு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் எஸ். சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் விபத்து சத்திர சிகிச்சைப் பிரிவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அன்றைய நிகழ்வில் கலந்து கொண்ட அதிகாரி ஒருவருடைய தொலைபேசி திருட்டுப் போயிருந்தது. அதை திருடியவரை சிசிரீவி கமெரா மூலம் ளெியாகிய காணொளியில் பொலிஸார் கண்டுபிடித்துள்ளார்கள். இது தொடர்பாக பணிப்பாளர கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் போதனா வைத்தியசாலையில் பார்வையாளர் நேரத்தில் அதிக சன நெரிசல் நிலவுகிறது. சிகிச்சை பெறும் இடத்திலும் வெளியாடகளின் நடமாட்டம் அதிகமாக உள்ளது. இந்த இடத்தில் பல திருட்டுக்கள் நடைபெறுகிறது.

இது தொடர்ச்சியாக இடம்பெறுவதை அவதானித்துள்ளோம். இது தொடர்பில் பொதுமக்கள் அவதான்மாக இருக்க வேண்டும். நாம் மேற்கொண்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-9)

# புதிய அரசியலமைப்பு முற்றிலும் மோசடி

## – மகிந்த

(கொழும்பு)

உத்தேச புதிய அரசியலமைப்பானது முற்றிலும் மோசடியானது என எதிர்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அந்த அரசியலமைப்பின் ஊடாக நாட்டின், சிங்கள, தமிழ் முஸ்லிம் உள்ளிட்ட சகல இன மக்களும் ஏமாற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (3)

## மன்னார் பகுதியில்

# பாடசாலை மாணவன் சடலமாக மீட்பு

(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவன் ஒருவர் பாடசாலை சீருடையுடன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் கருங்கண்டல் ம.வி பாடசாலையில் உயர்தர வகுப்பு மாணவரான ஜே.நிர்மலன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த மாணவன் வழமை போல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை பாடசாலைக்குச் சென்று மீண்டும் வீடு திரும்பியுள்ளார்.

மீண்டும் வீட்டில் இருந்து பாடசாலை சீருடையுடன் வெளியில் சென்ற மாணவன் இரவாகியும் வீடு திரும்பவில்லை.

இந்த நிலையில் தேடிய போதே குறித்த மாணவன் மணல்காடு பகுதியில் நேற்று முன்தினம் இரவு சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற அடம்பன் பொலிஸார் சடலத்தை மீட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

குறித்த மாணவனின் மரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (03.285)

# மூதாட்டி ஒருவர் வளர்த்த 19 ஆடுகள் திருட்டு

## மன்னார் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

91 வயது மூதாட்டி வளர்த்த 19 ஆடுகள் களவாடப்பட்டுள்ளதாக முருங்கன்பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு நேற்று முன்தினம் பதிவு செய்யப்பட்டுள்ளது

மன்னார் நானாட்டான் வெள்ளாளகட்டு சாளம்பன் பகுதியில் குடிசை வீட்டில் தனிமையில் வசித்து வரும் மூதாட்டி, 25க்கும் மேற்பட்ட ஆடுகளை வளர்த்து வந்துள்ளார்.

ஆடுகளை அருகில் உள்ள காடுகளில் மேய்த்து வந்துள்ளார்.

வழமைபோன்று நேற்று முன்தினம் நொச்சிக்குளம் பகுதியில் மேய்ச்சலுக்காக விட்டுவிட்டு வீட்டிற்கு வந்துள்ளார்.

மீண்டும் அந்த இடம் சென்று பார்த்தபோது ஆடுகளை காணவில்லை மாலை ஐந்து மணியின் பின்னர் ஆறு ஆடுகள் மாத்திரமே வீடு வந்துள்ளன.


இண்டாவது நாளாக தேடியும் கிடைக்காத காரணத்தால் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் மூதாட்டி முறைப்பாடு செய்துள்ளார். (03-9)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- தீயதை நல்லதென்றும், நல்லதை தீயதென்றும் சொல்லுபவர்களுக்குத் துயரம்தான் மிஞ்சும். தீமையாய்த் தோன்றுகின்ற அனைத்தில் இருந்தும் விலகுங்கள்.
- விருந்து வீட்டிற்குப் போவதைவிடத் துக்க வீட்டிற்குப் போவது நல்லது. ஏனெனில் அதுதான் எல்லா மனிதர்களின் முடிவு.
- அறிவாளியின் இருதயம் துக்கவீட்டில் இருக்கிறது. ஆனால், முட்டாளின் இருதயமோ கேளிக்கை வீட்டில் இருக்கிறது.
- முகத்தோற்றத்தைக் கொண்டு முடிவு செய்யாதே. நேர்மையான நியாயத்தைப் பார்த்துத் தீர்ப்பு சொல்.
- தீமையிலிருந்து தீமைதான் புறப்படும். தீமையைச் செய்து துன்புறுவதைவிட நன்மையைச் செய்து துன்புறுவதே மேல்.
- திடீர் என்று எந்த மனிதன் மீதும் கைவைத்து விடாதே. மற்றவனின் பாவத்திற்கு நீ பங்காளியாகவும் ஆகாதே. உன்னைத் தூயவனாகக் காப்பாற்றிக் கொள்.
- துன்மார்க்கன் தன் மமதையினால் எளியவனை வாட்டுகிறான். தாங்கள் கற்பிக்கும் தந்திர மோசங்களில் அவர்களே அகப்பட்டுக் கொள்வார்கள்.
- கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள், கண்டடைவீர்கள். தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும்.

# தென்னாபிரிக்காவை புரட்டி எடுத்த இலங்கையின் அறிமுக வீரர்



இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை பந்துவீச்சாளர் லசித் அம்புல்தெனிய 5 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார்.

அம்புல்தெனியாவுக்கு இது தான் முதல் சர்வதேச போட்டி என்ற நிலையில் தென்னாபிரிக்காவின் முதல் இன்னிங்சில் ஒரு விக்கெட்டும், இரண்டாவது இன்னிங்சில் 5 விக்கெட்டுகளும் எடுத்தார்.


22 வயதான அம்புல்தெனிய இதுவரை 22 முதல் தர போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இதில் மொத்தமாக 131 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

ஒரு இன்னிங்சில் அவரது சிறந்த பந்துவீச்சு 59 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தியது ஆகும்.

ஒரு போட்டியில் அம்புல்தெனியவின் சிறந்த பந்துவீச்சு 123 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து. 10 விக்கெட்டுகளை வீழ்த்தியது ஆகும். (க)

# கவிதர்ஷன் அபார பந்து வீச்சு இறுதிக்குள் நுழைந்தது யாழ்.மத்தி



15வயதிற்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான தேசிய ரீதியான துடுப்பாட்ட தொடரின் அரையிறுதி போட்டியில் பலாங்கொட தேசிய பாடசாலை அணியினை வீழ்த்தியதன் மூலம் இறுதிப் போட்டிக்குள் நுழைந்த யாழ்.மத்திய கல்லூரி பிரிவு-2 அணியாகவும் தரம் உயர்த்தப்பட்டது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணித்தலைவர் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்ய மத்திய கல்லூரி அணி 9 இலக்குகள் இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் மத்திய கல்லூரி சார்பாக கஜன்-57, கௌதமன்-33 ஓட்டங்களையும் பெற்று கொடுத்தனர். 154 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு ஆடிய பலாங்கொட தேசிய பாடசாலை அணி யாழ்.மத்திய வீரர்களின் சிறந்த பந்து வீச்சினை எதிர்கொள்ள முடியாது 83 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 68ஓட்டங்களினால் தோல்வியடைந்தது.

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி சார்பாக கவிதர்ஷன் 6 இலக்குகளினை கைப்பற்றினார். (க)



மன்னார் சாவற்கட்டு கில்லறி விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் மறைந்த அருட்சகோதரர் கில்லறியின் 100வது பிறந்த தினத்தையும் கில்லறி விளையாட்டுக்கழகம் உதயமாகி 20 வருட பூர்த்தியையும் முன்னிட்டு வடமாகாண ரீதியாக முன்னிலையில் உள்ள 60 விளையாட்டுக்கழகங்களை உள்ளடக்கி அணிக்கு ஒன்பது பேர் கொண்ட கில்லறி வெற்றி கிண்ண உதைபந்தாட்ட போட்டியானது நேற்றுக் காலை 9 மணியளவில் மன்னார் பொது விளையாட்டரங்கில் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் கில்லறி விளையாட்டுக்கழக நிர்வாக உறுப்பினர்களுடன் வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது. (க)

# தீவிரவாதம் பேசுபவர்களை உடன் சுட்டுத் தள்ளுங்கள்

## மல்யுத்த வீரர் டுவிட்



தீவிரவாதத்தை ஆதரிக்கும் இந்தியர்களைச் சுட்டுத் தள்ளுங்கள் என்று இந்திய மல்யுத்த வீரரும் ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்ற வீரருமான யோகேஸ்வர் தத் ஆவேசமாகத் தெரிவித்துள்ளார்.

இந்திய இராணுவ வீரர்கள் 45 பேர் ஜம்மு-காஷ்மீரில் இருந்து ஸ்ரீநகருக்குச் செல்லும் வழியில் தீவிரவாதத் தாக்குதலில் உயிரிழந்தனர். இந்நிலையில் இதுகுறித்து தன் டுவிட்டர் பக்கத்தில் கருத்து தெரிவித்துள்ள யோகேஸ்வர் தத், புல்வாமாவில் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

நடந்த சம்பவத்தை நம்மால் தடுக்க முடியாது. ஆனால் அவர்களைப் பழிதீர்க்க முடியும். அந்த பதிலடி, ஒரு மனிதன் தீவிரவாதியாக உருமாறுவதற்கு முன் அவனை ஆயிரம் தடவை யோசிக்க வைக்க வேண்டும். இதுபோன்ற உறுதியான நடவடிக்கையை எடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

தீவிரவாதத்தை எந்த இந்தியனாவது ஆதரித்தால், அவனைச் சுட்டுத்தள்ள வேண்டும். இதுதான் ஒரே தீர்வு. வன்முறையை வன்முறை மூலமே தீர்க்க முடியும். தாக்குதலில் வீர மரணம் அடைந்த வீரர்களுக்கு எனது அஞ்சலி என்று தெரிவித்துள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# கூக்ளியால் கலங்கடிக்க காத்திருக்கும் இந்திய வீரர்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இந்திய அணியின் இருபது-20 போட்டியில் இளம் வீரரான மயங்க் மார்கண்டே சேர்க்கப்பட்டுள்ளார். இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் அவுஸ்திரேலியா அணி இரண்டு இருபது-20 மற்றும் ஐந்து ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கிறது.

இதில் இருபது-20 அணியில் மயங்க் மார்கண்டே சேர்க்கப்பட்டுள்ளார். வலக்கை சுழற்பந்து வீச்சாளரான இவர் கூக்ளி பந்து வீச்சில் சிறந்தவர்.

2018ஆம் ஆண்டு நடந்த ஐபிஎல் போட்டியில் மும்பை இண்டியன்ஸ் அணிக்காக விளையாடி 15 விக்கெட்டுகளை சாய்த்தார், அதில் டோனியின் விக்கெட்டும் அடங்கும்.

அண்மையில் கூட இங்கிலாந்து அணிக்கு எதிரான அதிகாரபூர்வமற்ற டெஸ்டில், 5 விக்கெட் வீழ்த்தி இந்திய அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.

இந்நிலையில் முதல் சர்வதேச போட்டியில் களமிறங்கும் மயங்க் மார்கண்டே மீது ரசிகர்களின் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# மாட்டுவண்டில் சவாரி போட்டி

யாழ்.மாவட்ட சவாரி சங்கமும் வலி.வடக்கு சவாரி சங்கமும் இணைந்து நடத்தும் மாபெரும் மாட்டு வண்டி சவாரிப் போட்டி இன்று வலி.வடக்கு சவாரி விடந்தையில் நடைபெறவுள்ளது.

வெற்றியாளர்களுக்கு பெறுமதிவாய்ந்த பரிசில்கள் வழங்கப்படுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க)

# ஆதிசக்தி விளையாட்டுக்கழக உதைபந்தாட்டம் றேஞ்சஸ் -விண்மீன் பலப்பரீட்சை





மறைந்த வீரர்களின் ஞாபகார்த்தமாக வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று பிற்பகல் 4 மணிக்கு வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். நடைபெற இருக்கும் இறுதிப் போட்டியில் றேஞ்சஸ் அணியை எதிர்த்து விண்மீன் அணி மோதவுள்ளது. (க)

# யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கம் நடத்தும் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் கனகரத்தினம் ம.ம.வித்தியாலயத்தில் யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்க தலைவர் இ.சிறிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டமானது முற்பகல் 10 மணிக்கு நடைபெறவிருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்பகல் 2.30 மணிக்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## காபன் பரிசோத...

பணிக்கு பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ உறுதிபடுத்தியுள்ளார். அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள்ள பீட்டா ஆய்வுக் கூடத்தில் காபன் பரிசோத்னைக்காக கடந்த மாதம் 25 ஆம் திகதி, மன்னார் மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் கையளிக்கப்பட்டன.

மனித எச்சங்களின் 6 மாதிரிகள் மீதான காபன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றில் 5 மாதிரிகளின் அறிக்கைகள் நேற்று சனிக்கிழமை அதிகாலை பீட்டா இணையத்தளத்தில் பிரவேசித்து ஆய்வறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வாறு பெறப்பட்ட அறிக்கை, எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை மன்னார் நீதவான் நீதிமன்றில் முன்வைக்கப்படும் என்று சட்ட வைத்திய நிபுணர் சமிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மன்னார் மனித புதைகுழியின் அகழ்வு பணிகள் மீண்டும் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (3-285)

## காணிகளை விடு...

வடக்குக்கு விஜயத்தை மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முல்லைத்தீவுக்கு விஜயம் செய்துள்ள நிலையில் கேப்பாப்புலவு மக்கள் தங்கள் காணிகளை விடுவிக்ககோரி முல்லைத்தீவு நகரில் பலத்த பொலிஸாரின் பாதுகாப்பு தடைகளுக்கு மத்தியில் கவனயீர்ப்பு நடவடிக்கை ஒன்றினை மேற்கொண்டுள்ளார்கள்.

கேப்பாப்புலவு மக்களின் காணிவிடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதியோ பிரதமரோ பதில் கூறவில்லை என்றால் அந்த மக்களை கடலில் கொட்டுங்கள் 104 குடும்பங்களையும் கடலில் கொட்டுங்கள் நாளாந்தம் அணு அணுவாக செத்துக்கொண்டு இருக்கின்றோம். எங்கள் வாழ்வாதாரம் முழுதும் படையினர் எடுத்துக்கொண்டு எங்களை தெருவில் விட்டுள்ளார்கள்.

இராணுவமே எங்கள் மண்ணை விட்டு வெளியேறு, எமது நிலம் எமக்கு வேண்டும், எமது கடல் எமக்கு வேண்டும், எமது வளம் எமக்கு வேண்டும் என்ற கோஷங்களை எழுப்பியவாறு தங்கள் கவனயீர்ப்பு நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளார்கள்.

முல்லைத்தீவு நகரினை சுற்றி அதிகளவு பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முல்லைத்தீவு மாவட்ட செயல நிகழ்வில் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-250-281)

## வடமராட்சி பகுதி...

பிரேசில் நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டு இருந்த போது பின்னால் பிறிதொரு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தொலைபேசி இருந்த சிறிய பையை பறித்துக் கொண்டு நெல்லியடி நோக்கி சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டுள்ளனர். (3-60)

## இராணுவம் போர்...

ணுவத்தினர் என இருதரப்பினரும் போர்க்குற்றங்களை இழைத்துள்ளனர் என்று நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் முன்னணி மாநாடு நல்லூரில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்தார்.

போரில் இராணுவ வீரர்கள் எந்தக் குற்றங்களையும் இழைக்கவில்லை, அவர்கள் மனிதாபிமானப் போரையே நடத்தினர் என்று இதுவரை காலம் இலங்கை அரசு கூறிவந்தது.

எனினும் முதன்முறையாக நாட்டின் பிரதமர், இராணுவத்தினரும் போர்க் குற்றங்களை இழைத்தனர் என்ற உண்மையை உத்தியோகபூர்வமாகவும் பகிரங்கமாகவும் தெரிவித்துள்ளார்.

இதனை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ள 10 ஆண்டுகள் எடுத்துள்ளது. தற்போது இந்த உண்மையை ஏற்றுக்கொள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு என்ன உணர்வு ஏற்பட்டதோ தெரியவில்லை.

அவருக்கு குற்ற உணர்வு ஏற்பட்டதோ? சர்வதேச அழுத்தம் அதிகரித்துள்ளதால் உண்மையை ஒத்துக்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டதோ? தெரியவில்லை.

போர் முடிவடைந்து அடுத்த வருடமே ஐ.நாவில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் பல நாடுகள் இணைந்து இலங்கை அரசு பயங்கரவாதத்தை தோற்கடித்ததற்கு பாராட்டுத் தெரிவித்திருந்தது.

ஆனால் இன்று இலங்கை அரசு தனது இராணுவமும் போர்க்குற்றங்களை இழைத்தது என்ற உண்மையை ஏற்றுக்கொண்டுள்ளது என எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (3)

## புலிகள் காலத்தில்...

மல் போய்விட்டது. அப்படியானால் புலிகள் மீண்டும் வந்து சமத்துவத்தை நிலைநாட்டவேண்டுமா என்று கேட்க விரும்புகின்றேன் என தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற அகதேசிய முற்போக்கு கழகத்தின் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை நாடானது தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்களோடு இணைந்து 19 இனகுழுக்களை கொண்டிருக்கிறது. ஆனால் அது அதிகாரபூர்வமாக அறிவிக்கபடவில்லை. சிங்களவர்கள் 75 வீதம் இருக்கலாம் அல்லது 99 வீதமாக இருக்கலாம் ஆனால் அது 100 வீதமாக மாறமுடியாது. 75 உடன் 25 இணைந்தால் தான் 100 வீதமாகமுடியும். அது தான் இலங்கை நாடாக இருக்கமுடியும். இதனை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எங்களிற்குள்ளே நாம் எம்மை தாழ்த்தி வைத்து கொண்டிருப்போமானால் பெரும்பான்மையான சிங்களமக்களிடம் சம உரிமையை தாருங்கள் என்று கேட்பதற்கான தார்மீக உரிமையை நாம் இழக்கின்றோம். எனவே எம்மை நாம் திருத்தி கொள்ளவேண்டும்.

இன்று இருக்கின்ற பாரபட்சங்கள், தள்ளி வைப்புகள் எல்லாம் புலிகள் காலத்தில் இருக்கவில்லை. இன்று சமாதானம் வந்திருக்கின்றது என்கிறார்கள். சட்டத்தின் ஆட்சி வந்திருப்பதாக கூறுகின்றார்கள். ஆனால் அன்று இருந்த சமத்துவம் காணமால் போய் விட்டது.

அப்படியானால் புலிகள் மீண்டும் வந்து சமத்துவத்தை நிலைநாட்டவேண்டுமா என்று கேட்க விரும்புகின்றேன். எனினும் புலிகளின் பெயரைகூறி அரசியல் செய்யும் பலர் கூட மலையக மக்கள் மீது பாரபட்சம் காட்டும் செயற்பாடுகள் இன்றும் நடைபெற்றே வருகின்றது.

எனவே இன்று உருவாகியுள்ள அமைப்பு பிரதேசவாதத்தை தூண்டும் ஒரு அமைப்பாக இருக்ககூடாது மாறாக நாங்களும் இங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்ற அடையாளத்தை தெரியபடுத்த வேண்டும். ஒன்றாக இருந்தாலே நாம் விடுதலையை பெறமுடியும் என்றார். (3-250)

## வவுனியாவில் முதி...

என பொலிஸார் தெரிவித்தனர். முதிய வரை காணவில்லை என உறவினர்கள் தேடிய சமயத்தில் வீட்டிலிருந்து சடலமாக கண்டுள்ளனர்.

இதனையடுத்து உறவினர்கள் நெளுக்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (3)

## போர்க்குற்ற விசா...

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த போது கடந்தகாலத் தவறுகளை மறந்து செயற்படுவோம் எனக் கூறியிருந்தார்.

அத்துடன், கடந்தகாலத் தவறுகளை மன்னித்து மறந்து விடுங்கள். பழையனவற்றை மறந்து விடுங்கள். உண்மையைக் கண்டறிய முனையாதீர்கள் எனக் குறிப்பிட்டிருந்தார்.

அதாவது அபிவிருத்திகள் எனும் போர்வையில், உங்களுக்குப் பணம் தருகின்றோம், உங்கள் உறுப்பினர்களுக்கு சலுகைகள் தருகின்றோம். உங்கள் பொருளாதார விருத்திக்கு வழி சமைக்கின்றோம். நடந்து போனதை மறந்து விடுங்கள், மன்னித்து விடுங்கள் என்று தான் கூறுகின்றார்.

இதன் அர்த்தம் என்ன? ஜெனிவாவில் கேள்வி கேட்கப் போகின்றார்கள். நாம் செய்வதாகக் கூறியவற்றை இதுவரை செய்யவில்லை. இப்போது உங்களுக்கு சலுகைகளைக் கொடுக்க எண்ணியுள்ளோம். கட்சி ரீதியாக அதைச் செய்ய எண்ணியுள்ளோம்.

எனவே ஜெனிவாவில் மீண்டும் கால அவகாசம் பெற்றுக் கொடுங்கள் என்று பிரதமர் கூறிச் சென்றுள்ளார். இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மௌனமாகத் தலையசைத்ததைப் பார்த்தால் அதற்கு அவர்கள் தயாராகி விட்டதாகவே தெரிகின்றது.

ஆனால் முதலில் சர்வதேச உதவியுடன் இலங்கையில் போர்க்குற்ற விசாரணையை நடத்தி, இங்கு இடம்பெற்றது இனப்படுகொலை ஆராய்ந்து கொள்ள வேண்டும். அதன் பின்னரே மன்னிப்புத் தொடர்பாக நாம் ஆராய முடியும் என சி.வி.விக்னேஸ்வரன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (3)

## பிரபல சட்டத்தரணி கோடீஸ்வரன் காலமானார்



மூத்த சட்டத்தரணி செல்லையா கோடீஸ்வரன் நேற்று திருகோணமலையில் காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 84.

சட்டத்துறையில் புகழ்பூத்த சட்டத்தரணியாக விளங்கிய கோடீஸ்வரன் யாழ்.பிறவுண் வீதியை வதிவிடமாகக் கொண்டவர்.

தமிழ் அரச உத்தியோகத்தர் ஒன்றிணைந்து உருவாக்கிய அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் தலைவராகவும் இருந்தவர்.

சிங்கள மொழியில் தேர்ச்சி பெறாவிட்டால் வருடாந்த ஊதிய உயர்வை தர மறுத்த சிறிமாவோ அரசாங்கத்துக்கு எதிரான கோடீஸ்வரன் வழக்கு பிரசித்தி பெற்றது. (3)

## வடக்கின் அபிவி...

முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கடந்தகால அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடியுள்ளதுடன் மழைவெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீட்டு தொகையினையும் வழங்கிவைத்துள்ளார்.

இந்த நிகழ்வினை தொடர்ந்து அங்கு பிரதமர் உரை நிகழ்த்தியுள்ளார். அவர் தனது உரையில்,

முல்லைத்தீவிற்காக நாங்கள் வித்தியாசமான அவதானத்தினை செலுத்த வேண்டும். வேறுஒரு நாளில் முல்லைத்தீவிற்கு வருகை தருவேன். நாங்கள் எதிர்பார்ப்பது வடக்கின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மிகவும் வேகமான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு. இந்த பிரதேசத்தின் மக்கள் பிரதிநிதிகள் எங்கள் அமைச்சுக்களுடன் இணைந்து செயற்படும் போது அதற்கேற்ற ஆலோசனைகளும் உபதேசங்களும் எங்களால் வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (3-281)

# மரண அறிவித்தல்

## திருமதி திரேசா புஸ்பரத்தினம் அருளானந்தம்



*வயாவிளான் வடமூலையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திரேசா புஸ்பரத்தினம் அருளானந்தம் அவர்கள் நேற்று (16/02/2019) காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்ற சிங்கராயர் - றோஸ்முத்தம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற அருளானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், அலோசியஸ் செல்வானந்தம், கிறீஸ்ரீனா புஸ்பம், அன்னம்மலர், லூயிஸ் தேவானந்தம், பீற்றர்போல் புஸ்பானந்தம், அன்ரன் ஞானானந்தம் ஆகியோரின் அன்புத்தாயாரும், நோபேட் ஸ்ரனிஸ்லஸ், புவனேந்திரன், குமுதினி, வர்சலா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆனந்தன், மகிழ்மொழி, லது, லணு, பிறின்ஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.*

*அன்னாரின் பூதவுடல் 16.02.2019 அன்று உரும்பிராயில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (18.02.2019) பிற்பகல் 3.00 மணியளவில் வயாவிளான் உத்தரிய மாதா ஆலயத்தில் திருப்பலி இடம்பெற்று உத்தரிய மாதா சேமக்காலை (பட்டியபுலம்) இல் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (7558)

தகவல்: வே.புவனேந்திரன்
(மருமகன் - 0771233080)


சுபிரி வாசனா
திகதி 2019/02/16
சீட்டிழுப்பு இலக்கம் 1404
எழுத்து 04 வெற்றி இலக்கம் 12 14 40 41 05 69
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 16-02-2019
சீட்டிழுப்பு இலக்கம் 918
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 7 5 4 3 2 3
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2019.02.16
சீட்டிழுப்பு இலக்கம் 2037
ஆங்கில எழுத்து Q வெல்லப்பட்ட இலக்கங்கள் 11 36 57 78
தேசிய லொத்தர் சபை

செவன
திகதி 2019/02/16
சீட்டிழுப்பு இலக்கம் 162
ஆங்கில எழுத்து A வெல்லப்பட்ட இலக்கங்கள் 02 11 26 60
தேசிய லொத்தர் சபை

## மூன்று...

மேற்கு பகுதியில் உள்ள வீட்டு வளவு ஒன்றில் கிடங்கு வெட்டிய போது மோட்டார் குண்டு ஒன்று தென்பட்டுள்ளது.

இதனையடுத்து அப்பணி நிறுத்தப்பட்டு பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

பொலிஸார் நீதிமன்ற உத்தரவைப் பெற்றிருந்த நிலையிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் குழுவினர் யாழிற்கு விஜயம் மேற்கொண்ட காரணத்தால் நேற்று சனிக் கிழமையே அப்பகுதிக்கு விசேட அதிரடிப்படையினர் வரவழைக்கப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

அப்போது 81 மில்லிமீட்டர் பராக் குண்டுகள் மூன்று மீட்கப்பட்டு மணல் காட்டு பகுதியில் வைத்து செயலிழக்கச் செய்யப்பட்டது(3-60)

## தற்போ...

வெயாங்கொடையில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து நான்கு வருடங்கள் ஆகியுள்ள போதிலும் பிரதமர் உட்பட அமைச்சர்கள் இன்னும் தனது அரசாங்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்களையே திறந்து வைக்கின்றார்கள்.

இன்று மிகவும் மந்தகதியான முறையிலேயே திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த அரசாங்கம் செய்த எந்தவொரு அபிவிருத்தி திட்டங்களையும் மக்களால் காண முடியாது.

தற்போதைய அரசாங்கத்தினால் வினைத்திறனான முறையில் செயற்பட முடியாது. இதனை அறிந்து கொண்டே ஜனாதிபதி என்னுடன் இணைந்து கொண்டார் எனத் தெரிவித்துள்ளார். (3)


**இலங்கையில் முதல் தர நிறுவனத்தில் இணைய உங்களுக்கும் அரிய வாய்ப்பு**

எமது நிறுவனமானது 2018ம் ஆண்டில் வடபகுதியில் 6 கிளைகளை நிறுவியுள்ளது. மேலும் 2019ம் ஆண்டில் O/L, A/L படித்தவர்களுக்கு அரிய சந்தர்ப்பத்துடன் இன்னும் 4 கிளைகளை நிறுவுவதற்காக முதல் 35 விண்ணப்பதாரிகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.
இதற்காக நீங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்களுடன் 25.02.2019 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
♦பிறப்புச்சான்றிதழ் பிரதி, ♦அடையாள அட்டை பிரதி, ♦சுயவிபரக் கோவை, ♦ கிராம அலுவலகரின் உறுதிப்படுத்தல் கடிதம்.

Call Time- Morning: 7.30 to Evening 6.00 மேலதிக தகவல்களுக்கு 076 711 8479 (7555)

**இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது**

MPS Brothers Pvt Ltd 38, இலந்தைக்குளம் வீதியில் இயங்கி வந்த ஸ்தாபனம் தற்போது 30, மகாத்மாகாந்தி வீதி (மணிக்கூட்டு வீதி), யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மலேசியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மரங்கள் நியாய விலைக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**MPS BROTHERS PVT LTD**
30, மகாத்மாகாந்தி வீதி (மணிக்கூட்டு வீதி), யாழ்ப்பாணம். (7549)

**FLC FRENCH LANGUAGE CENTRE**





**பிரெஞ்சு** (C-5495)
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 05.03.2019, செவ்வாய் 2.15 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் :06.03.2019, புதன் 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1 IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

**வீடு விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு கருவப்புலம் வீதியில் (யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அண்மையில்) ஒரு பரப்பு 2 குளி காணியில் புதிதாக வாஸ்து முறைப்படி வடக்கு வாசல் கொண்டு சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்ட சுற்றுமதிலுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:
0770767114, 0766003303

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

**வேலை வாய்ப்பு**

யாழ் நகரில் இயங்கும் முன்னணி கணினி நிறுவனத்துக்கு Ms office கணினிப் போதனாசிரியர் (பயிலவிரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது
தொடர்புகளுக்கு - 077 99 062 99

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை, புலோலி கிழக்கு, மாதனையில் உள்ள (கிறிஸ்து அரசர் ஆலயத்துக்கு அருகாமையில்) 2 1/2 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. 0772500812

**PHYSICS PAPER CLASS 2019**

முப்பத்தாறு ஆண்டு கால வினாத் தாள்கள் தனியாகவோ, குழுவாகவோ 78, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தில் செய்து காண்பிக்கப்படும். 0766643257, தொடர்பு: 0771772359

**வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை**

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை (C-5521)
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு** (C-5439)





UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
●மானிப்பாய் 0768226240 V2 TRAVELS
●யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ●சாவகச்சேரி
●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை

**வேலையாட்கள் தேவை**

கோழி, ஆடு, மாடு ஆகியவற்றுடன் கூடிய விவசாயப் பண்ணைக்கு பராமரிப்பாளராக தங்கி இருந்து வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. தொடர்பு:
0777730567

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1985 ஆம் ஆண்டு, சுவாதி நட்சத்திரம், கிரகபாவம் 24, செவ்வாய் குற்றமற்ற, அரச தாதிய உத்தியோகத்தருக்கு (Nurse) அரச தொழில் புரியும் அழகிய மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள்.
தொடர்பு: 0775568362, 0212221623 (7556)

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

கொழும்பில் உள்ள கௌரவமான தமிழ்க் குடும்பத்திற்கு வீட்டு வேலைக்கு பணிப்பெண் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு 077 742 7568

**கனடாவில் நிரந்தர குடியேறல்/வேலைவாய்ப்பு/கல்வி- கருத்தரங்கு**

Pilot Program - சிக்கனமான, குறுகிய காலத்தில் கனடாவிற்கான தயார்ப்படுத்தல்

2018 ல் A/L சித்திபெற்றவர்களா? 3 தொடக்கம் 5 வருடங்களில் சரியான தயார்படுத்தல்களின் மூலம் கனடாவில் நிரந்தர பிரஜை ஆகலாம். கனடாவில் எந்தெந்த துறைகளில் வேலை வாய்ப்புக்கள் அதிகமுள்ளன அந்த இடங்களை அடைவதற்கு நீங்கள் என்ன படிக்க வேண்டும்,எந்தமாதிரியான வேலை அனுபவங்களை பெறவேண்டும் என்பதனை இப்போதே சரியான வழிகாட்டலைப் பெறுவதன் மூலம் நேர விரையம், பண விரையம் போன்றவற்றைத் தவிர்த்து கனடிய வேலை வாய்ப்பு, நிரந்தர வதிவிட உரிமையை பெறலாம்.

பெற்றோர்களின் வருகை வரவேற்கத்தக்கது.
கனடாவில் இருந்து வருகை தந்திருக்கும் கனடிய குடிவரவுத்துறையில் நிபுணத்துவமும் அங்கீகாரமும் பெற்ற Regulated Canadian Immigration Consultant இனால் உங்களுக்கு போதிய வழிகாட்டல்கள் வழங்கப்படும்.

Saaruban Sivaratnam
Regulated Canadian Immigration Consultant
(MBA,B.Eng) - RCIC # 519684
Member of Immigration Consultants of Canada Regulatory Council
Member of Canadian Association of Professional Immigration Consultants
80 NASHDENE RD, E BLOCK SUITE 110 TORONTO ON M1V 5E4,CANADA

கருத்தரங்கு நாள் 17-02-2019 ஞாயிற்றுக்கிழமை
V2 Travels
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
முற்பதிவு அவசியம்
0768226243

வடமாகாணத்தின் நீர் சுத்திகரிப்பு துறையில் மிகத்திறமை வாய்ந்த

**Yarl Smart Water Solution (Pvt) Ltd**

இப்பொழுது யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும்





SPECIAL OFFER
எமது smart சேவைகள்
- Domestic RO Plants.
- Industrial RO Plants.
- Water Softener Plant.
- Design & Construction of Swimming Pool,Spa.
- Waste Water and Sewage Treatment Plants.
- Water Treatment Chemicals and Equipments.

Hotline:- 021 430 0044 , 077 057 3684 , 077 473 9802 , 077 112 6410
No.319,K.K.S Road,Jaffna.


## கண்ணீர் அஞ்சலி



### அமரர் வல்லிபுரம் முருகையா

எமது கல்லூரியின் சங்கீத பாட ஆசிரியர் செல்வி மு.ஜெயகௌரி அவர்களின் அன்புத் தந்தையார் அமரர் வல்லிபுரம் முருகையா அவர்களின் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

ஆசிரியர் கழகம்,
மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

(C-5538)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 205

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 17.02.2019 தொலைபேசி : 021 222 3378



# கல்லும் கவி சொல்லும்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

இறைவணக்கத்தைத் தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தரார்.

கடந்த 13 ,ஆம் திகதி சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள் காலமானார். அவரின் இழப்பு சைவத்தமிழ் உலகிற்குப் பேரிழப்பாகும். ஆன்மீக வழியில் சமயச் சொற்பொழிவுகளை ஆற்றியதுடன் சைவ சமயக் கட்டுரைகளையும் எழுதி வந்த சிவத்தமிழ் வித்தகர் சைவ ஆசார சிலராக வாழ்ந்தவர். அவரின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் என்று கூற மீண்டும் அனைவரும் எழுந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர். எனினும் கங்காணி கார்த்திகேயன் ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்தார்.

கங்காணியார் கடுமையாக யோசித்துக் கொண்டிருப்பதை அவதானித்த மூப்பர் என்ன கங்காணியார் ஒரு மாதிரியாக இருக்கிறியள். வீட்டில் ஏதேனும் சிக்கலோ?

மூப்பரின் குரலைக் கேட்டு திடுக்குற்ற கங்காணியார் அப்படியொரு யோசனையும் இல்லை... நேற்று என்ர கையடக்கத் தொலைபேசிக்குக் காசு கட்டப் போனனான். நான் கதைத்தது மிகக் குறைவு. ஆனால் ஏகப்பட்ட காசைக் கட்ட வேண்டியதாக இருந்தது.

கங்காணியார் இவ்வாறு கூறியதும் அதில் ஆர்வப்பட்ட விதானையார் விசுவலிங்கம் என்ன கங்காணியார் சொல்லுறியள். கொஞ்சம் தெளிவாச் சொல்லுங்க என்றார்.


**கங்காணியார்:** விதானையார் என்ர கையடக்கத் தொலைபேசிக்குக் காசு கட்டப் போனனான். கட்ட வேண்டிய கணக்கைப் பார்த்தால் பிழையான கணக்கு போடுற மாதிரி இருக்குது.

இவ்வாறு கங்காணியார் கூறியதும் விதானையார் விறுக்கெண்டு எழுந்தார். கங்காணியார் சொல்லுறது நூறு வீதம். உண்மை. வடபகுதியில கையடக்கத் தொலைபேசியின்ர பக்கேச் சிஸ்ரத்தில கதைக்கிறவியளிட்ட கூடக் கணக்குப் போடப்படுறதோட அதிகூடிய காசும் அறவிடப்படுவது போலத் தெரியுது.

என்ன செய்யிறது எங்கட ஆட்கள் ஏழைச் சனத்திற்குப் பத்து ரூபாய் காசு கொடுக்கப் பஞ்சிப்படுவினம். ஆனால் தொலை பேசிக் கட்டணம், வங்கி இருப்பு இதுகளில ஒரு கணக்கும் பாராயினம். தொலைபேசிக் கட்டணமும் வங்கிக் கணக்குகளும் தேவலோகத்தில இருந்து நடக்கிறது போலவும் அங்க எந்தப் பிழையும் நடப்பது இல்லை என்பது போல்வும் தான் எங்கட ஆட்களின்ர நினைப்பு.வாத்தியார் வைத்திலிங்கம் கோபத்தேடு கூறினார்.

**சாத்திரியார்:** இந்தத் தொலைபேசி நிறுவனங்கள் வடபகுதியில எவ்வளவு காசை அள்ளுகினம். ஆனால் வடக்கில உதவித் திட்டங்கள் எதனையும் செய்யிறதைக் காணல்ல.

**பண்டிதர்:** இங்க இருக்கிற தொலைபேசி நிறுவனங்களில வேலை செய்கிறவர்கள் வடக்கில சில திட்டங்களை நடைமுறைப்படுத்த வேணும் எண்டு தங்கட முகாமையை வலியுறுத்த வேணும். ஆனால் அவர்கள் அப்படி எதுவும் செய்ய மாட்டினம். எங்கட சனத்திட்ட காசை வாங்கி வாங்கி தென்பகுதிக்கு அனுப்பிக் கொண்டே இருக்கினம்.



## தொலைபேசிப் பாவனையை அரைவாசியாகக் குறைப்போம்

**மூப்பர்:** எங்கட சனங்களும் கொஞ்சம் யோசிக்க வேணும். உழைக்கிற காசில அரைவாசியை தொலைபேசிக் கட்டணமாகக் கட்டுறது எண்டால், குடும்ப சீவியம் என்ன மாதிரிப் போகும். ஒரு மாதத்தில ஆகக் கூடியது ஐந்நூறு ரூபாவுக்கு மேல தொலைபேசிக் கட்டணம் போகாமல் இருக்கவேணும் எண்டு நினைக்க வேணும். ஆனால் ஒவ்வொரு வீட்டிலும் பத்துக்குக் குறையாத கையடக்கத் தொலைபேசி.எந்த [illegible]ம் முகநூல் பார்த்தபடி இருந்தால் என்னெண்டுதான் முன்னேற்றம் வரும்.

**வாத்தியார்:** அப்ப ஆலடியில ஒரு தீர்மானம் எடுப்பம். வடபகுதி மக்கள் தொலைபேசிப் பாவனையைக் கணிசமாகக் குறைக்க வேணும். அதனோடு தொலைபேசிக்காக செலுத்துகிற கட்டணத்தை கூடுதலாகப் போடுகினமா? என்பதையும் அவதானிக்க வேணும்.

இவ்வாறு ஆலடி மாநாட்டுத் தலைவர் வாத்தியார் வைத்திலிங்கம் கூற, திடீரென எழுந்த விதானையார், வாத்தியார் எங்கட மக்களுக்கு நடக்கிற ஏமாற்றங்கள், அநீதிகளை உடைத்தெறிய ஆல்டி மாநாடு முன்வர வேணும். அதில ஒண்டு தொலைபேசிப் பாவனையை அரைவாசியாகக் குறைக்கிற நடவடிக்கையாக இருக்க வேணும். இந்தத் தீர்மானத்தைச் செய்யிறதுக்கு பாடசாலை தோறும் அதிபர்கள், ஆசிரியர்கள் கடும் பிரசாரம் செய்வது அவசியம்.

தொலைபேசிப் பாவனை என்பது அத்தியாவசியமான விடயங்களுக்கு மட்டுப்படுத்துவதன் மூலம் வீண் செலவைக் கட்டுப்படுத்தலாம் என்பதை மாணவர்களுக்குத் தெரியப்படுத்தி; மாணவர்கள் மூலமாக தொலைபேசிப் பாவனையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேணும்.

இதைச் செய்தால் இலங்கையின் வடபுலத்தில மாணவர்கள் மேற்கொண்ட முயற்சி காரணமாக கோடிக்கணக்கான தொலைபேசிக் கட்டணம் மீதப்படுத்தப்பட்டது என்ற ஒரு சாதனையை ஏற்படுத்தலாம்.

**கங்காணியார்:** தொலைபேசிப் பாவனையைக் கடுமையாகக் குறைப்போம். தொலைபேசி நிறுவனங்கள் கூடுதலாகக் கணக்கிட்டு வடபகுதி மக்களின் பணத்தை வாரிச் சுருட்டிக்கொண்டு செல்வதை நிறுத்துவோம் என்ற பிரசாரத்தைத் தீவிரமாக மேற்கொள்வது கட்டாயம்.

**வாத்தியார்:** புகைத்தல் உடல்நலத்திற்குக் கேடாகும். மது உடல் நலத்தைப் பாதிக்கும் என்பது போல அதீதமான தொலைபேசிப் பாவனை உங்களை கடன்காரர்களாக்கும், உங்கள் உடல்நலத்தைப் பாதிக்கும் என்றவாறு விளம்பரம் செய்ய வேணும். இவற்றை SOND போன்ற சமூகநலன் கொண்ட பொது அமைப்புகள் மேற்கொள்ள வேணும் என்ற தீர்மானத்தை எடுப்பம்.

இவ்வாறு வாத்தியார் கூற அந்தத் தீர்மானத்தை ஆலடி மாநாடு ஏகமனதாக நிறைவேற்றியது.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் குரல் கொடுத்தார். ஆலடியில் பிரஸ்தாபிக்கப்பட்ட யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி வீதியை பாடசாலை ஆரம்பமாகும் போதும் நிறைவடையும் வேளையிலும் ஒரு வழிப் பாதையாக்க வேணும் என்ற தீர்மானத்தை யாழ்ப்பாண மாநகர 'சபை எதிர்வரும் 20 ஆம் திகதி (20.02.2019) முதல் நடைமுறைப்படுத்துகிறது. அதற்காக யாழ்.மாநகர சபைக்கு ஆலடி மாநாட்டில நன்றி தெரிவிக்கின்றோம் என்று கூற, அதனை தானும் அங்கீகரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# கூட்டமைப்பின் சரிவை நிமிர்த்த வந்த பிரதமர்





மீள்குடியேற்றம் மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சராக டி.எம். சுவாமிநாதன் பதவி வகித்தபோது அவருக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறுத்து வந்தது.

டி.எம். சுவாமிநாதன் பெரிதாக ஒன்றும் செய்துவிடவில்லை என்பதற்காக கூட்டமைப்பு அவரை எதிர்த்ததா? என்றால் இல்லை. மாறாக தமிழர் ஒருவர் அமைச்சராக இருந்தால் அவரை எதிர்ப்பது எங்கள் வழமை என்ற அடிப் படையிலேயே அந்த எதிர்ப்பு இருந்தது.

இப்போது வடக்கு- கிழக்கிற்கான அபிவிருத்தி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் உள்ளது. கடந்த 14 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வடபகுதிக்கு வருகை தந்தபோது அவரின் அமைச்சு அதிகாரிகளை விட கூட்டமைப்பினரே அவரைச் சூழ்ந்து பரிவாரமாக நின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் உரைகளும் அவரின் செயற்பாடுகளும் அவரிடம் ஏதோ இலக்கு இருந்ததை எடுத்துக்காட்டியுள்ளது.

அதிலும் குறிப்பாக கிளிநொச்சியில் அவர் ஆற்றிய உரை வித்தியாசமானதென்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தைக் கலைத்தபோது அதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்துக்குச் சென்றது முதல் ரணில் விக்கிரமசிங்கவின் நம்பிக்கையை உறுதி செய்வது வரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்தது. அந்த நன்றியை வெளிப்படுத்துகின்ற நோக்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்ததா என்றால், இல்லை என்றே கூறவேண்டும்.

அவ்வாறிருந்தால் அதற்கான பரிகாரம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரைத் தொடர்ந்தும் எதிர்க்கட்சித் தலைவராக வைத்திருத்தல் வேண்டும். ஆனால் அதனைச் செய்வதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆர்வம் காட்டவில்லை.

பிரதமர் பதவியை இழந்து விடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க, இரா. சம்பந்தரின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் காப்பாற்றுவதில் எந்த



அக்கறைப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை.

அதேநேரம் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துவதிலும் கூட்டமைப்பின் முக்கிய தலைவர்கள் ஆர்வம் காட்டவில்லை.

இதைப்பார்க்கும் போது இரா. சம்பந்தரைக் கூட்டமைப்பின் ஏனைய தலைவர்கள் ஏமாற்றி விட்டனரோ என்றுகூட எண்ணத் தோன்றும். எனினும் இதுபற்றி எல்லாம் விமர்சிப்பதற்கும் ஆய்வுக் கட்டுரையாக்குவதற்கும் எவரும் தயாராக இல்லை என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

உண்மையில் இரா.சம்பந்தரின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி பறிபோன போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கூட்டமைப்புக்குமான உறவு தெறிக்கும் என்றே பலரும் எதிர்பார்த்தனர்.

ஆனால் சபாநாயகர் கருஜெயசூரியவைக் குற்றம் கடிவதுடன் நின்றுபோன கூட்டமைப்பு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான உறவை மென்மேலும் பலப்படுத்திக் கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருந்தது.

கூட்டமைப்பின் இந்தப் போக்கு ஆச்சரியமானது மட்டுமன்றி புதிய அரசியலமைப்பை அமுல்படுத்துவதற்கான விட்டுக் கொடுப்பனவுகளாக இவற்றைக் கருதலாம் என்றால் அதுவும் ஏற்புடையதன்று.

இதை நாம் கூறும்போது எதை வைத்துக்கொண்டு அப்படியொரு முடிவுக்கு வருகிறீர்கள் என்று நீங்கள் யாராவது கேட்கலாம்.

அவ்வாறானதொரு கேள்வி எழுமாயின் புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் அமுலுக்கு வரக்கூடிய சாத்தியம் இல்லை என்பதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மறைமுகமாக தெரிவித்துள்ளார்.

அதாவது புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை நிறைவேற்றுவதற்குப் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் இல்லாது போய்க்கொண்டிருக்கிறது என்று பிரதமர் ரணில் கூறுவதானது புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தத்தைக் கொண்டுவர முடியாது என்பதைக் குறிப்பதாகும்.

ஆக, அரசியலமைப்புச் சீர்திருத்தமும் வராது என்பதற்குப் பின்னரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான உறவைக் கூட்டமைப்பு பேணிவருவது எதற்கானது எனும்போது தான் தமிழ்மக்கள் மத்தியில் தமக்கு ஏற்பட்டுள்ள இறங்கு முகத்தை நிறுத்தி அதை ஏறுமுகமாக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பயன்படுத்துவதுதான் ஒரே நோக்கம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

அதாவது புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் அமுலுக்கு வராத நிலையில் எந்தத் தேர்தலையும் கூட்டமைப்பு எதிர்கொள்வதென்பது கடினமானதாகவே இருக்கும்.

ஆகையால் அந்தத் தோசத்தை நிவர்த்தி செய்வதற்காக, வடக்கு கிழக்கின் அபிவிருத்தி என்ற பெயரில், ஒரு காட்டாப்பைக் காட்டுவதுதான் கூட்டமைப்பின் ஒரே வழியாகும்.

யுத்தம் முடிவடைந்து பத்து வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் இப்போதுதான் தமிழ்மக்களின் அவலத்தை தாம் உணர்ந்தது போல பிரதமரின் உரை அமைந்துள்ளது.

சரி, அபிவிருத்தியோடு தமிழ் மக்களின் பிரச்சினைகளும் தீரட்டும் என்றால், கிளிநொச்சிக்கு வந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ் அரசியல் கைதி ஆனந்த சுதாகரனின் விடுதலை; ஏனைய தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை; காணாமல் போனவர்களின் பிரச்சினை என்பவற்றைப் பற்றிக் கதைக்காதது ஏன்? என்பது தான் நம் முன் எழும் கேள்வி.

ஆனந்தசுதாகரனின் விடுதலை மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமே இருக்கிறது என்றால், இருக்கும் இடம் விட்டு இல்லாத இடம் சேர்ந்து கூட்டமைப்பு எதைச் சாதிக்கப் போகிறது என்ற கேள்வி நியாயமாகும்.

ஆக, பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் வடபகுதிக்கான விஜயத்தின் மூலமாக இரண்டு இலக்குகளை அடைவது தான் பிரதமரதும் கூட்டமைப்பினதும் நோக்கமாகும். இதில் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீண்டும் தூக்கி நிறுத்தி விடுவது ஒரு விடயமாகும்.

இரண்டாவது நோக்கம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் நடக்க இருக்கின்ற வேளையில், போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையைத் தடுப்பது.

இந்த இரண்டு இலக்குகளினூடு மறப்போம் மன்னிப்போம் என்ற வார்த்தைப் பிரயோகங்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது உரையில் சேர்த்துக்கொண்டார் என்பதே உண்மை அட, இழந்தவன் இன்னமும் நடுத்தெருவில் நிற்க, மறப்பதும் மன்னிப்பதும் யாருக்கானது என்பதுதான் புரியாமல் உள்ளது.

**திருநீலகண்டன்**




# உதவியின் பரிசு



இயற்கையும் காடுகளும் செழித்து வளருகின்ற புளியம்பட்டி எனும் ஊரில் குமரன் எனும் விவசாயி வாழ்ந்து வந்தான். அவன் விவசாயமே தொழில் என்று இருப்பவன். அத்துடன் சில நேரங்களில் கூலித் தொழிலும் செய்து அவன் வாழ்க்கையைக் கழித்து வந்தான். ஒருநாள் அவன் விவசாயம் செய்து முடித்து விட்டு ஓய்வாக இருந்தான். அதனால் சந்தைக்குச் சென்று ஏதாவது கூலி வேலையும் செய் வோம் என எண்ணி புறப்பட்டான். அப்பொழுது ஒரு பலத்த காற்றுடன் மழை பெய்ய ஆரம்பித்தது.

இதனால் அவன் அருகே இரு ந்த கோவிலுக்குள் சென்று மழையில் நனைவதில் இருந்து தப்பித்தான்.

அப்பொ முது கோவிலின் திண்ணையில் ஒரு வயது முதிர்ந்தவர் தலையில் அடிபட்டு இரத்தம் ஒழுக ஒழுக காணப்பட் டார். உடனே குமரன் அந்த பெரியவரை தூக்கிக் கொண்டு அவனது வீட்டிற்குச் சென்று அவனுக்குத் தெரிந்த சித்த மருத்துவத்தைப் பயன்படுத்தி அந்த பெரிய வருக்கு வழியும் இரத்தத்தை நிறுத்தி விட்டு வீட்டிற்கு அருகே இருந்த ஆச்சியிடம் சென்று, எமது ஊர்க் கோவிலில் ஒரு பெரியவரை கண் டேன் அவர் இரத்தத்துடன் காணப்பட்டார். அவரை வீட்டிற்குக்கொண்டு வந்து முதலுதவி செய்து விட்டேன். எனக்கு ஒரே பயமாக இருக்கின்றது.

தயவு செய்து வந்து பாரு ங்கள் என குமரன் கூற ஆச்சியும் குமரனின் வீட்டில் இரு ந்த பெரியவரை பார்த்து விட்டு கூறினார். இவருக்கு தலையில் அடிபட்டதால் இவர் நினைவிழந்து விட்டார். நான் ஒரு மருந்து தருகின்றேன். நீ அதை மூன்று மாதம் சரியாக கொடுத்து வந்தால்அவருக்குநினைவு வந்துவிடும் என்று.


அதன் காரணமாக மூன்று மாதங் களாகக் குமரன் வேலைக் குச் செல்லாமல் அந்தப் பெரியவரைப் பாதுகாப்பாக கவனித்து வந்தான். அதன் பய னாக அந்தப் பெரியவர் தனது சுய நினைவிற்கு வந்தார்.

சொந்த ஊரிற்கு செல்வதாகவும் தனக்கு உதவி செய்ததற்கு நன்றியும் கூறி விட்டுச் சென்று விட்டார். ஒரு வாரத்திற்குப்பின் அந் நாட்டு காவலாளிகள் குமரனை வந்து கைது செய்து அரன் மனைக்குக் கூட்டிச் சென்றார்கள். அங்கே குமரன் கண்ட காட்சியைக் கண்டு அதிர்ச்சி அடைந்தான்.

அது என்னவென்றால் தான் உதவி செய்த பெரியவர் தன் நாட்டு அரசன் என்றும் நான் மாறுவேடத்தில் ஊர் விடயங்களைப் பற்றி அறிய வந்த போது மழை பெய்ததால் கோவிலில் ஒதுங்கியபோது வழுக்கி கீழே விழுந்து விட்டேன். எனக்கு முதலுதவி தந்து என் உயிரைக்காப் பாற்றியிருக்கின்றாய். அதன் காரணமாக எனது மகளைத் திருமணம் செய்து வைப்பதோடு உன்னை இந்த நாட்டுக்கு அரசன் ஆக்குகின்றேன் எனக் கூறிக் குமரனை அரசன் ஆக்கினான். அரசன் ஆனாலும் குமரன் விவசாயமும் செய்தான். ஏனெனில் அது தான் உலகின் உன்னதமான தொழில் என்பதால்.










## தம்பி பிரபாகரன் என்றாரே விக்னேஸ்வரன்?

## யார் என்ன தான் தலைகீழாக நின்றாலும் தமிழருக்கான தீர்வு கிடைக்காது தானே?

## தளபதியின் அடுத்த படம் என்ன?

**சாரு — மானிப்பாய்**

**மேலைத்தேய பண்பாடுகளை நாங்கள் தூக்கி வைத்திருப்பது சரியா?**

அண்மையில் ஒரு மேலைத்தேய நாட்டவரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. எமது பண்பாடு கலாசாரத்தைப் பற்றி வெகுவாகப் புகழ்ந்து பேசிய அவர் உயிர் கொல்லி HIV எயிட்ஸ் இற்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்பே தமிழர் மருந்து கண்டுபிடித்து விட்டார்கள் என்றார் அவர்.

நான் அதிர்ந்து போய்விட்டேன் என்ன என வினவ வெட்கமாக இருந்தது. இருந்தும் ஆவலோடு கேட்டேன். திருக்குறளில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற அது தான் என சொல்லி பெருமை கொண்டார்.

தமது கழிவுக் கலாசாரத்தை துறந்து எமது புனித கலாசாரத்திற்கு அவர்கள் மாற நாமோ அந்த சாக்கடையை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றோம் என வெட்கப்பட்டுத் தலை குனிந்தேன் அந்த வெள்ளையன் முன்பு.

**நேசன் — மிருசுவில்**

**யார் என்ன தான் தலைகீழாக நின்றாலும் தமிழருக்கான தீர்வு கிடைக்காது தானே?**

யுத்தத்தை மறந்து , மன்னித்து நாட்டில் அபிவிருத்திப் பாதையில் முன்னோக்கிச் செல்வோம் என வட மாகாணத்திற்கு மூன்று நாள் விஜயம் செய்த பிரதமர் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் தமிழ்த் தலைமைக்கு முன்பு கூறியிருக்கின்றார்.

போர்க்குற்றமே நடைபெறவில்லை. எந்தக் காரணத்திற்காகவும் படையினரைத் தண்டிக்க மாட்டோம் என தெற்கிற்கு வாக்கு கொடுத்த ஆட்சியாளர்கள் இப்படிக் கூறுவதன் பொருள் என்ன என்பது தான் இன்னும் புரியவில்லை.

**தாரா — மாதகல்**

**யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்பது எதுவோ?**

கலாநிதி ஆறு.திருமுருகன் கூறிய கதை ஒன்று. இரவு 10 மணி வீட்டில் திடீரென மின்சாரம் துண்டிக்கப்பட்டுவிட்டது.

தந்தை மகனிடம் வெளியே போய்ப் பார் யார் வீட்டிலாவது மின்விளக்கு எரிகிறதா என்று. வெளியே சென்று பார்த்த மகன் வந்து அப்பா ஊரே இருண்டு போய்க் கிடக்கின்றது என்றதும் நெஞ்சில் கை வைத்து பெரு மூச்சு விட்ட அவர் இப்பத் தான் நிம்மதி.
என்ர வீடு இருண்டு கிடந்தால் இந்த ஊரே இருண்டு கிடக்க வேண்டும் என்று கூறி நிம்மதி கொண்டார்.

**சேந்து — யாழ்ப்பாணம்**

**காதலர் தினத்தை எதிர்த்து இந்தியாவில் நாயைத் திருமணம் செய்தாராமே ஒரு இளைஞன்?**

அவனுக்குக் காதலி கிடைக்கவில்லை என்ற கடுப்பில் நாயைத் திருமணம் செய்து தனது எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றான். நாயைத் திருமணம் செய்ய அவர் எடுத்த முடிவு சரி என்பதை ஒரு பெண்ணைத் திருமணம் செய்து மூன்று வாரத்தில் உணர்ந்து கொள்வான். இது சர்வ நிச்சயம்.

**கௌதம் — அல்வாய்**

**தளபதியின் அடுத்த படம் என்ன?**

மைக்கல் என சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது. இன்னும் சம்பந்தப்பட்டவர்களினால் உறுதிப்படுத்தப்படவில்லை.

**சுபன் — குளப்பிட்டி**

**அரசாங்க வேலைக்கும் தனியார் வேலைக்கும் என்ன வித்தியாசம்?**

காலையில் இட்லி மாதிரி அலுவலகத்திற்குள் வந்து மாலையில் நூடில்ஸ் மாதிரி வெளியில் போனால் அது தனியார் வேலை. அலுவல கத்திற்கு நூடில்ஸ் மாதிரி வந்து இட்லி மாதிரி வெளியில் போனாஅதுஅரசவேலை(சிரிப்பதற்குமட்டும்)

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532 என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**ஜுபா — கரவெட்டி**

**சிங்களத் தலைமைகள் ஏமாற்றும் போது தமிழ்த்தலைமையும் ஏமாற்றும் தானே?**

நான் அடிப்பது போல அடிக்கின்றேன் நீ அழுதுபோல நடி என்பார்களே. காலம் காலமாக இது தான் நடந்து கொண்டிருக்கின்றது.

பெரும்பான்மை ஆட்சியாளர்களின் பசப்பு வார்த்தைகளுக்கும் அற்ப சொற்ப சலுகைகளுக்கும் விலைபோய் தமிழர்களை நாச மறுத்துவிட்டு இறுதியில் அடிப்பதும் நடிப்பதும் தான் காலங்காலமாக நடந்து கொண்டிருக்கிறது.

**சிவாசா — யாழ்ப்பாணம்**

**கூட்டமைப்பை விட ஆளுநர் பரவாயில்லை போலத் தெரிகிறதே?**

·இவர்களைவிட எல்லோருமே பரவாயில்லை என்பது தான் உண்மை.

**சிந்து — சுழிபுரம்**

**பண்பு நிறைந்திருப்பது பாமரரிடமா? படித்தவர்களிடமா?**

பூட் சிற்றியில் அடித்திருக்கும் விலைகளுக்கு அடுத்த கதை இன்றி வழங்கும் படித்தவர்கள் பெட்டிக்கடைகளில் வாழைப்பழத்திற்கும், வெங்காயத்திற்கும் விலை குறைப்புக்காகப் பேரம் பேசுகிறார்கள். இப்போது சொல்லுங்கள் பண்பு யாரிடம் இருக்கின்றது.

**தர்ணிகா — கௌந்தில்**

**இப்போது அரசியல் ஹீரோ யார்?**

பேசுவதற்கு மேடை கிடைத்துவிட்டால் அனைவரும் ஹுரோதான். என்ன சிலருக்கு பொய் சொல்ல வராது. சிலருக்கு வாயைத் திறந்தால் பொய்தான் வரும். அளவானவர்களுக்கு தொப்பியை மாட்டி அழகு பாருங்களேன்.

**தமிழன் — யாழ்ப்பாணம்**

**தமிழர் தலைமையின் நோக்கம், நிலைப்பாடு என்ன?**

நோக்கமும் நிலைப்பாடும் கொண்டு அவர்கள் பயணிப்பது போலத் தெரியவில்லை. ஆட்சியாளர்களின் தாளத்திற்கு ஆடுவது மட்டும் நோக்காகக் கொண்டு செயற்படுகிறார்கள் போலத் தெரிகிறது.

**பித்தன் — நெல்லியடி**

**பேஸ்புக் போராளிகளை உங்களுக்குப் பிடிக்காது போல?**

போராளிகளைப் பிடிக்கும். அவர்கள் தியாகங்களை நினைக்க இதயம் துடிக்கும். ஆனால் இந்த பேஸ்புக் போராளிகள் சைக்கோக்கள் என்பதே எமது கண்ணோட்டம்.

**நேதாஜி — வதிரி**

**தம்பி பிரபாகரன் என்றாரே விக்னேஸ்வரன்?**

அரசியல் பேச்சுகளில் இரண்டு வகை இருக்கின்றது. ஒன்று வாக்குகள் வாங்குவதற்காக மக்களை உசுப்பேற்றப் பேசுவது. மற்றையது மக்களின் மனதறிந்து அவர்களின் நலன் சார்ந்து இதய சுத்தியுடன் பேசுவது. என்னைப் பொறுத்தவரை விக்னேஸ்வரன் ஐயாவின் பேச்சுக்கள் சுயநலம் சார்ந்து, தேர்தலை நோக்காகக் கொண்டதல்ல. என்றும் அவர் மக்கள் நலனை சார்ந்து மக்களின் நாடியை உணர்ந்து பேசிக் கொண்டிருப்பவர்.


# பதில் சொல்ல வந்தேன்

வார்த்தைகளை யாசிப்பதிலேயே
வாழ்நாளை செலவழித்திருந்தேன்
வாழவழியின்றியும்
வார்த்தைகளின்றியும்
வாழும் ஒருவனிடம்
வார்த்தைகளை வாடகை
வாங்கி வந்தேன்!

காலதாமதத்தால்- என்மீது
காலக்கெடு விதித்திருக்கலாம்
கானகத்தில் தொலைந்த- என்
கானத்தை மீட்டெடுக்க
காலதாமதமாகிவிட்டது!

கனவினை எட்டிப்பிடிக்க
கடும் முயற்சியில்- நான்
கவிபாட மறந்து விட்டேன்
கவி புனைய வேண்டிய
கட்டாயத்தால்-மறுபடி
கரங்கள் எழுத ஆரம்பித்துவிட்டன!
கடுகளவு மூளையும்
கனத்த இதயமும்
கடலளவு யாசித்து நிற்கின்றன
காணாத வார்த்தைகளை
என் தமிழ்மொழியில்!
காலம் அதிகமில்லை- எனக்கு
கதைபேசிட வருகின்றேன்!

**உ.மாதவி, கோண்டாவில்**



## கவிதைக் கலசம்

# புதுமனை புகுவிழா

பெரியோரே வாரீர் பெருந்தகையோரே வாரீர்
உற்றோரே வாரீர் சுற்றத்தோரே வாரீர்
அயலவரே வாரீர் அன்புடையோரே வாரீர்
எம் புதுமனை புகுவிழா கண்டிட வாரீர்

தமிழுக்கு தையினிலே ஆதவன் தினத்தினிலே
ஆங்கில பத்தினிலே எம் பதி மாற்றம்
அது புதுமனை புகுதலாய் பெருங்கொண்டாட்டம்
அதைக்கண்டிட வாரீர் விருந்தோடு களிப்புற வாரீர்

நிறைகலசம் முதலிருத்தி சிவசின்னம் அதிலிருத்தி
அந்தணர் விதிப்படி ஆண்டவன் படம் வைத்து
அருளாசி வேண்டி புதுமனையில் புதுப்பானை கொண்டு
பால் பொங்கி வழிய புத்தின்பம் பெறும்
எம்மனை பார்த்திட வாரீர் அதை வாழ்த்திட வாரீர்

*தனசீலன் லக்ஸ்மன், நல்லூர்*

# தொடரும் துயரங்கள்

விழிப்பில்லா சிந்தனையால்
வேரறுந்த விருட்சங்களாய்
வீழ்ந்து கொண்டு
விபத்துக்களுக்கும்
விபரீதங்களுக்கும்
கைகொடுத்து
பொறுப்புக்களை புறம்தள்ளி
ஏணிபோட்டு ஏற்றுகிறோமே
முள்ளிவாய்க்காலில்
எஞ்சிப்போன மரணங்களை

நல்லூர் தேன்நிலா

# தத்தளிக்கும் படகாய் தமிழினம்

வரும் பழி வளியிலும் நிக்காது
பட்டமரம் தொட்டாலும் துளிர்க்காது
வரும் கஷ்டம் தொடர்ந்து வருமோ
யாம் அறியேன்

ஆராரோ ஆரிரரோ தாய் பெத்த
சிசுவே தந்தை உயிர் கொடுத்த உயிரே
நடப்பது அறியாமல் மடியில் உறங்குகிறாய்

நாதியற்று இருக்கையில் மடியில்
அப்பாவியாக நீ உறக்கம் விதியா
இல்லை சதியா விசமிகளின் கொடையா
காலத்தின் படைப்பா

சுதந்திரப் பறவைகளாக
திரியும் வயதில் சிறகு உடைந்த
பறவையாக திசை அறியாமல்
அடங்கிப் போனதும்
ஆசைகள் இழந்து நாதியாக
இருப்பது யார் செய்த சாபமோ

ஆறுபடை வீடு கொண்ட திரு முருகா
ஆனந்தமா நீ இருக்கிறாய்
ஆழ்கடலில் தத்தளிக்கும் படகு போல்
எங்கள் வாழ்க்கையில்
துணை இன்றி தவிக்கிறோம்

எஸ்.ஏ.கோகுலன், கோப்பாய்

# முன்வரிசை ஆசனங்கள்

அழிவுகளுக்கும்
ஆட்சியாளர்களுக்கும்
துணைபோன தலைமை
நடிக்கிறது, நாடகமாடுகிறது...

கழிவுகளை அகற்றும்
கான்களாய்- எமை
நினைக்கின்றார் போலும்....

நொடிக்கு முன்னூறு
முடிவுகளை மாற்றும்
மடைமைத்தனம் எம் தலைமையிடம்
நமக்கது தீர்வு தராதே...

காணாமல் போனவரும்
காணிகளை இழந்தோரும்
வீணாய் வீதியில் நிற்கின்றார்
நாமுண்டு நமக்கு
நடுகல் உண்டு என்று
பேதலித்துத் திரிகிறார்....

ஏன் இந்தக் கொடுமை?
எமதருமைத் தலைமையே!
தேர்தல் காலங்களில்
தேன்பூசிய வார்த்தைகளால்
எம்தேகம் தடவிடுவீரே

வீரவசனம் பேசி
விடலைகளை உசுப்புவீரே-இப்போ
முன் இருக்கைகளில்
விருந்தினராய் வீற்றிருக்கும் போது
நினைவு வரலையோ?

மாலைகளுக்கும்- போலி
மரியாதைகளுக்கும்
அடித்தாருடன் கூடி
ஆராரோ பாடுகிறீரே
நியாயமோ, இது நீதியோ?

மாவை. நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்- 435



# எனக்கு வந்த உடன் பிறப்போ?

அன்றொரு நாள்
நான் பிறந்ததும்
வீசப்பட்டேன் நான் தனியாக
வாழப்பிறந்தேன் என்று
சிந்தையில் வரும்போதே
நீ என் நிலைக்கு
இந்த வழியே வந்தாயே
எனக்கு வந்த
உடன் பிறப்பாய்...

**ர.அபர்ணன்**
**சண்டிலிப்பாய்**

# மௌனத்தின் தேடல் -436



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
/ எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## பரிதவிப்பு

எறிகணை வீச்சில் தாயையும்
காணாமல் போனே பட்டியலில்
தந்தையையும்
பறிகொடுத்துவிட்டு
என் தொப்புள் கொடி உறவான
இந்தப் பச்சை மண்ணை
ஏந்தி நிற்கும் எனக்கு
ஒரு வழி காட்டுவீர்களா
உறவுகளே!

**க.மலர், திருநெல்வேலி**

## அண்ணன் உன் துணை

கைகளிலும் மடியிலும் ஏந்திய அப்பனும்
அம்மையும் பிரிந்து விட்டார்களா?
இல்லை பிரிக்கப்பட்டார்களா?
அண்ணன் உன் துணை- அவனது
கரங்கள் ஏந்தி நிற்கும் பாலகனே!
உன் உயிர் பிரியும் நிலையா தம்பி!
ஓடிச்சென்று அவன் உயிரைக் காப்பாற்று
உனக்கும் துணையாவான்

*அபி குலமாலிகா*
*சங்கானை*

## தவப்புதல்வன்

தாலாட்ட தாயின்றி
தடுமாறும் அண்ணன் நீ
துணையற்ற பிள்ளையின்
துயர் நீக்க என்னும்
தன்னலமற்ற
தவப்புதல்வன் நீ
பெற்றவரிங்கே
வீதியில் விட்டனர்
பிள்ளையை
கையில் ஏந்தி
கருணை கொண்டாய்
அன்னையிலும் மேலாய்
அன்பு செலுத்தும் நீ
அகலத்திலென்றும்
ஆண்டவனுக்கு நிகராம்

*சி.திவ்வியா*
*யா.ப.மெ.ம.வி*

## ஏன் இந்தப் பார்வை

நான் பெற்ற பிள்ளையை
மீட்டெடுப்பதற்காக
எத்தனை பேரிடம்
கையேந்தினேன்
எத்தனை பேரிடம்
வாய்விட்டு அழுதேன்
அப்போது உங்கள்
பார்வை கீழ் நோக்கியது
இப்போது என் பிள்ளையை
இழந்து நிற்கின்றேன்
உங்கள் பார்வை
மேல் நோக்கியது
இனிமேலாவது
உங்கள் பார்வை
அர்த்தமுள்ளதாய்
இருக்கட்டும்

மேரி அல்போன்சா
குருநகர்

## நெஞ்சம் பேசுதடா

வழி மாறிப்போச்சு- இனி
வழிகாட்ட யார் எமக்கு
படைத்தவன் தெருவில்
பரிதவிக்க விட்டுவிட்டான்
ஏழை என்பது அடையாளம்- என்று
ஓரங்கட்டிய வஞ்சகர் உலகம்தனில்
என்கையும் தன்னம்பிக்கையாய்
தழைத்தோங்குவேனோ

*நிரூஷினி-ஆனந்தராஜன்*

## இது நீதியோ

நட்போடு பழகினாய்
நம்பிக்கை வந்தது
என் பிள்ளையை
உன்னிடம் ஒப்படைத்தேன்
ஆனால் நீயோ
மாற்றான் பெற்ற பிள்ளை
என்று தெரிந்தும்
குழந்தையை மறைக்க
நினைக்கிறாயே
இது நீதியோ

அ.அன்ரனி, குருநகர்

## தெய்வங்கள்

தன்னலம் கருதா
பொன்மனத்தாயும்
கள்ளம் கபடம்
இல்லாக் குழந்தையும்
கண்கண்ட தெய்வங்கள்
அன்பு நதி பெருக
காரணகர்த்தாக்கள்
அசாதாரணமாயிவர்களுக்கு
கவலையென்றால்
கண்டிப்பாய் முண்டியடித்து
கல் நெஞ்சும் கண்கலங்கி
கருணை காட்டும்

*க.நாகராசா, நுணாவில்*

## கடன் அறவிட

கடன் அறவிட காட்டு தர்பாராய்
உடல் கேட்கும் ஊமை நீதிபதிகள்
படலை திறப்பதால் பாரில் பச்சிளம்
பாலகர் மரணமும் கொலைகளும்
நடைமுறைச் சட்டமாய் நலிந்தன
நாளும் மருத்துவமனையிலும் சிசு
நாசூக்காகக் கடத்தப்படுவதும்
நீளும் புதினமாய் நிலைத்தே விட்டன

வை.க.தவமணிதாசன்-கொக்குவில்

**“மிஸ் அம்மா சொல்லுறா நிறையக் காசு செலவழிச்சு வைத்தியம் பார்த்திருந்தால் அக்கா நடந்து திரிஞ்சிருப்பாவாம். ஆனால்... அக்கா இப்ப சக்கர நாற்காலியிலதான் உலாவாறவ. எனக்கு அக்காவைப் பார்க்கிற போதெல்லாம் நான் படிச்சு ஒரு நரம்பியல் நிபுணராய் வந்து அக்காவுக்கு வைத்தியம் செய்து அவவை எழும்பி நடக்க வைக்க வேணும் என்று ஆவேசமாய் இருக்கும்**

# இதயத்துடிப்பு

மலரன்னை




புதுவருடம் பிறந்து பாடசாலை ஆரம்பிக்கப்படும் அந்த நாள் மாணவர்களுக்கு மட்டுமல்ல... ஆசிரியர்களுக்கும் பல எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்துவதால் அவர்களது மனநிலையும் ஏறத்தாழ மாணவர்களை ஒத்ததாகவே இருக்கும். அத்தகைய ஒரு மனப்பாங்குடன் தான் கவிதா பாடசாலைக்குள் காலடி எடுத்து வைத்தாள்.

தனது மணிக்கட்டை உயர்த்தி நேரத்தைப் பார்த்தவள் திடுக்கிட்டாள். நேரம் 7.26 ஐக் காட்டியது. அவசர அவசரமாக நடையைத் துரிதப்படுத்தியவள் அலுவலக அறைக்குள் நுழைந்தாள். அங்கு வேறு சில ஆசிரியர்களும் ஙகவிரல் அடையாளத்தைப் பதிவு செய்வதற்காக நின்று கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவராகத் தன்னையும் இணைத்துக் கொண்டவள் பட்டனை அமர்த்தும்போது நேரம் 7.29. மனத்திருப்தியுடன் அறையை விட்டு வெளியேறியவள் அதிபரின் காரியாலயத்திற்குள் நுழைந்தாள். அங்கு ஏற்கனவே தயாரித்து வைக்கப்பட்டிருந்த அவளுக்குரிய நேரசூசியைப் பெற்றுக்கொண்டவள் அதனை ஒருதரம் ஆய்வு செய்து பார்த்ததும் நிம்மதியடைந்தாள்.

ஆறாம், ஏழாம், எட்டாம் வகுப்புக்கு தமிழ், சமயம் ஆகிய பாடங்கள் அவளுக் குக் கொடுக்கப்பட்டிருக்கும் பொறுப்பு. அத்துடன் ஆறாம் வகுப்பின் ஏ பிரிவுக்கு அவளை வகுப்பாசிரியராகவும் போடப்பட் டிருந்தது. தனக்கென ஒதுக்கப்பட்டிருந்த கடமை அவளுக்குத் திருப்தியை அளித்தது. தனக்குரிய வகுப்பறையை நோக்கி அவள் மெதுவாக நடந்தாள்.

அங்கே வகுப்பறையில் அத்தனை பேரும் புதுமுகங்கள். எல்லோரும் ஆரம்பப் பாடசாலைகளில் கல்வியை நிறைவு செய்துவிட்டு புதுப்பாடசாலைக்கு வந்திருப்பவர்கள். எல்லோரும் வெவ்வேறு பாடசாலைகளில் கல்வி பயின்று புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்கொண்டவர்கள்.

“ குட் மோனிங் ரீச்சர்”

கோரஸாக ஒலித்த குரல்களுக்குரியவர்களை ஒருதரம் கண்களைச் சுழற்றி நோட்டம் விட்டவள் “குட் மோனிங் சிற்டவுண்” என்று குரல் கொடுத்தாள். வகுப்பறை அமைதியைத் தழுவிக் கொண்டது. கவிதா வாய் திறந்தாள்.

“ பிள்ளைகளே! நீங்கள் எல்லோரும் இந்தப் பாடசாலைக்கு புதிதாக வந்திருக்கிறீர்கள். முதலில் நாங்கள் எங்களை மற்றவர்களுக்கு அறிமுகம் செய்து கொள்வோம். எனது பெயர் கவிதா இளங்கோவன். உங்கள் வகுப்பிற்கு பொறுப்பாசிரியராக வந்திருக்கிறேன். இந்தப் பாடசாலையில் நான் ஐந்து வருடங்களாக சேவை செய்து வருகிறேன்”

முதலில் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டவள் வகுப்பின் முதல் வரிசையிலிருந்த மாணவர்களை ஒவ்வொருவராக எழுந்து நின்று தங்களை அறிமுகப்படுத்திக்கொள்ளுமாறு அழைப்பு விடுத்தாள்.

“ எனது பெயர் தமிழரசன். எனது அப்பா சிவகுமார். பாங்கில் மனேஜராக இருக்கிறார். அம்மா இளவதனி. ஆசிரியராக இருக்கிறா. நான் கல்வியங்காடு ஆரம்பப் பாடசாலையிலிருந்து வந்திருக்கிறேன்.

“ தமிழரசன்! உம்முடைய இலட்சியம் என்ன? எல்லோருக்கும் ஒரு இலட்சியம் இருக்கத்தானே செய்யும். நீர் படித்து எதிர்காலத்தில் என்ன தொழில் செய்ய வேண்டுமென விரும்புகிறீர்”

“ மிஸ்! என்னுடைய அம்மா நான் படித்து ஒரு எஞ்சினியராக வரவேண்டுமென்று சொல்லுறவ. அவவின்ரை விருப்பத்தை நிறைவேற்றவேணுமென்று விரும்புகிறேன்”

“ சரி நீர் இரும். மற்றாள் எழும்பிச் சொல்லும்”

“ எனது பெயர் திருமாறன். என்னுடைய அப்பா மனோகரன். அம்மா சிவமணி. அப்பா தோட்டம் செய்யிறவர். எனக்கும் தோட்டம் செய்யத்தான் விருப்பம். அப்பா தோட்டத்திற்கு தண்ணி கட்டுறபோது நானும் உதவி செய்யிறனான். பச்சைப் பசேல் என்ற மரங்களுக்குக்கு நடுவால வரம்பில தண்ணி பாயிறபோது நல்ல வடிவாய் இருக்கும் ரீச்சர். எனக்கு அதிலை காலை நனைச்சு விளையாடுற தெண்டால் கொள்ளை விருப்பம். ஆனால் அம்மா விடமாட்டாவாம். “அப்பாவை மாதிரி நீயும் வெயிலுக்கை நிண்டு கஷ் டப்படக் கூடாது. நீ நல்லாய்படிச்சு உத்தி யோகம் பார்க்கவேணும்” எண்டு சொல்லுறவ.

சொல்லும் போது அவனது முகத்தில் தோன்றிய ஏக்கத்தைக் கவனித்த கவிதா, “திருமாறன்! நீர் ஒண்டுக்கும் கவலைப் படத் தேவையில்லை. நீர் நல்லாய்ப் படிச்சு ஒரு விவசாய விஞ்ஞான பட்டதாரியாய் வரலாம்”

“அப்படி வந்தால் தோட்டம் செய்யலாமோ ரீச்சர்”

குறுக்கறுத்த மாணவனைக் கூர்ந்து பார்த்துவிட்டு தொடர்ந்தாள் கவிதா.

“ ஓ... நீர் ஒரு விவசாயப் பட்டதாரியாக வந்தால்... நல்ல இனப்பயிர்களை எங்களுடைய விவசாயிகளுக்கு அறிமுகம் செய்து அவையை வழி நடத்தலாம். நவீன முறையில் விவசாயம் செய்து நல்ல பலனைப் பெறலாம். அது மட்டுமல்ல இந்த நாட்டையை முன்னேற்றலாம்”

“ அப்பிடியே ரீச்சர். அப்ப நான் கவனமாகப் படிக்கிறன்”

அவனது முகமலர்ச்சியையும் கண்களில் தோன்றிய ஆர்வத்தையும் கண்டு மெய் சிலிர்த்துப் போனாள் கவிதா.

இப்படியாக அறிமுக நிகழ்வு அங்கு அரங்கேறிக்கொண்டிருந்தது. அதிகமான மாணவர்கள் தாங்கள் டாக்டராக வரவேண்டும். நாட்டு மக்களுக்கு சேவை செய்யவேண்டும் என்பதையே இலட்சியமாகக் கொண்டிருந்தனர்.

இரண்டாம் வரிசையில் இருந்த மாணவன் இனியனுடைய முறை வந்தது. அவன் எழுந்து நின்று கம்பீரமாகச் சொன்னது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

“ எனது பெயர் இனியன். எனது அப்பா பெயர் சபேசன். தபால் ஆபிஸில பியோனாக வேலை செய்யிறார். அம்மாவின் பெயர் மனோன்மணி. வீட்டு வேலைகள் செய்யிறவ. ஒரு சிறந்த நரம்பியல் நிபுணராக வரவேணும் என்பதுதான் எனது விருப்பம்” சொல்லிக்கொண்டே போனவனை குறுக்கறுத்தாள் கவிதா.

“ இனியன்! உமக்கு உந்த விருப்பம் ஏற்பட்டதற்கு காரணம் எதுவும் இருக்கிறதா?”ஆமென்று தலையை மேலும் கீழும் ஆட்டியவாறு முகத்தில் சட்டென ஒரு மாற்றம். கம்மிய குரலில் அவன் தொடர்ந்தான்.

“ எனக்கு இதயா என்றொரு அக்கா இருக்கிறா. அவவால நடந்து திரிய ஏலாது. இறுதிக்கட்டப் போரில அக்காவுக்கு செல்லடிபட்டுக் காயப்பட்டதால முள்ளந்தண்டு நரம்பு பாதிக்கப்பட்டு இரண்டு காலும் சுரணையில்லாமல் போயிட்டுது. அப்ப அவவுக்கு மூன்று வயதாம். அம்மா சொன்னவ. நாங்கள் உயிர் தப்பி வந்ததே பெரிய காரியம் என்று அடிக்கடி சொல்லுறவ. நான் அப்ப கைக்குழந்தையாம். எனக்கொண்டும் தெரியாது”

சிறிது நேரம் இடை நிறுத்திவிட்டு மீண்டும் தொடர்ந்தான்.

“மிஸ் அம்மா சொல்லுறா நிறையக் காசு செலவழிச்சு வைத்தியம் பார்த்திருந்தால் அக்கா நடந்து திரிஞ்சிருப்பாவாம். ஆனால்... அக்கா இப்ப சக்கர நாற்காலியிலதான் உலாவாறவ. எனக்கு அக்காவைப் பார்க்கிற போதெல்லாம் நான் படிச்சு ஒரு நரம்பியல் நிபுணராய் வந்து அக்காவுக்கு வைத்தியம் செய்து அவவை எழும்பி நடக்க வைக்கவேணும்என்று ஆவேசமாய் இருக்கும். அதுக்காகத்தான் நான் கஷ்டப்பட்டு படிக்கிறன்”

நீண்ட அவனது பேச்சு வகுப்பறையிலுள்ள அனைவரையும் மெய் மறக்கச் செய்துவிட்டது. அங்கு நிலவிய அமைதியை கவிதா முறியடித்தாள்.

“இனியன்! உம்முடைய இலட்சியத்தை நீர் அடையவேண்டுமென நான் மனப்பூர்வமாக வாழ்த்துவதோடு இறைவனையும் வேண்டுகின்றேன்”

கவிதாவின் குரலில் நடுக்கம். அது உணர்வலைகளின் கொந்தளிப்பினால் ஏற்பட்டிருக்கலாம். அவளது இதயத்தில் இத்தனை காலமும் பொத்தி வைத்திருந்த குளவிக்கூட்டை கல்லெறிந்து தாக்கியது போன்றதோர் செயற்பாட்டால் அவள் துடித்துப் போனாள். எண்ண அலைகளின் வெளிப்பாடு தாக்கப்பட்ட குளவிகளாய் சிறகடித்துப் பறந்துவந்து அவளைக் கொட்டித் துன்புறுத்தத் தொடங்கின.

அவளது மகன் கபிலன். அவனும் யுத்தத்தின் கோரப்பிடியில் அகப்பட்டு நசியுண்டு சிதைந்து போனவன். சீறிப் பாய்ந்து வந்த எறிகணையொன்று அவனது வலது காலை தொடைப்பகுதியிலிருந்து குறுக்கறுத்து துண்டாடி விட்டது. ஒரு காலை இழந்து விட்ட போதிலும் அவனைத் தாங்கி காப்பாற்ற கவிதாவும் அவளது கணவனும் தயாராகத்தான் இருந்தனர். எனினும் கடும் இரத்தப் போக்கு முதலுதவிச் சிகிச்சையையும் மீறி அவனது உயிரைக் குடித்துவிட்டது. புத்திர சோகத்தினால் புத்திபேதலித்துப் போனவளின் சித்தத்தை தெளியவைக்க அவளது கணவன் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல.

காலப்போக்கில் அவளது மனம் தெளிவு பெற்றது. தனது பிள்ளை இப்போது உயிருடன் இல்லை என்பதை ஏற்கமறுத்து அடம்பிடித்த மனம் இப்போது அந்தப் பிரிவுச் செய்தியை பதிய வைத்துக் கொண்டது. “ எனக்கு அவன் மகனாக உயிருடன்உலா வந்திருக்கலாம்

ஆனால்... அவனுடைய நிலை... செயற்கைக்கால் பொருத்த முடியாத நிலையில் ஊன்று கோலுடன் நடமாடித் திரிய... கம்பீரமான தோற்றத்தை கொண்ட பிள்ளை அவன் ஒருபோதும் விரும்பியிருக்கமாட்டான். அவனுடைய ஆயுள் அவ்வளவுதான்”

“ம்...”

ஏக்கத்துடன் ஒரு பெருமூச்சு அவளது இதயத்தின் சுமையை வெளியேற்றி காற்றுடன் கலந்து சங்கமமாகியது. அவளையறியாமலே அவளது உள்ளுணர்வின் உந்துதலினால் கண்களிரண்டையும் நீர் திரையிட்டு மறைக்க, பொலபொலவென கண்ணீர் கன்னங்களில் கோடிட்டு மடியில் விழுந்து தெறித்தன. அப்போதுதான் தனது சூழலைப் புரிந்து கொண்டவளாய் கவிதா, தனது கைப்பையினுள் இருந்த கைக்குட்டையை எடுத்து கன்னங்களை அழுந்தத் துடைத்தாள்.

ஆசிரியரின் நிலைகண்டு மாணவர்கள் அதிர்ச்சியுற்றார்கள். இனியன் மட்டும் தனது இருக்கையிலிருந்து எழுந்து அவளிடம் வந்தான்.

“ மிஸ்! கவலைப்படாதையுங்கோ. நான் எப்படியும் படிச்சு ஒரு பெரிய நரம்பியல் நிபுணராக வந்து எங்கட அக்காவை எழும்பி நடக்க வைப்பன். நீங்களே இருந்து பாருங்கோவன்”

அந்தப் பிஞ்சு நெஞ்சத்தின் இதயத்துடிப்பு, மகனது பிரிவினால் கறை படிந்து போன அவளது இதயத்தை வருடிச் சென்றதுடன் வாழ்க்கையில் ஒரு எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியது.

# அமெரிக்கா-வடகொரியா சமாதான முயற்சி வெற்றி தருமா?

வடகொரியா அதன் அணுசக்தித் திட்டத்தைக் கைவிடுவதை வலியுறுத்தும் வகையிலான சமாதானப் பேச்சுகள் தொடர்ந்தபடி உள்ளன. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கும் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுக்கும் இடையில் வெகுமும்முரமாக பேச்சுகள் தொடர்கின்றன.

இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் முரண்பாட்டுக்குத் தீர்வு காண்பதற்கு இரு நாட்டுத் தலைவர்களின் சந்திப்புத் தொடர்வது சிறந்ததொரு நகர்வு எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.



இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையிலான முதற் கட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சமாதானப் பேச்சு கடந்த வருடம் ஜூன் மாதம் சிங்கப்பூரில் நடைபெற்றிருந்தது. இதனைத் தொடர்ந்து, சுமார் 8 மாதங்களின் பின்னர் இரண்டாவது தடவையாகவும் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுடன் சமாதானப் பேச்சை முன்னெடுப்பதற்கு சாதகமான சமிக்ஞையை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வெளிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், வியட்நாம் தலைநகர் ஹனோயில் இம்மாதம் 27, 28ஆம் திகதிகளில் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுடன் இரண்டாம் கட்டச் சந்திப்பை தான் நடத்தவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கடந்த வாரம் அறிவித்துள்ளார்.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுடன் இரண்டாம் கட்டச் சந்திப்பை நடத்த வியட்நாம் தெரிவு செய்யப்பட்டமைக்கு ஒரு சில காரணங்கள் இருக்கின்றன. வியட்நாம் தெரிவு செய்யப்பட்டமை சிறந்ததொரு தெரிவு எனவும் கருதப்படுகின்றது.

1965ஆம் ஆண்டு முதல் 1973ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் அமெரிக்காவுக்கும் வியட்நாமுக்கும் இடையில் பாரிய இரத்தம் தோய்ந்த போர் இடம்பெற்றதுடன், இதில் பாரிய உயிரிழப்புகளும் சம்பவித்திருந்தன. அமெரிக்கர்கள் "வியட்நாம் போர்" எனவும் வியட்நாமியர்கள் "அமெரிக்கப் போர்" எனவும் இதனை அழைத்தனர். இப்போரின் போது, வியட்நாம் பாரிய அழிவைச் சந்தித்திருந்தது. இதன் பின்னர் இவ்விரு நாடுகளும் தமது உறவை சிறந்த முறையில் மீளக்கட்டியெழுப்பின.

அத்துடன், அமெரிக்க-வியட்நாம் போருக்குப் பின்னர் நவீன பொருளாதாரத் திட்டம் மற்றும் அரசியல் சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு வியட்நாம் முன்மாதிரியாகக் காணப்படுவதுடன், அமெரிக்காவுடன் வியட்நாம் சிறந்த உறவைப் பேணி வருகின்றது. வடகொரிய - அமெரிக்க ஜனாதிபதிகளுக்கு இடையிலான சந்திப்புக்கு வியட்நாம் தெரிவு செய்யப்பட்டமை சிறந்ததொரு தெரிவு என சுட்டிக் காட்டப்படுகின்றது. இதனைத் தென்கொரிய ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளரும் வெள்ளை மாளிகை அதிகாரியொருவரும் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், அமெரிக்க-வியட்நாம் போருக்குப் பின்னர் வியட்நாமில் காணப்படும் நவீன பொருளாதாரத் திட்டம் மற்றும் அரசியல் சீரமைப்புத் திட்டத்தை, வடகொரியாவும் அதன் அணுசக்தித் திட்டத்தைக் கைவிட்டு பின்பற்றிச் செல்ல வழிவகுக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறான நிலையிலேயே அமெரிக்க-வடகொரிய ஜனாதிபதிகளின் இரண்டாம் கட்டச் சந்திப்புக்கு வியட்நாம் தெரிவு செய்யப்பட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது.

மேலும்; 1953ஆம் ஆண்டு இரு கொரியாக்களுக்கு இடையிலான போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து சர்வதேச நாடுகளிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்த வடகொரியா, தனது செயற்பாடுகளை தன்னிச்சையாக முன்னெடுத்து வந்தது.



1965ஆம் ஆண்டு முதல் 1973ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அமெரிக்காவுக்கும் வியட்நாமுக்கும் இடையில் பாரிய இரத்தம் தோய்ந்த போர் இடம்பெற்றதுடன், இதில் பாரிய உயிரிழப்புகளும் சம்பவித்திருந்தன. அமெரிக்கர்கள் "வியட்நாம் போர்" எனவும் வியட்நாமியர்கள் "அமெரிக்கப் போர்" எனவும் இதனை அழைத்தனர். இப்போரின் போது, வியட்நாம் பாரிய அழிவைச் சந்தித்திருந்தது. இதன் பின்னர் இவ்விரு நாடுகளும் தமது உறவை சிறந்த முறையில் மீளக்கட்டியெழுப்பின.

வடகொரியாவின் ஏவுகணை மற்றும் அணுவாயுதச் சோதனைகளினால் அந்நாட்டின் மீது ஆத்திரமடைந்திருந்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுடன் முரண்பட்டதுடன், இரு நாட்டு ஜனாதிபதிகளும்ஒருவர் மீது ஒருவர் அவதூறான வார்த்தைப் பிரயோகங்களையும் பரிமாறி வந்தனர்.

அத்துடன், வடகொரியாவின் அச்சுறுத்தலான நடவடிக்கையினால் அமெரிக்கா மாத்திரமின்றி, தென்கொரியா உள்ளிட்ட ஏனைய சர்வதேச நாடுகளும் அதிருப்தியடைந்திருந்ததுடன், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனைகளைக் கைவிடுமாறும் சமாதானப் பேச்சுக்கு முன்வருமாறும் வடகொரியாவை வலியுறுத்தியிருந்தன. இதற்கிடையில் வடகொரியாவின் இச்செயற்பாட்டைக் கண்டித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையும் அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை விதித்திருந்தது.

இந்நிலையில் வடகொரியா அவ்வப்போது நடத்தி வந்த ஏவுகணை மற்றும் அணுவாயுதச் சோதனைகளைக் கைவிட்டு சுமுகமான சூழ்நிலைக்குத் திரும்ப வேண்டும் என்பது அமெரிக்கா, தென்கொரிய உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் எதிர்பார்ப்பாக இருந்தது.

இவ்வாறான சூழ்நிலையில் சர்வதேசத்தின் எதிர்ப்பலைகளை எதிர்நோக்கிய வடகொரியா, ஒருவழியாக அமெரிக்காவுடன் சமாதானப் பேச்சு நடத்த இணக்கம் தெரிவித்த நிலையில், இரு நாட்டுத் தலைவர்களுக்கு இடையிலும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சமாதானப் பேச்சுத் தொடர்கின்றது.

வடகொரியா அதன் ஏவுகணைச் சோதனை மற்றும் அணுச் சோதனைகளைக் கைவிட வலியுறுத்தும் வகையில் சிங்கப்பூரில் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுடன் நடைபெற்ற முதற் கட்டச் சந்திப்பு அமைந்திருந்தது. இச்சந்திப்பு குறிப்பிடத்தக்களவு பாதுகாப்பு மற்றும் நம்பிக்கையை உருவாக்கியது.

இச்சந்திப்பில் அணுசக்தித் திட்டத்தை ஒழிப்பதாக இரு தரப்பினரும் இணங்கிக் கொண்டாலும், எவ்வாறு செயற்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான தகவல்களை இரு தரப்பினரும் பரிமாறவில்லை.

ஏவுகணை மற்றும் அணுவாயுதச் சோதனைகளுக்கு வடகொரியா பாரிய அல்லது நீண்ட கால அச்சுறுத்தலாகக் காணப்படவில்லை என்த் தெரிவிக்கப்பட்டாலும், வடகொரியா அதன் ஏவுகணை மற்றும் அணுசக்தித் திட்டங்களை முழுமையாகக் கைவிடுவதாக ஒருபோதும் உறுதியளிக்கவில்லை எனவும் தெரிய வருகின்றது. இதேவேளை, வடகொரியா அதன் அணுசக்தித் திட்ட விபரங்களை பகிரங்கமாக வெளியிட வேண்டும் என்பதுடன், சர்வதேசத்தின் கண்காணிப்பின் கீழ் அவற்றை முழுமையாக அழிக்க வடகொரியா முன்வர வேண்டும் என்பதே அமெரிக்காவின்நிலைப்பாடாகும். இதற்கிடையில் வடகொரியா அதன் அணுசக்தித் திட்ட நடவடிக்கைகளைத் தொடர்வதாகவும், பொருளாதாரத் தடைகளை மீறுவதாகவும் ஐ.நா. எச்சரித்துள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில், இரு நாட்டு ஜனாதிபதிகளுக்கு இடையில் நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சு நீடித்து நிலைக்குமா, வியட்நாமை வடகொரியா முன்னுதாரணமாகக் கொண்டு பின்பற்றிச் செல்லுமா என்பது கேள்விக்குறியே.

மேலும், வடகொரியா அதன் அணுசக்தித் திட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமானால், அமெரிக்க-வடகொரிய மோதலுக்கு வழிவகுப்பது மாத்திரமின்றி, சர்வதேச ரீதியில் ஸ்திரமற்ற நிலைமை உருவாகும். இதனால் உடனடியான பாதிப்பை பொதுமக்களே எதிர்கொள்வார்கள். எனவே, நன்மை கருதி வடகொரியா அதன் அணுசக்தித் திட்ட நடவடிக்கைகளைக் கைவிட்டு நடந்து கொண்டால் சர்வதேசத்துக்கு ஆபத்தில்லை என்பது தெளிவு. அத்துடன், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் வடகொரியா சமாதானப் போக்கை கடைப்பிடித்தால், தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் வடகொரியா ஏனைய நாடுகளுடன் ஒத்துப் போய், பொருளாதாரம் மற்றும் அரசியல் ரீதியில் வியட்நாமை போன்று வளர்ச்சி காணவும் உதவும்.

# விண்வெளி உங்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல


## அமெரிக்காவை அதட்டும் சீனா

அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனின் பாதுகாப்புப் புலனாய்வு அமைப்பு ஒன்று விண்வெளியில் ஆபத்தான ஆயுதங்களின் பயன்பாட்டைப் பற்றிய அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. அதில் ரஷ்யா மற்றும் சீனா ஆகிய இரண்டு நாடுகளும் சக்தி வாய்ந்த ஆயுதங்கள் மூலமாக விண்வெளியை இராணுவமயமாக்க முயல்கின்றன என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. கடும் சர்ச்சையைக் கிளப்பிய இந்த விவகாரத்தில் அமெரிக்காவுக்கு எதிராகக் கடுமையான முறையில் எதிர்வினையாற்றியிருக்கிறது சீனா.

"நாம் ஒன்றை மட்டும் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன், விண்வெளி என்பது அனைத்து மனிதர்களுக்கும் பொதுவானது. அதன் மீது எந்த ஒரு தனி நாடும் உரிமை கோர முடியாது. குறிப்பாக, விண்வெளி ஒன்றும் அமெரிக்காவின் தனிப்பட்ட சொத்து கிடையாது" எனச் சீன அரசு ஹுவா சுன்யிங் தெரிவித்துள்ளார். அவை ஆதாரமற்ற முற்றிலும் தேவையில்லாத கருத்துகள் அவர் சீனா விண்வெளியை அமைதியாகவே பயன்படுத்த விரும்புகிறது. இராணுவமயமாக்கலுக்கு எதிராகவே இருக்கிறது என்று கருத்தொனியில் எச்சரித்துள்ளது.



# மரண தண்டனை வழங்குவதன் மூலம் போதைப்பொருளை ஒழிக்க முடியுமா?



போதைப் பொருள் பாவனை யிலிருந்து சமூகத்தை மீட்டெடுப்பது என்பது இலகுவான விடயமல்ல. அவ்வாறு சமூகத்தை மீட்பதாயின் கடுமையான தண்டனையை வழங்க வேண்டுமென்பது அநேகமானோரின் கருத்தாகும். அவ்வாறு செய்யாமல் அக்கொடிய குற்றங்களை முற்றாக களைய முடியாது என்பதே அவர்களது எண்ணம். அதனை நோக்கும் போது, உண்மையாகவும் தோன்றுகின்றது. கடும் தண்டனை ஏதோவொரு வழியில் குற்றங்களைக் குறைக்கின்றது.

அண்மையில் இது தொடர்பாக கடுமையாக அதிகாரத்தைப் பயன்படுத்திய நாடு பிலிப்பைன்ஸ் ஆகும். போதைப் பொருள் மாபியாக்களைக் கட்டுப்படுத்த பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பயன்படுத்திய வழிமுறை வழக்கு விசாரணை இல்லாமல் மரணதண்டனை வழங்க அனுமதி அளித்ததாகும். அதனை 2016ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி செயற்படுத்தினார்.

தென்கொரிய வியாபாரியொருவர் பொலிஸாரால் கொல்லப்பட்டதால் குழப்பமுற்ற பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி, சிறிது காலம் 2017 ஜனவரி 31ஆம் திகதி வரை சிறிது ஓய்வு அளித்தார். அவ்வேளையில் மாத்திரம் 53,025 பேர் கைது செய்யப்பட்டதுடன் 7,069,095 வீடுகள் சோதனையிடப்பட்டன. அப்போது 1,179,462 பேர் தங்களை கொன்று விடுவார்கள் என்று எண்ணி பொலிஸாரிடம் சரணடைந்தார்கள். ஏழாயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதாக நம்பப்படுகின்றது. இதன் மூலம் தெரியவருவது என்னவென்றால் இதன் மூலம் ஓரளவு வெற்றி கிடைத்துள்ளது என்பதாகும்.

தென்கொரிய வியாபாரியொருவர் கொல்லப்பட்டதன் காரணமாக தனது யுத்தத்துக்கு தற்காலிக நிறுத்தத்தை மேற்கொண்ட ஜனாதிபதி, முதலில் பொலிஸார் சரியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறினார்.

சில வார இடைநிறுத்தத்துக்குப் பின்னர் பெப்ரவரி 27ஆம் திகதி மீண்டும் போதைப் பொருளுக்கு எதிரான யுத்தம் தொடங்கியது. 27 நாட்களில் பொலிஸார் சரியான பாதைக்கு வந்து விட்டார்கள் என கூறினால் அது உலக அதிசயமாகும். அது பற்றிய தகவல்கள் எம்மிடமில்லை. பொலிஸார் சரியான பாதைக்கு வந்தார்களா? இல்லையா? என்பது முக்கியமில்லை. தனது பயணத்தை தொடர்ந்து செல்ல பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி நினைத்தார்.

இதன்மூலம் ஒன்று தெளிவாகின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் போதைப் பொருளை தடுப்பது இலகுவான விடயமல்ல. இன்னும் பிலிப்பைன்ஸில் போதைப்பொருள் மாபியா செயற்பட்டு வருகின்றது.


போதைப்பொருள் பாவனையை தடுக்க சரித்திரத்திலேயே முதற்தடவையாக கடும் நடவடிக்கை எடுத்த நாடு பிலிப்பைன்ஸ் அல்ல. நாம் யாருமே நினைத்திராத நாடான அமெரிக்காவே அதுவாகும்.

அமெரிக்காவில் லால் வேகாஸ் சூதாட்டத்துக்குப் பெயர் பெற்றது. அங்கு பெறுமதி வாய்ந்த தொல்பொருள் காட்சிசாலையொன்றுண்டு. அதன் பெயர் "மொப் மியூஸியம்". அங்கு அமெரிக்க மாபியாவின் ஆரம்பம், அதன் வளர்ச்சி, முடிவு என்பன பற்றிய விடயங்கள் காணப்படுகின்றன. சாட்சி அறிக்கைகள், ஒளி நாடாக்கள் மாத்திரமல்ல மாபியாக்கள் பாவித்த ஆயுதங்கள் உட்பட வேறு பொருட்களும் காணப்படுகின்றன.

அமெரிக்காவில் மாபியா ஆரம்பமாகியது 1920 களில் அங்கு முற்றுமுழுதாக மதுபாவனை தடை செய்யப்பட்ட போதாகும். அதனால் மறைமுகமாக போதைப் பொருள், தயாரிப்பு, விற்பனை என்பன தொடங்கின. அதற்கான பாதுகாப்பை வழங்க ஆயுதம் தாங்கிய கோஷ்டியினர் தேவைப்பட்டார்கள். அதன் பின்னர் ஒரு







தலைவரின் கீழ் மாபியாக்கள் கொண்டு வரப்பட்டு நாடு பூராகவும் போதைப் பொருள் கடத்தல் பரவியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேவையான இடங்களில் மாபியாக்களால் மக்கள் இலஞ்சம் வழங்கியும், விலைக்கும் பெறப்பட்டனர். அவ்வாறு செய்ய முடியாத இடங்களில் கொலை செய்யப்பட்டனர்.

அவ்வாறு பொலிஸாரையும், அரசியல் வாதிகளையும் சமூகத்தில் மக்கள் பலரையும் பலிகொண்டார்கள். பயம் காரணமாக மாபியாவிற்கு எதிராக எதனையும் கூற மக்கள் விரும்பவில்லை. அதனால் மாபியாவை ஒழிப்பது சிரமமான விடமாகி யது.

இறுதியாக அமெரிக்கா மதுவுக்கான தடையை நீக்கியது. தடையை நீக்கியதால் மாபியாக்களுக்கு வேறு வழிகளை தேட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவர்கள் அதன் பின்னர் தடை செய்யப்பட்டிருந்த சூதாட்டத்தை தமதாக்கிக் கொண்டார்கள். பின்னர் அரசாங்கம் சூதாட்டம் தொடர்பான சட்டவிதிகளை தளர்த்திக் கொண்டது. அதன் காரணமாக லாஸ் வேகாஸ் நகரமே சூதாட்ட நகரமாகியது. அதனால் மாபியாக்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

அவர்கள் உடனே தடை செய்யப்பட்டிருந்த போதைப்பொருள் வியாபாரிகளுக்கு உதவுவதன் மூலம் தங்களது இருப்பை மீண்டும் உறுதி செய்து கொண்டார்கள். அமெரிக்காவின் பல பிராந்தியங்களிலும் போதைப் பொருள் தடை நீக்கப்பட்டதால் மாபியாக்கள் நிலைகுலைந்து போனார்கள். அந்நிலைமையில் கட்டுப்படுத்துவது அரசாங்கத்துக்கு இலகுவாகிப் போனது.

இந்த நீண்ட கதையை கூறியது தடைகள் மூலம் அநேகமானவற்றை செய்ய முடியும் என்ற நம்பிக்கையுடன் உள்ளவர்களின் கண்களைத் திறப்பதற்காகும். அமெரிக்கா மாபியாவை ஒழித்தாலும் இன்று போதைப்பொருள் பாவனையும் சூதாட்டமும் அதிகரித்தே காணப்படுகின்றன. அதனால் பெற்றுக் கொண்ட உண்மையான வெற்றியென்ன?

பிலிப்பைன்ஸ் நாட்டின் போதைப் பொருள் மத்திய நிலையத்தின் புள்ளி விபரங்களின்படி போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு 10 மாதங்களுக்குப் பின்னர் குறைந்த விலைக்கு மணிலா நகரில் அதனை விலைக்கு வாங்கக் கூடியதாக இருந்தது. இவ்வாறு தடுக்க முடியாமைக்கு இன்னொரு காரணமும் கூறப்படுகின்றது.

பொலிஸ் அதிகாரிகளின் அனுசரணையைப் பெற்றுள்ள போதைப்பொருள் விற்பனை முன்னரை விட அதிகரித்துள்ளது. அவர்களிடையேயான போட்டியே வியாபாரத்துக்கு தடையாக விளங்குகின்றது. இவையனைத்தும் கூறுவது என்ன வென்றால், சட்டத்தை கடுமையாக செயற்படுத்தினாலும் அதன் பிரதிபலன் நாம் எண்ணுவதை விட மாறுபட்டு இருக்கலாம் என்பதாகும்.

சட்டத்தால் செய்ய முடியாததை மதத்தால் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எம்மிடையே உண்டு. தற்போது மதத்தை தீவிரமாக அனுஷ்டிக்கும் ஐந்து நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இரவு பகலாக மதம் சார்ந்த உபதேசங்களை வழங்கும் இலத்திரனியல் ஊடகங்கள் எத்தனை? ஆனாலும் போதைப் பொருளுக்கு அடிமையாவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது என்னவென்றால் அதற்கு தூண்டப்படுதல் மனித சுபாவம் என்றாலும் அதையும் தவிர சமூகக் காரணங்களும் ஆதிக்கம் செலுத்துகின்றன.

அநேகமானோரின் வாழ்க்கையில் அன்பு காணப்படுவதில்லை. சிலருக்கு வாழ்க்கையை வாழ கட்டுப்பாடுகள், தடைகள் ஏராளம். அதைத் தவிர கலாசாரம் சார்ந்த வாழ்க்கையும் மக்களுக்கு இல்லை. இசையை ரசிக்க, சித்திரம் வரைய, கவிதை எழுத, நடனமாட, நடிக்க, விளையாட்டில் ஈடுபட அநேகமானோருக்கு நேரமில்லை. அபூர்வமாக ஒருவர் இருவர் அதனைச் செய்தாலும் பாராட்டி ஊக்குவிக்க யாருமில்லை. ஆகவே தங்கள் குறைகளை நிவர்த்தி செய்ய போதையை நாடுகின்றனர்.

இவை அனைத்துக்கும் பின்னால் எமது கல்வி முறையில் உள்ள தவறுகளும் காரணமாகும். அரசியல், ஏழ்மை, மதத்தின் கறுப்பு நிழல், காலத்துக்குப் பொருந்தாத கலாசாரங்கள் என்பனவே எமது சமூகத்தில் காணப்படுகின்றன. மேற்கூறிய காரணங்களாலும் வேறு பொதுக் காரணங்களாலும் பலர் போதைக்கு அடிமையாகின்றார்கள்.

அவற்றுக்கு விடைகாண வேண்டியது மரணதண்டனை மூலமல்ல. வைத்திய விஞ்ஞானம் மூலமாகத்தான் விடை காண வேண்டும். சிலர் ஆர்வம் காரணமாகவும் சிலர் குரோதத்தை வெளிக்காட்டும் அடையாளமாகவும் போதைப் பாவனையில் ஈடுபடுகின்றார்கள். இதற்கான விடை மிகவும் திறந்த மனத்துடன் கருத்துகளை வெளியிடும் சூழலை உருவாக்குவதாகும்.

அதிகமாக இன்று போதைக்கு அடிமையாகியிருப்பது இளைஞர் சமுதாயமே. அவர்களுக்கு வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் குறைவு. வர்த்தக வசதிகள் குறைவு, அதற்கான தடைகளும் அதிகமாகும். அதனால் அநேகமானோர் விரக்தியில் உள்ளார்கள்.


சமூகத்தால் போதையை விதைக்க இவ்வாறான வாய்ப்புகள் அதிகமாக உருவாகியுள்ளன. அதிக சிரமமின்றி போதைப் பொருளை விற்கக்கூடிய சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. அதைத் தவிர போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு உரிய இடத்திலிருந்து ஒத்துழைப்பும் பாதுகாப்பும் குறைவில்லாமல் கிடைக்கின்றது.

விநியோகிக்கும் நபர்களை அரக்கர்களாகக் கருதி அவர்களை கட்டுப்படுத்துவது மற்றும் அழிப்பதால் மக்கள் பாராட்டை பெற முடியுமென்றாலும், தேவையை இல்லாமல் செய்து விநியோகத்தர்களை அழிப்பது இன்னொரு வழியாகும்.

இரண்டாவது வழி முதலாவதைப் போன்று இலகுவானதல்ல. நாம் முன்னர் கூறிய அறியாமைக்கு மேலதிகமாக இந்த புரிந்துணர்வும் போதைப்பொருள் தொடர்பாக தற்போதைய நிரந்தரமின்மைக்கு காரணமாகும்.

அரசாங்கத்துக்கு மாத்திர மல்ல. இதில் மாற்றத்தை ஏற்படுத்தும் பொறு ப்பு எமக்கும் உள்ளது. நாம் முன்னர் குறிப்பிட்ட சமூக விடயங்களை அர்ப்பணிப் புடன் தீர்க்க பங்களிப்பு செய்ய வேண்டும்.

நிஸாந்த கமலதாச



# மறைந்து போன நாற்சாரம்

இயந்திர கதியில் போய்க் கொண்டிருக்கும் இருபத்தியோராம் நூற்றாண்டில் நாம் இழந்துபோன விடயங்கள் ஏராளம். அவற்றுள் அன்றைத்திங்கள் அந்நிலவில் எம்முன்னோர்கள் கொஞ்சிக் குலாவி வாழ்ந்த நிலாமுற்றமும், நாற்சார் வீடும் குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும். இன்றைய காலகட்டத்தில் நாற்சார் வீட்டைக் கண்டுபிடிப்பது என்பது முயற்கொம்பாகவே உள்ளமை மனவேதனைக்குரிய விடயமாகும்.

நாற்சார் வீடு என்பது நடுவில் கூரையிடப்படாத திறந்தவெளியைச் சுற்றி அறைகளும் கூடங்களும் அமையும்படி கட்டப்படும் வீடுகளாகும். நடுவிலுள்ள இத்திறந்தவெளி முற்றம், நிலாமுற்றம் என்றவாறு அழைக்கப்படுகிறது.

இவ் வாறு நடுவே முற்றம் அமையும் வண்ணம் கட்டப்படுகின்ற வீடுகளை உலகின் பலபாகங்களிலும் கண்டு கொள்ளலாம். இருப்பினும் அவற்றிற்கிடையே வேறுபாடுகள் பல உள்ளன. மக்களின் வாழ்வியல் முறை, பண்பாடு, கலாசாரம் என்பவற்றுக்கமைய இவ் வேறுபாடுகள் அமைகின்றன எனலாம்.

உலகில் இத்தகைய வீடுகளின் பரம்பலை நோக்குவோமாயின் தமிழ்நாடு, இலங்கை ஆகிய தமிழர் வாழ்கின்ற இடங்களில் கட்டப்படுகின்ற இவ்வகை வீடுகளையே நாற்சார் வீடுகள் என அழைக்கின்றனர்.

கேரளமாநிலத்தில் "நாலுகெட்டு" எனும் பெயரில் அழைக்கின்றனர். தமிழ் நாட்டில் நாட்டுக்கோட்டைச் செட்டியார் எனும் சமூகத்தினர் வாழும் பகுதிகளில் நாற்சார் வீடுகள் சிறப்புற்று விளங்குகின்றன.

எம்முன்னோர்கள் பாட்டன் தொடங்கி பூட்டன் வரை எல்லாத் தலைமுறைகளும் ஒன்றாகவே இருந்து ஒன்றாகவே உண்டு ஒன்றாகவே உறங்கும் ஒரு கூட்டுக்குடும்ப வாழ்க்கையை வாழ் ந்தவர்கள். இங்கு எவருக்கும் எதுவும் தனியுடைமை இல்லை என்பது எழுதப்படாத சட்டமாகவே இருந்தது.

அதேபோல் குடும்பத்தின் மூத்த உறுப்பினராக காணப்படுகின்ற தாத்தாவோ அல்லது பாட்டியோ அக்குடும்பத்தை நிர்வகிப்பவராக, அத்தலைமுறையின் முடிசூடாமன்னராக விளங்கினர். இவ் வாழ்கை முறையில் எல்லோருடைய உழைப்பும் ஒரே உலையிலேயே சோறு ஆகியது. இவர்களின் இந்தவாழ்கை முறைக்கு நிலாமுற்றமும் அதனைச்சூழ அமைந்த கூடங்களும், அறைகளும் கொண்ட நாற்சார் வீடுகள் மிகப் பொருத்தமானவையாகத் திகழ்ந்தன.

நிலாக் காலங்களில் பெரியவர்கள் கதைசொல்ல வீட்டிலுள்ள சிறுவர்கள் ஆசையோடு கேட்பதற்கும், பெண்கள் கதையளப்பதற்கும், சிலமுக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு வீட்டார் எல்லோரும் ஒன்றுகூடுவதற்கும் நிலாமுற்றம் முக்கியமானதொரு இடமாகவே விளங்கியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

நிலாக் காலங்களில் நிலவொளியை அள்ளிவீசும் இந் நிலாமுற்றம் மழைக் காலங்களில் தூறல்களுடன் சேர்ந்து மகிழ்ச்சியையும் அள்ளித் தெளித்தது. வீட்டைச் சுற்றிவர பழமரங்களையும், பயன்தரும் மரங்களையும் நாட்டி அவற்றின் உச்சக்கட்டப் பயனை இவர்கள் நுகர்ந்து மகிழ்ந்திருந்தனர். இவர்களின் மகிழ்விற்கு இந் நாற்சார் வீடுகளின் அமைப்பும் பக்கபலமாகவும் விளங்கியது எனலாம்.

ஆனால் காலம் செல்லச் செல்ல மாற்றம் ஒன்றுதான் மாறாதது என்பதாக மனிதர்களின் வாழ்க்கைக் கோலமும் மாறிப்போனது. பூமிப்பந்தில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சியானது நிலமானிய சமூகத்தின் இருப்பை கேள்விக்குறியதாக்கியதுடன் முதலாளித்துவப் பொருளாதாரத்தை நோக்கி நகர்ந்த போது மக்களின் வாழ்க்கைக் கோலமும் தன் இருப்பை விட்டு நகர ஆரம்பித்தது.

அதாவது விவசாயமே கதியென வாழ்ந்த மக்கள் நகர்ப் புறங்களில் மழைக் காளான்களென வேகமாக முளைத்த தொழிற்சாலைகளை நோக்கி நகர ஆரம்பித்தனர்.

இந்நகர்வானது கூட்டுக்குடும் பங்களின் இருப்பை ஆட்டம் காணச்செய்தது. இந்தப் புள்ளியில் தான் நாற்சார் வீடுகளின் சரிவும் ஆரம்பித்தது எனலாம்.

நம் வயல்களிலும்,தோட்டங்களிலும் விளைந்தவற்றைக் கொண்டுவந்து ஒரே உலையில் சோறாக்கி ஒரே பந்தியில் உணவுண்ட மக்கள் நகர்ப்புற வாழ்க்கைக்கு நகர்ந்தபோது கால்களில் சக்கரம் பூட்டியவர்களாக மாற்றம் பெற்றனர். வெந்ததையும், வேகாததையும் வேகவேகமாக அள்ளியெறிந்து விட்டு கைத்தொழிற்சாலைகளை நோக்கி ஓடுகின்ற அவர்களது இயந்திர வாழ்வில் நாற்சார் வீடுகளுக்கு இடமும் இருக்கவில்லை, அதற்கான தேவையும் இருக்கவில்லை.

இவ்வாறு நகர வாழ்க்கைக்கு தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டமக்கள் நாகரீகம் என்னும் பெயரில் வந்தவற்றை உள்வாங்கிக் கொண்டு பசுமை நிறைந்த அழகிய கிராமத்துவாழ்வை தூரப்படுத்திக் கொண்டனர்.அவர்கள் அவ்வாறு தூக்கியெறிந்தவற்றுள் ஒன்றுதான் இந்த நாற்சார் வீடுகள் எனலாம்.

காலவோட்டத்தில் நாகரீகம் காரணமாகவும், இடப் பற்றாக்குறை காரணமாகவும் தமதுவாழ்வியல் முறைக்கு ஏற்பவும் வீடுகளின் வடிவங்களை மாற்றியமைத்துக் கொண்டனர். இதனால் வளர்ச்சி பெற்ற அடுக்குமாடிக் குடியிருப்புகள் மேல் நாட்டுக் கலாசாரத்தை பிரதிபலிக்கின்ற வீடுகள் என்பவற்றின் வளர்ச்சியின் காரணமாக இன்று நாற்சார் வீடுகளின் எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணக்கூடியதாக உள்ளது.

எம்மவர்கள் இந் நாற்சார் வீடுகளில் வாழ்ந்தபோது அவர்களது உடல் ஆரோக்கியத்தில் எவ்விதமான சிக்கல்களும் ஏற்படவில்லை என்பது இங்கு சுட்டிக் காட்டப்படவேண்டிய ஒரு விடயமாகும்.


அதற்கு இவ்வகை வீடுகளின் அமைப்பும் ஒருகாரணமாகும். ஓடுகளால் வேயப்பட்ட கூரையும், கதவுகளுக்கும், ஜன்னல்களுக்கும் அதிகம் பயன்படுத்தப்பட்ட வேப்பம் பலகை மழையையும்,வெயிலையும் வீட்டுக்குள் ஊடுபுக விடும் முற்றம் என்பவை இதனை கட்டியம் கூறிநிற்கின்றன.

அத்தோடு இன்று பிளாஸ்ரிக் செடிகள் காணப்படும் இடங்களை அன்று துளசிமடங்களும்,சாடிகளில் வைக்கப்பட்ட கன்றுகளும் நிரப்பி நின்றன. அவைவீட்டினுள் வீசும் தென்றலை மேலும் குளிரச் செய்தன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இயந்திரமான இன்றைய சூழலில் வீடுகளினுள் செடிகளும் இல்லை, அவற்றில் தவழ்வதற்கு தென்றலும் வருவதில்லை. அப்படிவரினும் அதனை வரவேற்பதற்கு நிலா முற்றமும் நாற்சார் வீடுகளும் இங்கில்லை. தொடர்களில் இரவுகளைத் தொலைத்துவிட்டு நிற்கின்ற பெண்களுக்கும் மதுபானக் கடைகளின் கல்லாக்களை நிரப்பி விட்டு வீடுதிரும்பும் ஆண்களுக்கு வேலைப் பளுவினால் விகாரமடைந்த முகத்துடன் திரும்பும் குடும்பச்சுமை கொண்ட ஆண்களுக்கும், முகநூலில் முடங்கிக் கிடக்கும் இளைய தலைமுறையினருக்கும் பாடப்புத்தகங்களுடன் மல்லுக்கட்டும் சிறுவர்களுக்கும் நிலாமுற்றம் பற்றிய எண்ணம் வருவதே இல்லை. தனிமையின் கொடுமையில் தவிக்கும் வயதானவர்களின் மனங்களில் மட்டுமே நிலாமுற்றம் எங்கே? என எண்ணம் குடிகொண்டுள்ளது.

பி. சிவதர்சினி
யாழ்.பல்கலைக்கழகம்

# சச்சின் ஓவியங்கள்தான் பெஸ்ட் செல்லிங்!





நான் வரைந்த முதல் இந்திய கிரிக்கெட்டரின் ஓவியம் சச்சின் டெண்டுல்கருடையதுதான். இதுவரை சச்சினின் ஓவியங்களையே நான் அதிகம் வரைந்துள்ளேன். கிரிக்கெட்டில் மட்டுமல்ல, சச்சினின் ஓவியங்கள்கூட அவரின் ரசிகர்கள் மத்தியில் ஹிட் அடிக்கின்றன!

செல்ஃபிக்கள் கோலோச்சும் டிஜிட்டல் காலத்திலும் கெத்து குறையாமல்அள்ளாஸ் அள்ளுவது ஓவியங்கள்தான். செஞ்சுரி அடித்த பிறகு ரசிகர்களைப் பார்த்து எம்.ஆர். எப் பட்டை நீட்டும் சச்சின், டெஸ்ட் கிரிக்கெட்டில் டிராவிட்டின் ஹிட்டிங் ஸ்டில், கங்குலியின் வின்னிங் எமோஷன்... இதையெல்லாம் போட்டோக்களாகப் பார்ப்பதைவிட, ஓவியங்களாகப் பார்த்தால் எப்படி இருக்கும்?

இவற்றையெல்லாம் நிகழ்த்திக்காட்டும் ஓவியர்தான் கிறிஸ்டீனா பியர்ஸ். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த அவரது ஓவியங்கள், சர்வதேச கிரிக்கெட் அரங்கில் கொண்டாடப் படுபவை. அவரிடம் பேசினேன்!

**இந்தியா கனெக்ட்**

"நான் வரைந்த முதல் இந்திய கிரிக்கெட்டரின் ஓவியம் சச்சின் டெண் டுல் கருடையதுதான். இது வரை சச்சினின் ஓவியங்களையே நான்அதிகம்வரைந்துள்ளேன். கிரிக்கெட்டில் மட்டுமல்ல, சச்சினின் ஓவியங்கள் அவரின் ரசிகர்கள் மத்தியில் ஹிட் அடிக்கின்றன என்றவர், விற்பனையின்போது, சச்சின் ஓவியங்கள்தான் பெஸ்ட் செல்லிங் என்றார்.



2014ஆம்ஆண்டு மும்பை டாவோ கலரியில் இடம் பெற்றிருந்த கிறிஸ்டீனாவின் ஓவியங்களை, எளிதில் கடந்துவிட முடியாது. ஜகன்ஸ் ஒப் இந்தியா' என்ற பெயரில் சச்சின், டிராவிட், கங்குலி, கும்ளே, ஹர்பஜன், டோனி உட்பட ஸ்டார் கிரிக் கெட்டர்களின் 'சிக்னேச்சர் போஸ்' (Signature pose) ஓவியங்கள் சுவர்களை அலங்கரிக்கின்றன. ஒருமுறை பார்த்தாலே, பல நாஸ்டால்ஜியா விடயங்கள் நினைவுக்கு வருவது உறுதி.

முன்னாள் கிரிக்கெட் வீரர் சவுரவ் கங்குலிக்கு, பாகிஸ்தான் பிரஸ்டன் பல்கலை சார்பில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. அப்போது, கிறிஸ்டீனா வரைந்த கங்குலியின் போர்ட்ரேட் அவருக்குப் பரிசளிக்கப்பட்டது.





"கோலியின் அதிரடி ஆட்டத்தை விரும்பிப் பார்ப்பேன். புது வரவான ஹோலியின் ஓவியங்களை மிகவும் ரசித்து வரைந்தேன். அப்போது சச்சின்.. இப்போது ஹோலி..." என்றவரின் கிரிக்கெட் ஓவியங்கள், சென்னை ராமச்சந்திரா சென்டர் ஃபார்ஸ்போர்ட்ஸ் சயின்ஸ் வளாகத்திலும் இடம்பெற்றுள்ளன.

**கிரிக்கெட் என்ட்ரி**

கிரிக்கெட் விளையாடும் தந்தை - மகன் என, குடும்பமே இந்த விளையாட்டைச் சார்ந்து உள்ளதால், கிறிஸ்டீனாவுக்கு கிரிக்கெட் புதிதல்ல. லண்டன் கலைக் கல்லூரியில் படிப்பை முடித்தவர், கிரிக்கெட் பெயின்டிங்கில் ஈடுபடத் தொடங்கினார். "கிரிக்கெட் ஓவியங்களை வரைவதற்கு முன், ஸ்டில் ஓவியங்கள், இயற்கை, லண்டன் என மற்ற ஓவியங்களையும் வரைந்துவந்தேன். விளையாட்டாகத் தொடங்கிய கிரிக்கெட் என்ட்ரிக்கு நல்ல ரெஸ்பான்ஸ் கிடைத்ததால், தொடர்ந்து பயணித்து வருகிறேன்" என்றார்.

ஃபீல்டில் புட்டிங் செய்து கொண்டிருந்த மகன் ஆஸ்கரின் ஓவியம்தான், கிறிஸ்டீனாவின் முதல் கிரிக்கெட் ஓவியம்.

டிஜிற்றல் டூல்ஸ்களுக்கு அப்டேட் ஆகாமல், டிராயிங் போர்டு, பென்சில், ஆயில் பெயின்டிங் எனப் பாரம்பரிய முறையைக் கையாள்வதே கிறிஸ்டீனாவின் ஓவியங்களில் உள்ள சிறப்பு. போட்டியைக் காண மைதானத்துக்குச் சென்று முக்கிய மட்ச் மூமென்ட்டுகளை லைவ் பெயின்டிங் செய்வதில் கிறிஸ்டீனா கில்லி.

"கிரிக்கெட், உணர்ச்சி நிறைந்தது. போட்டி நடக்கும் மைதானத்தை ஓவியப்படுத்தும்போதும், அதில் உணர்ச்சிகள் நிறைந்திருக்கும். வெவ்வேறு நாடுகளில் உள்ள மைதானங்களுக்குச் செல்லும்போது, வித்தியாசமான அனுபவம் கிடைப்பதை மறுக்க முடியாது. ஐ லவ் டு பெயின்ட் கிரிக்கெட் கிரவுண்ட்ஸ்" என்றார். பிரபலமான அக்ஷன் போஸ்களை, புகைப்படங்கள் பார்த்து வரைகிறார்.

லைவ் பெயின்டிங் மட்டுமன்றி தன்னுடைய டிராயிங் ஸ்டூடியோவிலும் பெரிய போர்ட்ரேட் ஓவியங்களை வரைந்துவருகிறார். டிஜிற்றல் டூல்ஸ் பயன்படுத்துவதை விரும்பாதவர், காலத்தின் கட்டாயத்தால் டிராயிங் முறைகளை அப்டேட் செய்து கொள்வது அவசியம் என்பதை உறுதிசெய்கிறார். ஆனால், சர்ச்சைக்குரிய ஓவியங்களை வரைவதற்கு மட்டும் கண்டிப்பாக 'நோ' சொல்கிறார் கிறிஸ்டீனா!

# தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு




தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு

என்று பாடினார் நாமக்கல் கவிஞர். அமிழ்தம் அனைய தமிழ் மொழியைப் பேசும் தமிழர்கள் அன்பை வாழ்வின் அடிப்படையாகக் கொண்டவர்கள். அறச் செயல்களால் சிறப்புப் பெற்றவர்கள். தமிழர் தம் பண்பாடு பற்பல சிறப்புக்களை உடையது.

பழங்கால மக்கள் காடுகளில் விலங்குகளை வேட்டையாடி அவற்றின் மாமிசத்தை உண்டனர். மரப்பட்டைகளையும் இலை, தழைகளையும் ஆடையாக உடுத்தனர். மலைகளிலும் குகைகளிலும் மரப்பொந்துகளிலும் வாழ்ந்தனர். ஆனால் இன்று மக்களின் உணவு, உடை, உறையுள், பழக்கவழக்கம் முதலானவற்றின் வியத்தகு மாற்றங்களைக் காண்கின்றோம். மக்களின் இப்புறத் தோற்ற வளர்ச்சியினை நாகரிகம் என்பர். இந்நாகரிகம் காலந்தோறும் மாறிக் கொண்டே வரும். இது நாட்டுக்கு நாடு, காலத்திற்குக் காலம் வேறுபடும் இயல்புடையது.

உள்ளத்தினின்றும் வெளிப்படும் இயல்புகளைப் பண்பாடு எனலாம். சொல்லாலும் செயலாலும் வெளிப்படுவது பண்பாடு. பண்பட்ட உள்ளம் கொண்டோரே பண்பாடு உடையவர்கள் என்போம். இப்பண்பாடே உலக உறவாக வளர்கிறது. இது மாறாதது. என்றும் நிலைத்து நிற்பது. எனவே நாகரிகம் என்பது மாறும் தன்மையுடையது. பண்பாடு என்பது மாறாத் தன்மையுடையது. உலகத்திலுள்ள பண்பாட்டினிலே மிக உயர்ந்த காலத்தால் முந்திய மிகவும் தொன்மை வரலாற்றினைக் கொண்டதும் எவராலும் அசைக்க முடியாத பண்பாடே தமிழர் பண்பாடு. தமிழனை திராவிடர் எனவும் அழைப்பதுண்டு. உலகத்தின் முதல் தோன்றிய இனம் தமிழ் இனம் (திராவிடர்) என்று வரலாறு கூறுகின்றது.

தமிழ் பண்பாட்டில் தலை சிறந்தது மானம். தமிழர் மானத்தை உயிரினும் மேலாக மதிப்பர். பிறரிடம் இரந்து உண்ணும் பண்பு அவர்களிடம் இல்லை. மானம் இழந்து வாழ்தலிலும் உயிரைத் துறத்தலே பெருமை எனக் கொள்வர். மானம் இழந்த மங்கை மறுநொடியே மரித்துவிடும் இனமடா! தமிழ் இனம்.

பிறருக்குக் கொடுத்துப் புகழ் பெற்று வாழ்வதே பெருமை எனக் கொள்வார். தமிழன் இல்லையென்னாது ஈயும் பண்பு அவர்களுக்கு உண்டு. தமிழ்ப்புலவர் ஒருவரின் வறுமையைப் போக்க தன் தலையையே வெட்டிக் கொடுக்க முன்வந்த குமண வள்ளல் கொடுத்த வாக்கிற்காக தன்னையே அர்ப்பணித்தவர். கொடுத்த வாக்கிற்காக தன்னையே இழக்க முன்வந்த மனுநீதி கண்ட சோழன் போன்றோர் தமிழன் தம் பண்பாட்டிற்கு ஏற்ற சான்றாகும். இதிலிருந்து தமிழன் வீரம், மானம், கொடை ஆகியவற்றை உயர்ந்த பண்பாகக் கருதிய தமிழர் ஒழுக்கத்தை உயிர் எனப் போற்றினார்.

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப்படும்**

என்னும் வள்ளுவர் வாக்கை அவர்கள் என்றும் மறந்தது இல்லை. ஒருவர் எவ்வளவு அறிவு, செல்வம் பெற்றிருந்த போதிலும் ஒழுக்கம் குன்றின் அவர் தமைத் தமிழர் மதியார். எணவே மாணம், வீரம், கொடை, ஒழுக்கம் அனைத்திலும் சிறந்த பண்புடையோரே பண்பாளர் எனப் போற்றப்படுவர். தமிழர் தம் வாழ்வில் இப்பண்புகள் செறிந்து இருப்பதைக் காணலாம். இதனையே தமிழர் பண்பாடு எனப் போற்றுகின்றோம். ஆனால் இந்த தமிழர் பண்பாடு இன்று முற்றாக அழிந்து விட்டது என நினைக்கின்றனர். ஆனால் இன்று தமிழர் பண்பாடு முன்னைய காலத்திலுள்ள அதேபோன்று இன்றும் நீடித்துக் கொண்டுள்ள தமிழர் பண்பாடு சிலவற்றைக் கூறலாம். தமிழர் பண்பாட்டில் அன்று தொடக்கம் இன்றுவரை சடங்குகள் எம் முன்னோர்கள் காட்டிய தமிழ்ப் பண்பாட்டு முறைப்படியே மேற்கொள்ளப்படுகின்றன.

பூப்புனித நீராட்டு விழா, திருமண விழாக்கள், ஆலய மஹோற்சவம், கும்பாபிஷேகம் மற்றும் மரணச் சடங்குகளை செய்கின்றோம். நாம் செய்யும் இச்சடங்குகளில் எம் முன்னோர் காட்டிய வழிப்படியே எல்லாம் நடைபெறுகிறது. இதில் புதிதாக ஏதும் இணைக்கவோ நீக்கவோ இல்லை.

வல்வெட்டித்துறை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு பாலர் முதல் விருத்தர் வரை தமிழ்ப் பண்பாட்டின்படியே, ஆண்கள் வேட்டி, பெண்கள் சேலை அல்லது பட்டுப்பாவாடை அணிந்தே கோவிலுக்குச் செல்வர். இது இவ்வாலயம் கட்டியகாலம் முதல் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற சிறந்ததொரு மரபு. மற்றும் உலகின் எத்தனையோ பண்பாடுகள் மற்றும் கலாசாரங்கள் இருந்தாலும் எல்லோராலும் விரும்பப்படும் பண்பாடு தமிழர் பண்பாடு எனலாம். கீழைத்தேய நாடுகளில் மட்டுமன்றி மேலைத்தேய நாடுகள் வரை பரந்து விரிந்து காணப்படுவது ஒரு உண்மையே...

காலத்தால் அழியாத காவியங்களாக உள்ள கம்பராமாயணம், மகாபாரதம், ஐம்பெருங்காப்பியங்கள் என்பன தமிழன் தமிழனுக்கு அளித்த பெருங்கொடையாகும். இவை தமிழ் பண்பாடு இன்றும் உள்ளதற்கான சான்றுகள். எனினும் மேலைத்தேச கலாசாரங்கள் மற்றும் ஆங்கில மொழித் தாக்கத்தால் தமிழர் பண்பாடு முடங்கிக் கிடக்கிறது. ஆங்கிலம் கற்கத்தான் வேண்டும். ஆனால் தமிழ் மொழியை மறந்து அல்ல. இறுதியில் விஜய் நடிப்பில் வெளிவந்த "மெர்சல்" திரைப் படத்திலுள்ள "ஆளப்போறான் தமிழன்'' பாடலில் எமது தமிழனின் பெருமை சொல்லப்பட்டுள்ளது.

எனவே ஆளப் போறான் தமிழன் பாடலை மனதில் நிறுத்தி தமிழனின் பண்பாட்டை வீழ விடாது மேலோங்கச் செய்து தமிழனின் பண்பாட்டை போற்றிப் பேணி வாழ வேண்டும்.

**தமிழன் என்று சொல்லடா...தலை நிமிர்ந்து நில்லடா...**

திருச்செல்வம் கௌதம்
யா/ஹாட்லிக் கல்லூரி

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : கௌரவம்
இயற்றியவர்: கண்ணதாசன்
இசை : எம்.எஸ். விஸ்வநாதன்
பாடியவர்கள் : ரி.எம்.சௌந்தரராஜன்



பாலூட்டி வளர்த்த கிளி
பழம் கொடுத்து பார்த்த கிளி
பாலூட்டி வளர்த்த கிளி
பழம் கொடுத்து பார்த்த கிளி
நான் வளர்த்த பச்சைக்கிளி
நாளை வரும் கச்சேரிக்கு
நான் வளர்த்த பச்சைக் கிளி
நாளை வரும் கச்சேரிக்கு
செல்லம்மா எந்தன் செல்லம்மா
செல்லம்மா எந்தன் செல்லம்மா

சட்டமும் நானுரைத்தேன்
தைரியமும் நான் கொடுத்தேன்
சட்டமும் நானுரைத்தேன்
தைரியமும் நான் கொடுத்தேன்
பட்டம் மட்டும் வாங்கி வந்து
பாய்ந்து செல்ல பாக்குதடி
பட்டம் மட்டும் வாங்கி வந்து
பாய்ந்து செல்ல பாக்குதடி
செல்லம்மா எந்தன் செல்லம்மா

பாலூட்டி வளர்த்த கிளி
பழம் கொடுத்து பார்த்த கிளி
நான் வளர்த்த பச்சைக் கிளி
நாளை வரும் கச்சேரிக்கு
செல்லம்மா எந்தன் செல்லம்மா

நீதிக்கே துணிந்து நின்றேன்
நினைத்ததெல்லாம் ஜெயித்து வந்தேன்
நீதிக்கே துணிந்து நின்றேன்
நினைத்ததெல்லாம் ஜெயித்து வந்தேன்
வேதனைக்கு ஒரு மகனை
வீட்டினிலே வளர்த்து வந்தேன்
வேதனைக்கு ஒரு மகனை
வீட்டினிலே வளர்த்து வந்தேன்
செல்லம்மா என்தன் செல்லம்மா
செல்லம்மா எந்தன் செல்லம்மா
பாலூட்டி வளர்த்த கிளி பழம்
ஆண்டவன் சோதனையோ
யார் கொடுத்த போதனையோ
ஆண்டவன் சோதனையோ
யார் கொடுத்த போதனையோ
தீயினிலே இறங்கி விட்டான்
திரும்ப வந்து தாழ்பணிவான்
தீயினிலே இறங்கி விட்டான்
திரும்ப வந்து தாழ்பணிவான்
சத்தியம் இது சத்தியம்
செல்லம்மா எந்தன் செல்லம்மா
பாலூட்டி வளர்த்த கிளி
பழம் கொடுத்து பார்த்த கிளி
நான் வளர்த்த பச்சைக் கிளி
நாளை வரும் கச்சேரிக்கு
செல்லம்மா எந்தன் செல்லம்மா
செல்லம்மா எந்தன் செல்லம்மா

நகர அபிவிருத்தி அதிகாரசபை
எப்பொழுதும் மக்களுடன்

மேல் மாகாண மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சர்
**கௌரவ பாட்டலீ சம்பிக்க ரணவக்க**
அவர்களின் தலைமையில்

**நகர அபவிருத்தி அதிகாரசபையின்**

**40** வது ஆண்டுவிழா
மற்றும் அதற்கிணையாக
ஏற்பாடு செய்யப்பட்டுள்ள

**ஜனபியச**
**பொதுமக்கள்**
**நடமாடும் சேவை**

2019 பெப்ரவரி 21
மு.ப. 9.30 முதல்
பி.ப. 2.30 வரை

**யாழ்ப்பாண வீரசிங்கம்**
**மண்டபத்தில் நடைபெறும்.**

கட்டிட கட்டுமானம், காணி துணைப்பகிர்வு மற்றும் ஏனைய அனுமதிகள் தொடர்பான பிரச்சினைகள், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு காணி தொடர்பான பிரச்சினைகள், சட்டவிரோத கட்டுமானங்கள் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அன்றைய தினம் எம்முடன் இணைந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர்,
நகர அபிவிருத்தி அதிகாரசபை

மேல் மாகாண மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சு
நகர அபிவிருத்தி அதிகாரசபை
1978 - 2019




சந்தானம் ஹீரோவாக ஜெயித்தே தீர வேண்டும் என்று போராடி வருகின்றார். அவரின் போராட்டத்திற்கு கொஞ்சம் ஆறுதல் கொடுத்தது தில்லுக்கு துட்டு படத்தின் வெற்றி தான். அதை தொடர்ந்து அவர் நடித்த படம் பெரிய தோல்வியை சந்திக்க, தற்போது மீண்டும் தன் ஹிட் கூட்டணியுடன் இணைந்து தில்லுக்கு துட்டு-2வை கொடுத்துள்ளார், இவை சந்தானத்தை காப்பாற்றியதா? பார்ப்போம்.

சந்தானம் தன் மாமா மொட்டை ராஜேந்திரனுடன் எப்போதும் குடித்து கலாட்டா செய்து வருகிறார். அந்த ஏரியா வில் இரவு நேரத்தில் யாரையும் தூங்க கூட விடாமல் கலாய்த்து கலாட்டா செய்து வருகிறார்.

இந்நிலையில் மாயா (ஹீரோயின்) என்ற டாக்டரை பார்த்து யார் காதலை சொன்னாலும் உடனே பேய் வந்து அவர்களை அடித்து விடுகின்றது. அப்படித் தான் ஒரு மாயாவுடன் பணிபுரியும் ஒரு டாக்டர் அவரிடம் காதலை சொல்லி பேயிடம் அடி வாங்குகிறார்.

அடி வாங்கிய அந்த டாக்டர் சந்தானம் ஏரியா என்பதால் அந்த பெண்ணிடம் சந்தானத்தை கோர்த்துவிட்டு, அவரை மாயாவை காதலிக்க வைக்கின்றனர். (ஏனெனில் அவரையும் சந்தானம் மிகவும் டார்ச்சர் செய்துள்ளார்).

சந்தானத்தையும் அந்த பேய் தாக்க, பிறகு தான் தெரிகிறது, மாயாவின் தந்தை ஒரு சூனியக்காரர், அவர் வைத்த சூனியம் இது என்பது. சந்தானம் எப்படியாவது காதலியை கரம் பிடிக்க கேரளா செல்ல, அதன் பின் தான் தெரிகின்றது. அது சூனியம் இல்லை, ஒரு பேயின் பிடியில் மாயா இருக்கிறார் என, அதை தொடர்ந்து அந்த பேயை விரட்ட நடக்கும் காமெடி கச்சேரி தான் இந்த தில்லுக்கு துட்டு 2.

சந்தானம் இஸ் பாக் என்றே சொல்ல லாம், படம் ஆரம்பித்ததில் இருந்து முடியும் வரை தன் ஒன்லைன் காமடியில் கலக்கி எடுத்துள்ளார். அதிலும் மொட்டை ராஜேந்திரனை கலாய்க்கும் இடம், ஏரியா மக்களை டார்ச்சர் செய்யும் விதம், பேய் களை டீல் செய்வது என இனி ஹீரோவாக நடித்தால் தில்லுக்கு துட்டு சீரிஸ் மட்டும் நடியுங்கள் என்று சொல்ல வைக்கின்றது.

மொட்டை ராஜேந்திரன் இந்த படத்திற்கு பிறகு இன்னும் ஒரு படி மேலே சென்று விடுவார். அதிலும் பேய் பங்களாவிற்கு சென்ற பிறகு கிஸ் மீ பாடலை பேயிடம் பாடுவது செம்ம ரகளை, அதேபோல் மலையாளியாக வரும் குஞ்சுக்குட்டன், ஊர்வசி என கிளை மேக்ஸ் சிரிக்க வைத்து வயிறே வலிக்க வைத்து விடுவார்கள்.

படத்தின் மிகப்பெரும் பலமே பேயை கலாய்ப்பது தான். ஆனால், சந்தானம் ஒவ்வொருவரையும் பேய் மாதிரி கலாய்த் துள்ளார், கார்பண்டரை அழைத்து வந்து நட்டு போட்டனா பயமுறுத்த முடியாது என பேயிடமே கவுண்டர் கொடுப்பது, பேயை பார்த்து முகத்தை மூடி செல்வது என செம்ம கலாட்டா தான்.

முந்தைய பாகத்தில் லவ் தான் மைனஸ் பொயிண்ட், ஆனால், இதில் காதலை கம்மி செய்து கலாய்ப்பை அதிகப்படுத்தியது சுப்பர். பின்னணி இசையும் படத்திற்கு மிகப்பெரும் பலம்.

கிளைமேக்ஸ் 20 நிமிடம் அந்த இருட்டிலும் ஒளிப்பதிவு துல்லியம். என்ன கிளைமெக்ஸ் அப்படியே காஞ்சுரிங்2 காப்பி போல் உள்ளது.

சந்தானம் இந்த குடியை எப்போது விடுவார் என்று தெரியவில்லை. படம் முழுவதும் போத்திலும் கையுமாக தான் இருக்கிறார்.

படத்தின் ஒன்லைன் பன்ச் தான், என்ன ஆசிரமத்துக்குள்ள ஆடு மேய்க் கிற, 10 நிமிடம் வர பிரியாணி கடைக்கு 10 வருஷம் ஏன் வந்தனு சந்தானம் அனைத்து பாலிலும் சிக்ஸர் தான்.

படத்தின் கான்செப்ட், பேயை கலாய்ப் பது, அதிலும் பேய் பங்களாவிற்குள் சென்ற பிறகு சிரிப்பு சரவெடி. கிளைமேக்ஸ் என்ன இவ்ளோ அசால்ட்டா முடிந்துவிட்டது என எண்ண தோன்றுகிறது. வேறு என்ன செய்ய காமடி படம் தானே..

படத்தின் பாடல்கள் வேகத்தடையாக தான் உள்ளது. மொத்தத்தில் தில்லுக்கு துட்டு 3 எப்போது ஆரம்பம் என கேட்க வைக்கிறது இந்த தில்லுக்கு துட்டு 2, நோன் ஸ்டாப் காமடி கலாட்டா.

**10ம் ஆண்டு நினைவஞ்சலி**

பிறப்பு : 1968.08.11
இறப்பு : 2009.03.08

அமரர் திருமதி
**பூமிராசா லபிதா**
(ஆசிரியர்)



ஆண்டுகள் பத்து
ஓடி மறைந்ததோ
அன்பான எம்
அன்னையே
உனைக் காண ஏங்கித்
தவிக்கிறோம் நாம்.

இல.01, பாலி நகர்,
வவுனிக்குளம்.

கணவர்,
பிள்ளைகள் (கோபிநாத்,
கோகிலாத், லோஜினி)
077 074 1703

(7499)

# தீவிரவாதத் தாக்குதலுக்கு பதிலடி வழங்கப்படும்

## மோடி ஆவேசம்

"தீவிரவாதிகளை ஒழிக்க இராணுவத்துக்கு முழு அதிகாரம் அளிக்கப்படும்" என பிரதமர் மோடி பேசியுள்ளார்.

காஷ்மீர் மாநிலம் ஜம்முவில் இருந்து 78 வாகனங்களில் சுமார் 2,500 இற்கும் மேற்பட்ட சிஆர்பிஎஃப் வீரர்கள், ஸ்ரீநகர் நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். அவர்கள், புல்வாமா மாவட்டம் அவாந்திபோரா என்ற பகுதிக்கு வந்தபோது, 350 கிலோ வெடிபொருள்களை ஏற்றிக் கொண்டு எதிரே வந்த கார், சிஆர்பிஎஃப் வீரர்கள் வந்த பேருந்தின்மீது மோதியது. ஜெய்ஷ்-இ-முகமது என்ற அமைப்பைச் சேர்ந்த ஆதில் அகமது தார் என்ற நபர், 350 கிலோ எடையுள்ள வெடிகுண்டுகளை மறைத்துவைத்து, இராணுவ வாகனத்தின்மீது கொடூரத் தாக்குதல்





நடத்தினார்.

இந்தத் தாக்குதலில், இதுவரை 44 வீரர்கள் உயிரிழந்துள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 20 பேர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உலக நாடு முழுவதும் சோகத்தையும், பலத்த எதிர்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது இந்தத் தாக்குதல். தாக்குதலைக் கண்டித்து இந்தியாவில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுவருகின்றன. இந்நிலையில், "வந்தே பாரத்" புதிய ரயில் தொடக்க விழா டில்லியில் நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி கலந்து கொண்டார். புல்வாமா தாக்குதலின் காரணமாக விழா உற்சாகமின்றி இருந்தது. விழாவில் பேசிய மோடி, "இந்த கொடூரத் தாக்குதலால் மக்கள் கொந்தளிப்பில் உள்ளனர். இதற்கான உரிய விலையைத் தீவிரவாதிகள் கொடுத்தே தீர வேண்டும். கடும் விளைவுகளை அவர்கள் அனுபவிப்பார்கள். தீவிரவாதத் தாக்குதல்களால் இந்தியாவை வலுவிழக்கச் செய்ய வேண்டும் என்று நினைத்தால் அது முடியாது.


நமது அண்டை நாடு தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் தான், அவர்கள் நம்மை இந்த மாதிரியான தீவிரவாதத் தாக்குதல்கள் மூலம் தொந்தரவு செய்யலாம் என நினைக்கிறார்கள். அவர்களது எண்ணம், திட்டங்கள் ஒருபோதும் கைகூடாது. புல்வாமா தாக்குதலுக்குப் பிறகு, தீவிரவாதிகளை எதிர்க்கத் தேவையான முழு சுதந்திரமும் இராணுவத்துக்கு அளிக்கப்படுகிறது. தீவிரவாதிகளுக்கு எதிராக எங்கு, எப்போது, எந்த மாதிரியான நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பதை இராணுவமே இனி முடிவெடுத்துக்கொள்ளலாம். அதற்கான முழு சுதந்திரமும், அனுமதியும் பாதுகாப்பு துறைக்கு கொடுக்கப்படுகிறது.

இதேபோல, இந்தக் கடினமான சூழ்நிலையை அரசியலாக்க வேண்டாம் என எதிர்க்கட்சிகளைக் கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசை விமர்சிக்கும் உணர்வுகளை நாங்கள் மதிக்கிறோம். ஆனால், இந்தத் தாக்குதல் மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சூழ்நிலையில், அரசியல் கட்சியினர் ஒருமித்த கருத்துடன் இருக்க வேண்டும் என வேண்டிக்கொள்கிறேன்" என்று பேசினார். இதற்கிடையில், தாக்குதல் தொடர்பாக விவாதிக்க, டில்லியில் அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## இது நம்ம கதைகள்... 38

# கோளாறு



இலங்கையின் மொத்த சனத்தொகையில் 9 விகிதத்தினர் கேட்டல் குறைபாட்டால் அவதியுறுவதாக புள்ளிவிபரங்கள் சுட்டுகின்றன.

கேட்டல் குறைபாடு ஏற்பட பல காரணங்கள் உண்டு. மரபணு ரீதியான பாதிப்புத் தவிர, கடுமையான நோய்த் தாக்கத்தின் பாதிப்பு, விபத்துக்களின் பாதிப்பு போன்றனவும் இவ்விடயத்தில் தாக்கம் செலுத்துகின்றன. இன்றைய வாழ்வியலில் அதிக இரைச்சல்களும் இக்குறைபாட்டை ஏற்படுத்தும் பிரதான காரணியாகும்.

90 (db)டெசிபல்களுக்குக் கூடிய ஒலிச் செறிவுமிக்க ஓசையை 8 மணித்தியாலங்களுக்கு மேல் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தால் நிரந்த பாதிப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்கின்றனர் வைத்திய நிபுணர்கள். இலங்கையில் 63 டெசிபல்ளுக்கு மேலான செறிவுடைய ஒலி பெருக்கிகளை பயன்படுத்த அனுமதி பெற வேண்டுமென்று மத்திய சுற்றாடல் அதிகாரசபை கட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

நேபாளத்தின் சந்திரா பதுரி என்பவரே உலகின் விசாலமான காதுடையவர் எனக் கருதப்படுகின்றார். ஓசையை மனித காதினால் உச்சமாக 590 அடி தூரம் வரை கேட்க முடியும் என ஆய்வுகள் தெளிவுறுத்துகின்றன.

ஒரு குடும்பஸ்தர் தன் மனைவியுடன் மருத்துவரைச் சந்தித்தார். "டாக்டர் என் மனைவிக்கு 5 அடி தூரத்திற்கு அப்பால் நின்று எதைச் சொன்னாலும் கேட்குதில்லை" என்றார் கவலையுடன். அவர் மனைவியின் காதை ENT (காது, மூக்கு, தொண்டை ) நிபுணர் கவனமாகப் பரிசோதித்தார். அதில் எந்தக் குறைபாட்டையும் வைத்தியரால் இனங்காணமுடியவில்லை. "ஐயா உங்கள் மனைவியின் காதில் எந்தக் கோளாறும் இல்லை" என்றார் வைத்தியர். "இல்லை டாக்டர் நிச்சயமாக கோளாறு இருக்கிறது. அவளுக்கு தூரத்திலேயிருந்து எது சொன்னாலும் மறுமொழி சொல்லமாட்டாள்" என்றார் நம்மாள் திட்டவட்டமாக.

"சரி ஒரு பரிசோதனை செய்து பார்ப்போம் " என்றார் மருத்துவர். மனைவியை ஒரு தடுப்புக்கு மறுபுறத்தில் அமரச்செய்தார். நம்மாளை நோக்கி "முதலில் 15 அடி தூரத்தில் நின்று உங்கள் மனைவியிடம் ஏதாவது கேளுங்கள்" என்று கூறியவாறு பரிசோதனையை ஆரம்பித்தார் மருத்துவர். மருத்துவரின் அறிவுறுத்தல் படி 15 அடி தூரத்திற்கப்பால் நின்று தன் மனைவியை நோக்கி "இண்டைக்கிரவு என்ன சாப்பாடு ?" என வினவினார் நம்மாள். அவள் ஏதும் மறுமொழி சொன்னதாக இவருக்குத் தெரியவில்லை.

மறுபடி மருத்துவர் அவரை 10 அடி தூரத்தில் நின்று அதே கேள்வியைக் கேட்கப் பணித்தார். அதன்படியே கேட்டார். ஆனால் மனைவி இப்போதும் பதிலேதும் சொன்னதாக இவருக்குத் தெரியவில்லை. மீளவும் 5 அடி தூரத்தில் இவரை நிற்க வைத்து அதே கேள்வியை கேட்கச் சொன்னார் மருத்துவர். "இண்டைக்கிரவு என்ன சாப்பாடு ? " என்று கேட்டார் நம்மாள்.



"இடியப்பம் " என்று பதில் சொன்னாள் மனைவி. "பார்த்தீர்களா டாக்டர் இவளுக்கு கிட்ட நின்று கேட்டாள் மட்டும் தான் கேட்குது. அதால தான் இவளுக்கு காதில ஏதோ கோளாறு என்று உங்களிட்ட காட்ட கூட்டிவந்தேன்" என்றார் நம்மவர்.

அவரைப் பார்த்து பாரிதாபமாக சிரித்துக் கொண்டே மருத்துவர் சொன்னார் "கோளாறு உங்கள் மனைவிக்கில்லை உங்களுக்குத் தான். ஒவ்வொரு முறையும் நீங்கள் இரவுச் சாப்பாடு பற்றிக் கேட்டபோதெல்லாம் உங்கள் மனைவி இடியப்பம்... இடியப்பம்... இடியப்பம் என்று சொல்லிக் கொண்டுதானிருந்தார். ஆனால் 5 அடி தூரத்திற்குள் மட்டும் தான் உங்கள் மனைவி சொன்ன பதில் உங்களுக்கு கேட்டது. அதாவது உங்களுக்கு 5 அடி தூரத்திற்கப்பால் காது கேட்பதில்லை" மருத்துவரின் விளக்கம் கேட்டு வாயடைத்துப் போனார் நம்மாள்.

சுட்டும் விரலால் எதிரியைக்
காட்டி குற்றம் கூறுகையில்
மற்றும் மூன்றும் விரல்கள்
உந்தன் மார்பினை சுட்டுதடா.

எப்.எக்ஸ்.அன்ரன்

facebook

# கனவு காணும் உலகம்



(சென்ற வாரம் தொடர்ச்சி)

மீண்டும் தர்னியின் வீட்டிற்குப் போய் அங்கிருந்து மீண்டும் பயணத்தைத் தொடங்கலாம் என யோசித்தான். அது சரியாக அவனுக்குத் தோன்றாததால் தன் நடுவிரலையும் சுட்டுவிரலையும் நீட்டி 'இரண்டில் ஒன்றைத் தொடு' என மனதுக்குக் கட்டளையிட்டான். மனது தொட்ட வழியில் காரை வேகமாகச் செலுத்தினான். சற்றே பிசகினாலும் விதியின் வழி வீதியிலிருந்து பள்ளத்திற்குள்தான்.

வழியில் 'சீனிக் பிளேஸ்' என வயிற்றைத் தள்ளியபடி பூமிமாதா கர்ப்பிணியாகப் படுத்திருந்தாள். அதன் மேல் வாகனத்தை ஓரம் கட்டினான் தர்மு.

பிருந்தா. நான் வரக் கொஞ்ச நேரமாகும். பாதை மாறிவிட்டேன். ஜிபிஎஸ் இங்கே வேலை செய்யவில்லை" காரிற்குள் இருந்தபடி மனைவி பிருந்தாவிற்கு ரெலிபோன் செய்தான்.

சரி பரவாயில்லை. கவனமாப் பார்த்து வாங்கோ நித்திரைத் தூக்கத்தில் மனைவி ஏதோ சொன்னாள்.

சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தபடி காரிலிருந்து கீழிறங்கினான். சிகரெட் புகையுடன் போட்டியிட்டவாறு அதலாபதாளத்திற்குள்ளிருந்து பனிப்புகார் மேல் நோக்கிக் கிளம்பிக் கொண்டிருந்தது.

இயற்கையை ஒருவராலும் வெல்ல முடியாது என்பது உண்மைதான். மொபைல் போனில் நேரத்தைப் பார்த்தான். மணி நான்கு பத்து.

அன்றைய இரவு அந்த மலைப்பிரதேசத்தில் வேறு எந்த விதமான வாகனங்களையோ மனித நடமாட்டங்களையோ அவன் சந்திக்கவில்லை. இனி வாகனம் ஓடுவதில் பயனில்லை எனக் கண்டுகொண்ட அவன் விடியும்வரை காரிற்குள் இருப்பதென முடிவு செய்தான். சீக்கிரமாகவே தர்மு தன்னையுமறியாமல் உறக்கத்திற்குப் போய்விட்டான்.

விடியற்காலை வாகனங்கள் வரிசைகட்டி விரைந்து செல்லும் சத்தம் அவனைத் துயிலெழ வைத்தது. பதைபதைத்து எழுந்து சுற்றுமுற்றும் பார்த்தான். தூரத்தே வெளிச்சப்புள்ளிகள் நகர்ந்து செல்லும் காட்சி மரங்களினூடாகத் தெரிந்தது.

அநேகமாக அது ஒரு நெடுஞ்சாலையாகத்தான் இருக்க வேண்டும் முடிவு செய்தபடி வாகனத்தை ஸ்ராட் செய்து. அதன் திசை நோக்கிச் செலுத்தத் தொடங்கினான்.

வீட்டிற்கு வந்தபோது மணி ஆறாகிவிட்டது. வானம் வெளிச்சமிடத் தொடங்கிவிட்டது. இரவு என்ற ஒன்று அவனுக்கு வராமலேயே மறு உதயம். இன்னும் சிலமணி நேரங்களில் பிள்ளைகள் துயில் கலைத்து பாடசாலைக்குச் செல்ல ஆயத்தமாகி விடுவார்கள். மனைவியும் எழுந்து விடுவாள்.

ஒருவரையும் குழப்பாமல், முன் ஹோலிற்குள்ளிருந்த செற்றிக்குள் உடுப்புகளையும் மாற்றாமல் புதைந்து கொண்டார். மனைவி போட்டுத் தரும் கோப்பியின் சுவைப்பிற்காகக் காத்திருந்தார்.

ஒரு கோழித்தூக்க முடிவில் மனைவி கையில் கோப்பியுடன் நின்றார். கோப்பியை வாங்கி தர்மு உறிஞ்சிக் குடிப்பதை அவர் மனைவி ரசித்தபடி பார்த்தார்.

எங்கையப்பா போனனியள்? என்ன நடந்தது கோப்பி முடிந்ததும் தனது விசாரணையைத் தொடர்ந்தார் மனைவி.

தர்மு தனக்கு நேர்ந்த சம்பவத்தை மனைவியிடம் சொல்லத் தொடங்கினான்.

உலகத்து மக்களிடையே கைகூப்பி நன்றி தெரிவிக்கும் பழக்கம் யாரிடம் இருக்கின்றது? அதை அவள் செய்தாள். தர்னி எங்கடை இனத்துப் பிள்ளையப்பா அவள் என்ரை மகள் மாதிரி" அவள் தர்மு சொல்லும் தர்னி என்னும் அபோர்ஜின்ஸ் இனத்துப் பெண்ணின் கதையை உன்னிப்பாகக் கேட்டபடி இருந்தாள்.

சரி இரவு முழுக்க தூக்கமில்லாமல் இருந்திட்டியள். கொஞ்ச நேரம் போய்ப் படுங்கோ.

சிறிது நேரம் கண்ணயர்ந்தான் தர்மு. பின்னர் பிள்ளையளை பள்ளிக்கு அனுப்பி வைத்துவிட்டு காலை உணவு முடித்து மீண்டும் சிறிது கண்ணயர்ந்தான்.

பன்னிரண்டு மணியளவில் ரெலிவிஷன் பார்த்தான். சலிப்புடன் சனலை மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டிருந்தவன்,

பிருந்தா... பிருந்தா... ஓடிவா. வந்து இந்த நியூசைப் பார் சத்தமிட்டான் தர்மு. அவள் மெதுவாக வந்து இவருக்கு அருகில் அமர்ந்தாள். சத்தம் போடாமல் வடிவாப் பார்.

நேற்று அவன் சந்தித்த அதே பெண் தர்னி. ரெலிவிஷனில் யாருடனோ உரையாடிக் கொண்டிருந்தாள்.

உவள்தான்... உவள்தான்... என்று கண்ணாலே ஜாடை காட்டினான் தர்மு. நேற்றுப் பார்த்ததைவிட தொலைக்காட்சியில் இன்னும் அழகாகத் தோன்றுவது போல அவனுக்கு இருந்தது.

நான் எத்தனையோ ரக்சிக் காரர்களை மன்றாடினேன். ஆனால் அவர்கள் ஒருவரும் என்னை ஏற்றிக் கொண்டு போகச் சம்மதிக்கவில்லை. இரவில் எம்முடைய இருப்பிடம் வரப் பயப்பட்டார்கள். ஆசியா நாட்டைச் சேர்ந்த தர்மு என்பவர்தான் என்னை அங்கே கூட்டிச் சென்றார்.

(அடுத்தவாரம் தொடரும்)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1646

Search for people, places and things

### மஞ்சு

சோற்றுக்கு அரிசியில்லை என்றாலும் கவலைப் படமாட்டான். ஆனால் மாட்டுக்கு வைக்கோல் இல்லையென்றால் தூங்கமாட்டான் விவசாயி



### சோபி

எதிர்பார்த்தபோது கிடைக்காத எதுவும் அதற்குப் பிறகு எத்தனை முறை கிடைத்தாலும் சந்தோசம் கொடுப்பதில்லை. அன்புகூடத்தான்



### தர்சிகா

மனிதன் சிரிக்கின்ற நிமிடங்கள் பொய்யாக இருக்கலாம்... ஆனால் அழுகின்ற நிமிடங்கள் உண்மையானவை



### கிறிஸ்ரி

கோபத்தில் எது கிடைத்தாலும் வீசி எறிய எல்லோராலும் முடியும். ஆனால் அந்தக் கோபத்தையே வீசி எறிய ஒரு சிலரால் தான் முடியும்



### தீபா

எப்பொழுது நம்மை ஒருவருக்கு பிடிக்கவில்லை என்று தெரியுதோ அப்பவே அவர்களை விட்டு விலகிடனும். கூடவே இருந்தால் அவமானம் மட்டும் தான் மிஞ்சும்!



### சைலா

உண்மையாக நேசிக்கும் நெஞ்சத்துக்குத்தான் புரியும் பிரிவால் வரும் வலி என்னவென்று



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 170

# வயதானவர்கள் வாழ்வில் புரத உணவின் முக்கியத்துவம்



ஆரோக்கியமாக வாழ்வது என்பது அனைவருக்கும் பொதுவான உரிமை. இங்கு ஆரோக்கியம் சிறுவர் முதல் பெரியோர் வரை மிகவும் இன்றியமையாததுமாகும்.

வயோதிபப் பருவமானதும் எம்மிடையேயுள்ள பொதுவான ஒரு மனநிலை அவர்கள் ஆரோக்கியம் பற்றிய கவனம் சற்றுக் குறைந்துவிடுகின்றது. இது தவறானதாகும். ஒருவர் வாழ்க்கையின் பிறப்பிலிருந்து இறப்புவரை அவர்தம் வாழ்க்கையின் தரத்தைப் பேணவேண்டும். குறிப்பாக முதியவர்களில் நல்ல சுகாதாரமான ஆரோக்கியத்தைப் பேணல் என்பது மறக்கமுடியாத மறுக்கமுடியாத தேவையாகும். அத்துடன் அவர்களின் வாழ்வு சுதந்திரமாகவும் (Indepandenace) தரமானதாகவும் (Quality of life) அமைய வேண்டும்.

இந்த தரமான வாழ்க்கையினுள் உடல்நிலை பலமிழப்பது என்பது வயதானவர்களில் பொதுவாகக் காணப்படும் ஒரு விரும்பப்படாத நிலையாகும். இதற்கு முக்கிய காரணமாக அமைவது அவர்களின் தசைகள் பலமிழப்பது ஆகும். இங்கு அவர்கள் உள்ளெடுக்கும் புரத உணவின் அளவு குறைவானதாக இருப்பதே காரணமாக அமைகின்றது. எனவே இவர்களின் உணவில் அதிகளவு புரதமும் விற்றமின்களும், நுண்போசனைப் பொருட்களும் அவசியமாகின்றது.

வயதின் அதிகரிப்பாலும் உடற்றொழிலியல் மாற்றங்களாலும் இவர்களிடையே உடல் தேவைக்கு ஏற்ப் புரத வகை உணவு உள்ளெடுக்கும் அளவு குறைவாகவே காணப்படுகின்றது. இவர்கள் புரத உணவை உள்ளெடுக்கும் போது பலவிதப்பட்ட சவால்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

**அவையாவன :**

வயதுடன் ஒப்பிடுகையில் உள்ளெடுக்கும் அளவு குறைகின்றது. இந்நிலைமையை மேலும் அதிகரிப்பதற்கு காரணமாக இவர்களிடையே பசியினளவு குறைகின்றது. நாக்கின் சுவை உணரும் தன்மை, மூக்கினால் நுகரப்படும் தன்மை என்பவற்றில் மாற்றம் காணகின்றது.

தற்காலத்தில் அநேகமானோர் தனியாகவே வாழ்கின்றனர். வயதான பருவத்தில் சமைப்பதிலுள்ள அக்கறை அதிகளவு குறைந்து காணப்படுகின்றது. உணவை உண்பதில் கஷ்டம் உண்டாகின்றது. ஏனெனில் பற்களின்மை, கட்டுப்பல் பாவிக்கின்றமை, முரசு கரைதல் போன்றன காரணங்களாகின்றன. சமிபாட்டுத்தொகுதியில் ஏற்படும் மாற்றம் காரணமாகவும் உண்ணும் உணவின் அளவைக் குறைக்கின்றனர். சமிபாடடையாத நிலைமை உண்டாகின்றது. உமிழ்நீர் சுரப்புகள் குறைகின்றது. இரைப்பை சுரப்பு அளவு குறைகின்றது. உணவு அகத்துறிஞ்சும் தன்மை குறைகின்றது. குடலின் அசைவில் அதிகரிப்பு ஏற்படுகின்றது. புரத உணவுக்கூறுகள் பொதுவாக விலை உயர்வானது. இது புரத உணவுக் கொள்வனவில் பாதகமான விளைவை உண்டாக்குகின்றது.





வயதானவர்களிடையே புரத உணவு முக்கியமானது. ஏனெனில் பல காரணங்கள் சான்றாக அமைகின்றன.

**அவையாவன:** எம் உடலில் பல வகைப்பட்ட புரதங்கள் உண்டு. இவற்றின் அடிப்படை அலகாக அமைவது அமினோ அமிலங்களாகும். இவற்றினுள் உடலினால் தொகுக்கப்படக் கூடியவையும் உண்டு. வெளியிலுள்ள உணவுகளில் இருந்து உள்ளெடுக்கப்படக்கூடியவையும் உண்டு. உடலில் தசையிலுள்ளது புரதம். தசையின் தோற்றத்தைப் பேண உதவுகின்றது. "கொலாஜின்" (collagen) எனும் வடிவில் இழையங்களில் காணப்படுகின்றது. இது உறுதியான தன்மையையும் (Strength) கட்டமைப்பையையும் (Structure) கொடுக்கின்றது. உடலின் முடி, நகம் போன்றவற்றின் உருவாக்கத்திற்கு அதிகளவு பங்குகொள்வது புரதமாகும். உடலியல் தேவைக்கும் உயிர்வாழ்வதற்கு மிக அவசியமானது ஒட்சிசன்.

இதனை உடல்முழுக்க காவிச் செல்ல உதவுவது குருதியிலுள்ள ஈமோகுளோபின் (Haemoglobulin) ஆகும். இதனை உருவாக்க புரதம் அவசியமாகின்றது.

இன்னுமொரு முக்கியமான இரசாயனப் பதார்த்தம் ஓமோன் எனப்படும் பொருளாகும். இது உடலில் இரசாயன செய்தி (Chemical messengers) கடத்தலை செய்கின்றது. இதன் உற்பத்திக்கு புரதம் தேவைப்படுகின்றது.

உணவு சமிபாடடைய, அனுசேபமடைய, தசைகள் சுருங்குவதால் சக்தியை உருவாக்க எம்முடலில் காணப்படுவது நொதியங்கள் ஆகும். இவற்றின் ஒரு கூறாகக் காணப்படுவதும் புரதம் ஆகும். இன்சுலின் உருவாக்கலுக்கும் உணவின் புரதக்கூறு அவசியமானது. உடலின் நோய் எதிர்ப்புத் தன்மைக்கு காரணமாக அமைவது நிர்ப்பீடனத் தொகுதியாகும். இதனூடாக நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்க காரணமாக அமைவது பிறபொருள் எதிரி எனப்படும் ஒருவகையான உடலினுள் காணப்படும் புரத மூலக்கூறுகளால் ஆன கட்டமைப்புகளே ஆகும்.

எனவே வயதானவர்கள் இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த புரத உணவுக்கூறுகளை அதிகளவு கருத்திற்கொண்டு உண்ண வேண்டும். (நாளொன்றிற்கு 0.8g/kg என்ற அளவில் புரதம் உடலிற்கு தேவைப்படுகின்றது.) சிறிதளவு அடிக்கடி உண்ணலாம். விருப்பமான வடிவங்களில் உள்ளெடுக்க வேண்டும். ஒவ்வாமை இருப்பின் தவிர்க்க வேண்டும். எம்மிடையே எம் சூழலில் காணப்படும் பால், முட்டை, பயறு, கடலை, பருப்பு, நிலக்கடலை, சோயா போன்றவற்றிலும் மீன், இறைச்சி வகைகளிலும் அதிகளவு புரதக்கூறு உண்டு. இலகுவில் சமிபாடடையக்கூடிய வகையில் உணவு தயாரித்து உள்ளத்திற்கு உவகை அளிக்கும் வகையில் உண்ணல் வேண்டும்.

ஆரோக்கிய வாழ்வு அடிப்படைத் தேவைகளில் ஒன்று. ஆரோக்கிய வாழ்விற்கு அடிப்படையும் முழுமையானதும் ஆக அமைவது நிறை உணவு (Balance Diet) ஆகும். எனவே வயதான காலங்களில் அதிகளவு புரத உணவை உணவில் சேர்ப்போம். அனைவரும் நோயற்று ஆனந்தமாக நல்வாழ்வு வாழ்வோம்.

திருமதி. சதானந்தி நந்தகுமாரன்
சிரேஷ்ட போதனாசிரியர்
தாதியக்கல்லூரி.





பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்